225

வசந்தம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 OCT 1946
MADRAS
5-5

விய, ஆவணி
ஆகஸ்டு, 1946

JL
m211, N42vm
N46.5.5
197245

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: பம்பாய்)

தீ, ஆயுள், கப்பல், விபத்துகள்

முதலிய இன்ஷூரன்ஸ்கள் செய்யப்படுகின்றன.

தலைவர்:—**ஸர். சுனிலால் வி. மேதா.**

உபதலைவர்:—**ஸ்ரீ ஜே. ஆர். டி. டாடா.**

ஆயுள் இலாகா சம்பந்தமான விவரம்

1945-ம் வருஷத்தில் செய்யப்பட்ட புது பிஸினஸ்	ரூ. 8 கோடிக்கு அதிகம்.
1945-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரைக்கும் செய்யப்பட்ட பாலிஸிகளின் மொத்த தொகை	ரூ. 27 கோடிக்கு அதிகம்.

பொருளாதார புள்ளி விவரங்கள்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 71,21,055.
மொத்த நிதி (31-12-1945)	ரூ. 7,19,29,551.
மொத்த இருப்பு (சுமார்)	ரூ. 9 கோடி.
ஆரம்பம் முதல் கிடைத்த பிரிமியம் வருமானம்	ரூ. 24 கோடிக்கு அதிகம்.
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை	ரூ. 12 கோடிக்கு அதிகம்.

இன்ஷியூர் செய்வதற்கோ அல்லது பிரதிநிதியாக இருப்பதற்கோ சிறந்த இந்திய கம்பெனி.

சென்னை கிளை நிலையம்,
4 & 5 முதல் லைன் பீச்.

கே. கணபதி,
பிராஞ்சு மானேஜர்.

Vasantham. August. 1946.

கோயமுத்தூர்

பைனன்சிங் கார்ப்பரேஷன்

பேங்கர்ஸ்.

3 OCT 1946

ராஜ வீதி, கோயமுத்தூர்.

★ **செல்வத்தை சேகரித்து வைக்க சிறந்த வழி**

லாபம் தரும் ஏலச்சீட்டுகள்

(ரூ. 10,000; ரூ. 7,500; ரூ. 5,000; ரூ. 2,500)

நடைபெற்று வருகின்றன.

புதிய செட்டும் விரைவில் ஆரம்பிக்கப்படும்

★ சந்தாதாரர்களுக்குத் தேவையானல் செலுத்தியுள்ள

தொகையில் ரூ. 100–க்கு 90 வீதம்

கடன் கொடுக்கப்படும்.

பேங்க் சம்பந்தமான சகல வரவு சிலவுகளும் நடத்தப்படும்.

விவரங்களுக்கு:—

N. R. லிங்கப்ப கவுடர்,

மேனேஜிங் பார்ட்டனர்,

கோயமுத்தூர் பைனன்சிங் கார்ப்பரேஷன்,

கோயமுத்தூர்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

[ஸ்தாபிதம் : 1906]

தமிழ் நாட்டின் தலை சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி. மக்கள் நல்வாழ்வே அடிப்படை லட்சியமாகக் கொண்டது. இன்ஷூர் செய்வதற்கோ, பிரதிநிதியாக இருப்பதற்கோ ஏற்ற கம்பெனி.

பொருளாதார புள்ளி விவரங்கள்:

1945-ல் புது பாலிஸிகளுடைய பிரிமியம்	17,48,590
பழைய பாலிஸிகளின் பிரிமியம்:	48,04,520
இன்ஷூர் செய்தவர்களின் நடைமுறையிலிருக்கும் மொத்த தொகை	13,98,54,180
மொத்தம் செலுத்தப்பட்ட தொகை:	1,16,24,880

இந்தியா வெங்கிலும், வெளியிலும், கிளைக் காரியாலயங்களும் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

எஸ்பிளனேட், சென்னை.

கோவை கிளை ஆபீஸ்:

அவினாசிரோடு :: கோயமுத்தூர்


நீர்வளம் நிலவளம் நிறைந்த வங்காளத்தில் கோடையிலும் குளிரிலும் எல்லோரும் விரும்புவது தேனீரே.
இந்தியா முழுமையும் எல்லோரும் ப்ரூக் பாண்டை விரும்புவதன் காரணம் அதன் புத்தப்புதுமையே.
ப்ரூக் பாண்ட்
" இரு இலையும் ஒரு மொட்டும் "

இண்டோ - கமர்ஷியல்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: மாயவரம்

1946-ஞ ஜூன்-மீ 30-ந் தேதிய

பொறுப்புகள்

		ரூ.	அ.	பை.
கோரப்பட்டுச் செலுத்தப்பட்ட மூலதனம்		18,75,000	0	0
க்ஷேம நிதிகள்		5,66,662	2	6
வரிகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது		1,77,905	I5	0
டிபாஸிட்டுகள்:				
பிக்ஸட், கரண்ட், சேவிங்க்ஸ் பாங்க், மாதவாரி டிபாஸிட், கியாஷ் ஸர்டிபிகேட், சிப்பந்திகள் ஜாமீன் மற்றும் இதர பொறுப்புகள்		4,47,47,339	2	7
பாங்குகளுக்குக் கொடுபட வேண்டியவை (சர்க்கார் கடன் பத்திரங்களின் ஈட்டின் பேரில்)		20,00,000	0	0
பெற்றுக் கொள்ளாத டிவிடெண்டுகள்		6,116	2	0
வசூல் பில்கள்		17,38,260	6	6
கமர்ஷியல் கிரெடிட்கள்		1,59,400	0	0
பிராஞ்ச் அட்ஜஸ்ட்மெண்டுகள், கொடுபட வேண்டிய டிராப்டுகள் தந்திகள்		4,06,380	6	10
சில்லரை இனங்கள்		87,673	4	9
31-12-45 கணக்கு விவரப்படி பாக்கி	3,588 7 *1*			
இவ்வரை வருஷத்திய நிகர லாபம்:	***4,70,159 10 0***			
		4,73,748	1	1
ஆக மொத்தம் ரூ.		5.30,18,261	2	7

P. S. சுப்ரமணிய ஐயர் அண்ட் கம்பெனி — **K.** லக்ஷ்மணன்

ரிஜிஸ்டர்ட் அக்கௌன்டன்ட் அன்ட் ஆடிட்டர்ஸ் அக்கௌன்டன்ட்

மதராஸ், ஜூலை 24, 1946.

பாங்க் லிமிடெட்

சென்ட்ரல் ஆபீஸ்: சென்னை

சுருக்கமான கணக்கு விபரம்

ஆஸ்திகள்

	ரூ.	அ.	பை
கடன்கள், காஷ் கிரெடிட், பில்கள், டிராப்டுகள், புரோநோட்டுகள், இதர அட்வான்சுகள் முதலியன	2,36,92,918	3	2
தற்சமயமாவது, எப்பொழுதாவது, டைரக்டர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள், அட்வான்ஸ்கள்	Nil		
பாங்கிக் கட்டிடங்கள்	2,08,179	6	0
இரும்பு பெட்டிகள், மரதளவாடங்கள்	84,540	7	5
கைவசமுள்ள புத்தகம் ஸ்டேஷனரி சாமான்கள்	49,340	10	1
வசூல் பில்கள்	17,38,260	6	6
கஸ்டமர்களின் பொறுப்புகள்	1,59,400	0	0
சில்லரை இனங்கள்	4,89,639	9	9
முதலீடுகள்			
சர்க்கார் பத்திரங்கள், ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனி பங்குகள், ஷெட்யூல் பாங்கியிலுள்ள சிப்பந்திகள் ஜாமீன்	1,55,48,723	14	3
முதலீடுகளில் சேர்ந்துள்ள வட்டி	2,05,771	6	0
கைவசமுள்ள ரொக்கமும், பாங்கிகளிடம் இருப்பும்	1,08,41,487	3	5
ஆக மொத்தம் ரூ.	5,30,18,261	2	7

T. R. வெங்கடராம சாஸ்திரி, C. I. E.
சேர்மன்

S. N. N. சங்கரலிங்க ஐயர்
மானேஜிங் டைரக்டர்

டைரக்டர்கள்

R. விஸ்வநாதன் **K.** சிவஸ்வாமி

R. S. A. சங்கர ஐயர் **V.** வெங்கடராமன்

Aug., 1946.

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஹு கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

வசந்தம்

மலர் 5	விய ஹூ ஆவணி மீ	இதழ் 5

பொருளடக்கம்

மலர் மணம்	...	...	1
உண்டி சுருங்குதல்	...	டாக்டர் திருமூர்த்தி	2
ஏக்கத்தின் குரல்	...	மு. பெரியசாமி	5
மனப்போக்கு	...	பெ. தூரன்	6
விஷப் பரீட்சை	...	எம். எஸ். ஹமீத்	11
அன்புக் கடிதம்	...	'தீபன்'	20
நீரோட்டம்	...	ஆர். கே. விசுவநாதன்	25
வெண் புரு	...	கே. சி. எஸ். அருணாசலம்	29
கலைக் கோயில்	...	சுத்தானந்தர்	41
விதியும் வீணையும்	...	எச். விஜயகுமார்	52
பக்திப் பரவசம்	...	ஸி. பி. பொன்னுசாமி	62
குட்டித் தெய்வம்	...	டி. சி. ராமசாமி	65
புத்தக ஆராய்ச்சி	...	'உமாபதி'	69
அறிவு	...	'பிரம்மம்'	70
தவழும் ஓடம்	...	'விசாகன்'	72
ஏசுவின் இதயம்	...	'ஜோ'	73
அன்னக் குஞ்சு	...	எஸ். பி. மாதையன்	75
உழவன்	...	ஜாய்ஸ் பொன்னையா	78
எழிற்கு எவர் இணையே	...	ச. து. சு. யோகி	80
பாவத்தின் சின்னம்	...	கோமதி சுவாமிநாதன்	81

'வசந்தத்'தில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனை.

1946-ல் வெளிவரும் சித்ரகலாவின் அற்புத சித்திரங்கள்.

1. ஸ்ரீ குமரகுரு
புண்ணிய புராண சித்ரம்
தமிழில்
டைரக்ஷன்: ஜோதிஷ் ஸின்ஹா

வெகு விரைவில் திரைக்கு வருகிறது.

தயாராகின்றன!

2. அசோகமாலா
சரித்திரக் கதை.
தமிழிலும் சிங்களத்திலும்
டைரக்ஷன்: ஜோதிஷ் ஸின்ஹா

3. அல்லி
பழந் தமிழ்க் காவியம்.
தமிழில்
டைரக்ஷன்: ஆர். பிரகாஷ்

4. தாய் நாடு
சமூக சித்திரம்.
தமிழில்
டைரக்ஷன்: டி. எஸ். மணி

விபரங்களுக்கு

சித்ரகலா மூவிடோன் லிமிடெட்,
திருப்பரங்குன்றம், மதுரை.

வசந்தம்

கௌரவ ஆசிரியர்கள்

டி. கே. சிதம்பரநாத முதலியார் | சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

மலர் மணம்

“கலைக்கோயில்” இந்த இதழோடு பூர்த்தியாகிறது. ‘கலைக் கோயி’லைப் பாராட்டி எத்தனையோ ரசிகர்கள் அடிக்கடி கடிதம் எழுதி வந்தார்கள். நாவல் பிரியர்களுக்கு அது ஓர் நல்விருந்தாக அமைந்திருந்தது. சுவாமிஜியின் எழுத்திலுள்ள மந்திர சக்தியால் ‘கலைக் கோவிலு’க்கு அபரிமிதப் பாராட்டுகள் கிடைத்து வந்தன. அத்தகைய ஆனந்தத்தை அளித்த சுவாமி சுத்தானந்தர் அவர்கள் மேலும் இலக்கியத்தின் பல துறைகளில் “வசந்தம்” வாசகர்களுக்கு மகிழ்வூட்டுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்த இதழில் “பாப்பா கதை” ஒரு விசேஷ அம்சம். பாப்பாக்களுக்கும் பாலர்களுக்கும் அது பரிபூரண ஆனந்தத்தை அளிக்கும்.

கவிதைகளும் நாடகங்களும் நிறையத் தந்திருக்கிறோம். ‘தமிழ்க் குமரி’ கவிஞர் ச. து. சு. வின் பாடலும், இளம் கவிஞர்கள் பாடலும், சோலையிலே பூத்திருக்கின்றன!

நாடகாசிரியர் கே. சி. எஸ். பறக்க விடும் “வெண்புறு” எங்கோ எட்டாத ஒரு கனவுலகுக்கே எழிலோடு பறந்து செல்கிறது! அறிவுச் சுடரைத் தூண்டும் கதை, கட்டுரைகள் என்றும் போல் மலர்ந்துள்ளன.

அடுத்த மாதத்திலிருந்து புதுத் தொடர்கதை ஆரம்பமாகிறது. பெயர், நாவலாசிரியரின் பெயர், எல்லாமே அடுத்த இதழில் பாருங்களேன்!

— ஆசிரியர்

உண்டி சுருங்குதல்

ராவ்பகதூர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி

உணவு நெருக்கடியை சமாளிக்க சர்க்கார் பிரசாரம் செய்வது போல் நான் ஒன்றும் செய்ய வரவில்லை. நூற்றில் படிக்கத் தெரிந்தவர் பத்துப்பேர்கூட கிடையாது என்று இருக்கும் நமது தேசத்தில் இந்தப் பத்திரிகைகள் பிரசாரத்தால் யாருக்குப் பலன்? பத்திரிகை முதலாளிகளுக்குத்தான். மேலும் நம் தேசம் சுபீக்ஷமாக இருந்த காலத்திலும், வயிறு ஆர, தினம் ஒரு வேளையாவது உணவு கொள்ளுபவர்களின் தொகை மிகக் குறைவு. பஞ்சம் இல்லாமற்போனலும், அரைப் பட்டினியாகத்தான் பெரும்பாலும் இருந்து வருகிருர்கள். "லங்கணம் பரம ஔஷதம்" என்று பண்டிதர்கள் சொல்லி கொண்டும், அந்த முறையை அனுஷ்டித்துக் கொண்டும் வரும் தேசம் நமது. இங்கே பெருவாரியாக ஜனங்கள் மடிவது உணவுக் குறைவாலும், சத்தில்லாத உணவாலும், அதனல் உண்டான நோய் நொடிகளாலும். ஆகையால் உணவைக் குறைக்க நம்மிடம் பிரசாரம் தேவையில்லை.

"உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" — என்று ஔவைப் பிராட்டி 'கொன்றை வேந்தன்' என்ற நீதி நூலில் போதித்திருக்கிருர். இந்த வாக்கியத்தின் அர்த்தத்தை சற்று ஆராய்வோம். 'உண்டி' என்ருல் 'உணவு' என்றும், 'சுருங்குதல்' என்பதை 'குறைதல்' என்றும் கொண்டு, 'உணவு குறைதல் பெண்களுக்கு அழகாகும் என்பதாக இந்த வாக்கியத்திற்கு அர்த்தம் எழுதியிருக்கிருர்கள் தமிழ்ப் பண்டிதர்கள். மிதமாக உண்பது மாதர்களுக்குச் சிறப்பு என்று ஔவைப் பிராட்டி தன் பெண் இனத்தவருக்கு மாத்திரம் போதிப்பானேன்? மிதமாக உண்பது நல்லது என்று பொதுவாக ஆண், பெண் இரு தரத்தார்க்கும் அவரே போதனை செய்திருக்கிருரே! "மீதூண் விரும்பேல்" என்று 'ஆத்திச் சூடியிலும்' "வளவனயினும் அளவறிந்து அழித்து உண்" என்று 'கொன்றை வேந்தனிலும்' பொதுப்படையாக அறிவுறுத்தி இருக்கிருர்.

இப்படி இருக்க பெண்களுக்கு மாத்திரம் 'கொன்றை வேந்தனில்' வேறு நீதிகள் குறிப்பிட்டிருக்கிருராபார்க்கலாம். "காவல்தானே பாவையர்க்கு அழகு" "துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு" "தூற்றும் பெண்டிர் கூற்று எனத்தகும்" "பேதமை என்பது மாதர்க்கணிகலம்" என்ற போதனைகள் கொண்ட வாக்கியங்கள் மாதர்களுக்கே கூறப்பட்டிருக்கின்றன.

சாப்பாட்டைக் குறைந்த அளவில் சாப்பிடுவது பெண்டிற்கு மாத்திரம்தானு நலம்? புருஷர்கள் இந்த விதிக்கு விலக்கா? — இப்படி இனத்தைப் பிரித்து ஒரு பொதுப்படை உண்மையை ஔவை எடுத்து உரைத்திருக்கமாட்டார்.

"உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு என்பதற்கு வேறு அர்த்தம் ஏதாவது பொருந்துமோ என்பது ஆராயத் தக்கது. மாதர்களுக்காகச் சொன்ன அறிவுறை இது. 'சுருங்குதல்' என்று பாடம், 'சுருக்குதல்' அல்லது 'அழகு' என்று பதப்பிரயோகம் செய்திருக்கிறார் ஔவை. 'அழகு' என்ற பதம் அழகைத்தான் குறிக்கிறது. 'சிறப்பு' என்கிற அர்த்தத்திலாவது 'நன்மை பயப்பது' என்ற அர்த்தத்திலாவது கொள்ளக்கூடாது.

ஆடவர்களைவிட மாதர்கள் தான் சிருஷ்டியிலும் அழகு அதிகப்படியாகப் படைக்கப்பட்டவர்கள். லளிதகலைகளில் அவர்கள் தான் மேம்பட்டவர்கள். இயற்கை அழகையும் செயற்கை அழகுடன் கலந்து அனுபவிக்க ஆசை கொண்டவர்களும் அவர்களே. தங்களுக்கு அழகு செய்து கொள்ளச் சலியாதவர்கள்; அழகைத்தேடிச் செல்பவர்கள்; அழகுராணிகளாக பிறர் கண்முன் விளங்க ஆசை கொள்ளுபவர்கள்; கணவர்களின் அன்பைத் தங்கள் அழகால் அதிகரிக்க விரும்புபவர்கள்; அதைக் கொண்டு சொக்குப் பொடி போட்டு மயக்கம் கொடுப்பவர்கள்; "யாரே அழகுக்கு அழகு செய்வார்?" என்ற வாக்கியம் முற்றும் உண்மையானது அல்ல என்று தங்களை அலங்கரித்துக் கொண்டு செயலில் நிரூபிக்க சளைக்காதவர்கள். ஆகவே, அழகை மோகிப்பவர்கள் ஸ்திரீகள். அவர்களிடம் காதலோ, மோகமோ கொள்ளுபவர்கள் ஆடவர்கள். அழகிலே குளித்து, அழகைப்பூசி அழகாக நடக்க ஆசை கொண்டவர்கள் மாதர்கள். எவ்வளவு நேரம் தங்களை அலங்கரித்துக் கொள்ளுவதில் போக்குகிறார்கள்!

ஆகாரத்தை சுருக்கிக் கொள்வதனால் மட்டும் அழகு ஏற்பட்டு விடாது. உண்டி அதிகம் குறைந்தால் முகமும் வாடிவிடும், தோலும் சுருங்கும், உடல் நலமும் குன்றும், நோயும் உண்டாகும், இருந்த கொஞ்ச வசீகரத் தோற்றமும் பறந்தோடிப்போம்.

'உண்டி' என்ற வார்த்தைக்கு 'உணவு ஏற்றுக் கொள்ளும் பை' என்பது அர்த்தமாகக் கொள்ள வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக நாம் பணமோ காசோ சேர்க்க 'உண்டி'யை (உண்டியல்) உபயோகப் படுத்துகிறோம். சாதாரணமாக இரைப்பை இருக்கும் உடல் பாகம் முழுவதையும் 'வயிறு' என்றுதான் சொல்வது வழக்கம். அந்தப் பாகம் பெருத்தால் தொந்தி போட்டு விட்டதாக சொல்லப்படும். அமிதமான உணவு கொள்வதால் ஊளைச்சதையும், தொந்தியும் உண்டாகி விடுகிறது. ஆண்களே தொந்தி போட்டு விட்டால் அவலக்ஷணரூபங்களாக மாறி விடுகிறார்களே; பெண்களுக்கு ஊளைச் சதையால் வயிறுமடிப்புகள் உண்டாய் விட்டாலும்கூட சகிக்க மாட்டார்கள். பருத்த தொந்தி போட்டு விட்டால் கேட்பானேன்? கர்ப்பிணிகளாக இருக்கும் பொழுது வயிறு தள்ளியிருக்கும், அதைத்தான் சகிப்பார்கள். குழந்தை பெற்றவுடன் கூடிய சீக்கிரம் வயிறு பழைய ஸ்திதிக்கு வரவேண்டும் என்றுதான் நினைப்பார்கள். உண்டி (வயிறு) சுருங்குதல்தான் அழகு என்பது அவர்களுக்குத் தெரியும். பீப்பாயைச் சுற்றி சேலை கட்டிய மாதிரி தோற்றமளிக்க விரும்ப மாட்டார்கள்.

பெண்களின் இடை அழகைப் பற்றிப் பாடாத கவிகள் இல்லை. அதைப் பல மாதிரியாக பாராட்டி இருக்கிறார்கள். இடை உண்டோ இல்லையோ என்ற சந்தேகம் அடைகிறார்கள். 'உருவோ, அருவோ' என்ற ஐயம் ஏற்பட்டு விடுகிறதாம். இடை சிறுத்து இருப்பது தான் அழகு; பெருத்து இருப்பது அல்ல. 'துடி இடை' 'கொடியிடை' 'பிடி இடை' என்று வர்ணிக்கிறார்கள். வயிறு உள்ளடங்கி மெத்தென்று இருக்க வேண்டுமாம். அதை ஆலிலைக்கு உவமித்து இருக்கிறார்கள். பூங்கொடிக்கு மாதர்களை உவமிப்பது சகஜம். இடையின் நெளிவும் மென்மையும் வசீகர சக்தி வாய்ந்தது. சிறுத்த இடையே போற்றுதலுக்கு உரியது.

உணவு பெருத்தால் உண்டியும் பெருகும்; ஊளைச் சதையும் தொங்கும்; தொந்தியும் துருத்திக் காட்டும்; அவலக்ஷணம் கூத்தாடும். பெண்களுக்கு இந்த நிலைமை வரக் கூடவே கூடாது. ஆகையால், முக்கியமாகப் பெண்டிர் உண்டி (வயிறு) சுருங்கி இருக்கும் முறைகளை அனுஷ்டித்து வந்தால், அழகுத் தெய்வம் அவர்களை எப்பொழும் அழகாக வைத்துக் காப்பாற்றுவாள். இதுதான் ஔவையின் போதனையாக இருக்க வேண்டும், என்று என் சிற்றறிவுக்குத் தோன்றுகிறது. என்னுடைய வியாக்கியானம் சரியா, இல்லையா என்பதை இந்தக் கட்டுரையை வாசிக்கும் நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

'உண்டி'யைப்பட்டினி போட்டு 'சுருக்கும்'படி சொல்லவில்லை. அளவு அறிந்து உண்பதால் உண்டி (வயிறு) இயற்கையாகவே 'சுருங்கி' இருப்பதுதான், பெண்களுக்கு அழகைக் கொடுப்பது என்று ஔவை அனுபவத்திலிருந்து சொல்லியிருக்கிறார். ஆண்மக்களின் மனத்தின் ஆழத்தையும்கூட ஊடுருவிக் கண்டவள் அல்லவா அந்தப்பாட்டி? உலகத்தில் உள்ள அழகையெல்லாம் கவிஞன் கண் கொண்டு ரஸித்தவள் அல்லவா அவள்? எல்லோருக்கும் பாட்டியாக சிரஞ்சீவித்வம் பெற்றவள் நமது தமிழ் நாட்டு மாது சிரோமணி ஔவைப்பாட்டி.

★

ஷாவின் பதில்

ஷாவிற்குக் கிடைத்த விருந்துக்கான அழைப்பிதழில் "………சீமாட்டி வியாழக்கிழமை மாலை நாலுமணி முதல் ஆறுமணி வரை தம் வீட்டில் இருப்பார்!" என்று எழுதப் பட்டிருந்தது.

அழைப்பிதழ் அடியிலே, "மிஸ்டர் பெர்னுட்ஷாவும் அவ்வண்ணமே!" என்றெழுதி விட்டார்.

ஏக்கத்தின் குரல்

மு. பெரியசாமி

(1)

சன்னல் வழி உன்முகத்தைக் காட்டிக் காட்டி
சல்லடையாய்ச் செய்து விட்டாய் என்உள் ளத்தை;
புன்னகையால் என்னுடனே ஒருசொற் பேசி
போதமெலா மூட்டிவிடில் புவனம் போமோ?

(2)

கண் கடையை என் திசையில் பாய விட்டுக்
கருத்தழித்தாய்; ஏக்கத்தில் தள்ளி விட்டாய்;
பண்கொழிக்கும் இதழ் திறந்து ஒருசொற் பேசிப்
படருகின்ற துயரொழித்தால் பார்தான் போமோ?



(3)

நிறைகிணுய் நிம்மதியோ டிருந்த வாழ்வில்
நின் நினைவுக் கல்லெறிந்து குழப்பம் செய்தாய்;
குறை தவிர்க்கக் கிள்ளைமொழி ஒன்று சொன்னல்
குவலயமே தீய்ந்து பெருங் குறையுண் டாமோ?

(4)

மின்னிவிட்டாய், என்வழியில்; இசைப் பெருக்காய்
மேவி விட்டாய்; உன்மனத்தை விரவி விட்டாய்;
என்னிதயத் துறைந்து விட்டாய். அந்தோ எந்தன்
ஏக்கத்தின் குரல் கேட்பாய், இன்பம் சேர்ப்பாய்!

மனப் போக்கு

[பெ. தூரன்]

மனிதனுக்குத் தனிப்பட்ட ஒரு விசேஷ சக்தி இருக்கின்றது. அது என்ன என்று யோசிக்கும் போது அந்த யோசிக்கும் சக்தியேதான் அது என்று ஏற்படுகிறது. ஆம், மனிதனுடைய தனிப் பெருமை அவனுக்குள்ள சிந்தனை சக்திதான். ஆகையால் அதை எவ்வளவுக்கு மனிதன் அபிவிருத்தி செய்து கொள்ளுகிறானே அவ்வளவுக்கு அவன் மேம்பாடடைகின்றான்.

மனிதனுடைய ஆற்றல்களை நன்கு மலரும்படி செய்ய வேண்டுமானால், குழந்தைப் பருவத்திலேயே மனிதனுடைய பிற்கால வாழ்க்கையின் போக்கு நிர்ணயமாகிவிடுகிறது என்று மனஸ்தத்துவ அறிஞர்கள் கண்டிருக்கிறார்கள். அந்தரங்க உள்ளத்தைப் பற்றி முதன் முதலாக ஆராய்ந்த சிக்மண்ட் விராட் (Sigmend Frued) என்பவர், 'ஐந்து வயதிற்குள்ளேயே மனிதன் தனது பூரண அமைப்பையும் அநேகமாகப் பெற்று விடுகின்றான்' என்கிறார். பல திறப்பட்ட அபிப்பிராயங்களுடைய மனஸ்தத்துவர்களும் இந்த விஷயத்திலே பொதுவாக ஒரே மாதிரியான எண்ணங் கொண்டிருக்கிறார்கள். இளம் பிராயத்திலே மனிதனுடைய வாழ்க்கையின் முழு உருவம் பெரும் பான்மையும் அமைந்து விடுகிறது என்பதுதான் அவர்களுடைய முடிவு. ஆகையால் அந்தப் பருவத்திலேயே அடக்கி ஒடுக்கப்படாது நன்கு மலர்வதற்கு வேண்டிய சௌகரியம் அளிக்கப்பட்ட ஆற்றல்களே சிறந்து மேலோங்கும். சிறுவர்களுடைய மனப்போக்கு, சிந்தனை சக்தியும் இந்த விதிக்கு மாறுபட்டதல்ல. இளம் பிராயத்திலிருந்தே தானாகவே எண்ணிப் பார்க்கும் திறமையை வளரும்படி செய்யவேண்டும். அப்பொழுதிருந்தே அதை அடக்கி நசுக்கிவிட்டால் மேலோங்குவதற்கு வேண்டிய சுதந்திரம் அளிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தான் மனிதனுக்கு விசேஷமாக வாய்ந்துள்ள சக்தி அதன் இயல்பான முழு மலர்ச்சியடையும்.

சிறுவனுக்கு அவனுடைய வயதிற்கேற்றவாறு சிறு விஷயங்களைப்பற்றிச் சொந்தமாக எண்ணிப்பார்க்க சந்தர்ப்பமும், உரிமையும் இருக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் பெரியவர்களுடைய எண்ணத்தையும், தீர்மானத்தையுமே சிறுவன் ஏற்றுக்கொள்ள நேரிட்டால் அவனுக்குத் தனது சொந்த சக்தியை விரிவடையச் செய்து கொள்ளச் சமயமேற்படாது. உடல் உறுப்புகளையும் பிற ஆற்றல்களையும் பயிற்சியால் திடப்படுத்துவது போல சிந்தனை சக்தியையும் பயிற்சியாலேயே திடப்படுத்த வேண்டும்.

சிறு குழந்தை தான் பார்க்கின்ற பொருள்களைப் பற்றியும் செய்கின்ற காரியங்களைப் பற்றியும்தான் முக்கியமாக எண்ணிப் பார்க்க முடியும். கொஞ்சம் வயது வந்த சிறுவர்கள் சிக்கல் அதிகமில்லாத லேசான விஷயங்

களைப் பற்றி யோசித்து முடிவு செய்யக்கூடும். ஆனல் சத்தியம், கொல்லாமை என்றிப் படிப் பட்ட நுண்மை வாய்ந்த விஷயங் களைப் பற்றிச் சிந்திப்பது சிரமம். இங்கு நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய தென்ன வென்ருல் குழந்தைப் பருவத்தி லும் அதற்கேற்றபடி எண்ண மிடும் திறமை உண்டு; ஆதலால் அதற்கு வேண்டிய சமயமும் சுதந்திரமும் அளிக்க வேண்டு மென்பதே.

சிறுவர்களுக்குச் சுயேச்சை யாகச் சிந்தனை செய்யச் சமய மளிப்பதுடன் அவர்கள் வெளி யிடும் எண்ணங்களுக்கும் மரி யாதை காண்பிக்க வேண்டும். சிறுவன் உற்சாகத்தோடு ஒரு யோசனை சொல்லுகிருன். உடனே 'ஆகா நீ ரொம்ப பெரிய மனிதன். யோசனை சொல்ல வந்து விட்டாய்' என்று அலட்சியமாக பேசினல் அவன் மனம் சுருங்கிப் போய்விடும். பிறகு அவன் தானுக எண்ணமிடவும் பின் வாங்குவான். அன்போடும், அனு தாபத்தோடும் அவனுடைய யோ சனையை ஏற்றுக் கொண்டு ஊக்க மளிக்க வேண்டும். அதிற் குறை பாடிருந்தால் நயமாக அதை மாற்றிக்கொள்ள உதவலாம்.

மேலும் சிறுவர்கள் உலகமே வேறு; அவர்களுடைய எண்ணங் களும் தனிப்பட்டவையே; அவற் றைப் பெரியவர்கள் மனப் போக் கோடு வைத்துச் சீர் தூக்கிப் பார்க்கலாகாது என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக நாம் சிறு வயதிற் கொண்டிருந்தே மனப் போக்கை மறந்து விடுகின்ருேம் அப்படி மறந்து விட்டு, இயல் புக்கு மாருகப் பெரியவர்களின் மனப் போக்கைச் சிறுவர் களிடம் எதிர்பார்க்கின்ருேம்.

திருஷ்டாந்தமாக ஒரு சிறிய சம்பவத்தை இங்கு எடுத்துச் சொல்லுகிறேன், கேளுங்கள். ஒரு சமயம் பல குழந்தைகள் சித்திரம் வரைந்து கொண்டிருந் தார்கள். எல்லோரும் தமதிஷ்டம் போல ஏதாவது படம் போட் டார்கள். ஒரு குழந்தை ஒரு பெரிய எருமையின் படம் வரைந் தது. அது அதோடு நின்றுவிட வில்லை. அந்த எருமைக்கு பக்கத் திற்கு இரண்டிரண்டாகச் சிறகு களும் வைத்து விட்டது. சித்திரம் இயற்கைக்கு மாறு பட்டிருக் கிறதே என்று ஆசிரியர்க்குக் கோபம். ஆனல் அந்தக் குழந் தையோ தூங்கி மெதுவாக அசைந்து நடக்கும் எருமை, வேக மாக ஆகாயத்தில் பறக்க வேண் டும் என்று எண்ணுகிறது.

மேலும் குழந்தைக்குப் பல பொருள்கள் தோன்றும் விதம் வேறு; பெரியவர்களுக்கு அவை தோன்றும் விதம் வேறு. மரப் பாச்சிக் குழந்தைக்கு ஒரு குழந் தையாகவே உணர்ச்சிகளைஎழுப்பு கின்றது. ஒரு குச்சியைக் குதிரை எனப் பாவித்து சிறுவன் அதில் சவாரி செய்யும் பொழுது அக் குச்சி அவனுக்குக் குதிரை போன்றே ஆகிவிடுகிறது. இம்மா திரி சிறுவருடைய உள்ளத்தில் எழும் எண்ணங்கள் வேருனவை என்பதை நாம் நன்கு ஞாபகத் தில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த எண்ணங்கள் நமது எண் ணங்களுடன் பொருந்தவில்லையே என்பதற்காக அவற்றை அலட் சியம் செய்யலாகாது. குழந்தை எப்பொழுதுமே குச்சியைக் குதிரையாகப் பாவித்துக் கொண் டிருக்க வேண்டும் என்பதல்ல;

குழந்தை வயசாக ஆக அவ்வாறு எண்ணிக்கொண்டு இருக்காது. நான் இங்கு எடுத்துக் காட்ட விரும்புவதென்ன வென்றால் சிறுவனின் மனப்போக்கு வேறாக இருப்பதால் அதைக் கட்டுப்படுத்தி அடக்கக் கூடாது என்பது தான். சிறுவனின் மனப்போக்கு அவனுடைய வயசின் இயல்புக்குத் தக்கவாறு சுயேச்சையாக வளர்ந்து வந்தால்தான் பெரியவனாகின்ற காலத்தில் பூரணமலர்ச்சியடைய முடியும்.

சாதாரணமாக மனிதன் சமூகத்தையும் சூழ் நிலையையும் அனுசரித்து தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றான். ஓரளவிற்கு அவற்றைத் தன் இஷ்டப்படி மாற்றி அமைக்கவும் முயல்கின்றான். பெரும்பாலோர் சமூகத்தை அனுசரித்தே நடந்து கொள்வார்கள். ஆனால் உறுதியான எண்ணங்களுடைய சிலர் சமூகத்தைத் தமது எண்ணங்களுக்கேற்ப மாற்றி அமைக்க முயலுகிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் உயர்ந்தவையாக இருந்தால், அவை சமூகத்தின் முன்னேற்றத்திற்கே காரணமாய் விடுகின்றன. அப்படிப்பட்ட சிந்தனையாளர்களால் உலகம் நன்மை யடைகின்றது. சிந்தனா சக்தியை இளம்பிராயம் முதற் கொண்டே தடை செய்யாது மலரும்படி செய்வதாலேயே இது சாத்தியமாகின்றது.

ஆனால் எல்லோரும் சமூகத்தையே மாற்றி யமைக்கக் கூடிய சிந்தனையாளர் ஆகிவிட முடியாது. இருந்தாலும் சொந்த எண்ணங்களுக்கும், ஆலோசனைக்கும் மரியாதை கொடுத்துச் சிறுவர்களை வளர்த்தால் அவர்கள் பிற்காலத்திலே கண்மூடித்தனமாக எதையும் நம்பிக்கொண்டு காரியம் செய்யாமலிருப்பார்கள். கவி ரவீந்திர நாத் தாகூர் சொல்லுகிறார், 'சிந்தனா சக்தி யானது பழைய மூடப் பழக்க வழக்கங்கள் என்னும் பாலைவனத்திலே மறைந்து விடாது, மேலோங்கி நிற்கும் உலகம் வேண்டும்' என்று. பரம்பரைப் பழக்கங்கள் நல்ல தானாலும் சரி, கெட்டதானாலும் சரி நம்மை இறுகப் பிடித்துக் கொள்கின்றன. அவற்றையெல்லாம் நமது அறிவைக் கொண்டு அலசிப் பார்த்துப் பயனுள்ளவைகளை வைத்துக் கொண்டு மற்றவைகளைக் களைந்தெறியும் துணிவு நமக்கு உண்டாக வேண்டும். அவ்வாறுண்டாக வேண்டுமானால் சுயேச்சையாக எண்ணிப் பார்க்கும் பயிற்சி சிறுவயது முதற் கொண்டே போற்றி ஆதரிக்கப் பட வேண்டும்.

மேலும் வாழ்க்கையிலே மனிதனுக்குப் பல பிரச்னைகள் உண்டாகின்றன; பல நெருக்கடிகள் ஏற்படுகின்றன. அப்பொழுதெல்லாம் அவன் தானாகக் காரியம் செய்ய வேண்டும் அவனுடைய ஆலோசனையைப் பொறுத்துத் தான் அவனுக்கு வாழ்க்கையின் வெற்றியோ தோல்வியோ இருக்கின்றது. பெரியவனானவுடன் திடீரென்று இந்த ஆலோசனைத் திறமையும், தனது ஆலோசனையிலே நம்பிக்கையும் உண்டாகி விடுமா? முடியாது. சிறு வயதிலிருந்தே அந்த சக்தி தடங்கலில்லாது மலர்ந்து வர வேண்டும் என்பது இதனாலும் விளங்குகின்றதல்லவா?

இன்று உலகத்திலே பெரும்பாலான மக்கள் சொந்தமாகத் தாங்களே ஒரு விஷயத்தைப் பற்றி எண்ணமிட்டு முடிவுக்கு வர நினைப்பதில்லை. வேறு யாராவது ஒருவர் அதைப்பற்றிச்சொல்வதை

அப்படியே ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இருக்கின்றார்கள். ஏனென்றால் சிந்தனை செய்வதற்குச் சிரமம் எடுத்துக் கொண்டாலும் திடீரென்று அந்தப் பழக்கம் ஏற்பட்டு விடுவதில்லை. அதனால் அவர்கள் தங்களுக்கு நம்பிக்கையுள்ள ஒருவன் அதைச் செய்யட்டும் என்று விட்டு விடுகிறார்கள். இந்த மனப்பான்மையை உபயோகித்துக் கொண்டுதான் சில புதிய அரசியலமைப்புகள் உலகத்திலேயே ஏற்படலாயின. சர்வாதிகார நாடுகளிலே சுயேச்சையாக எண்ணமிடுவதையே ஆதரிப்பதில்லை. குழந்தைகளும் ஒரு குறுகிய வழியிலேயே எண்ணமிடுமாறு அவர்களுடைய மனப்போக்கைக் கட்டுப்படுத்தி வளர்க்கப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு வேறு விதமாக எண்ணிப் பார்க்கும் ஆற்றல் குறைந்து விடுகிறது. அதிகாரத்தில் உள்ளவர்கள் கூறுவதே சரியானது என்றும் படுகிறது.

இம்மாதிரி மனப் பான்மை ஆட்சி புரிபவர்களுக்கு அனுகூலமென்றாலும் நாட்டிற்கோ உலகத்திற்கோ நன்மை பயக்காது என்பதை நாம் இன்று நிதரிசனமாகக் கண்டுகொண்டோம். ஆதலினாலே சிந்தனா சக்தி தாராளமாக வளரும்படி சிறுவர்களைவளர்த்து, அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் தமது எண்ணத்தால் சோதித்துப் பார்க்கும்படியான மனப்பான்மை உடையவர்களாக ஆக்க வேண்டும்.

குழந்தையின் மனப் போக்கு செம்மையாக அமைவதற்குப் பெற்றோர்கள் உதவ வேண்டும். குழந்தை சுயேச்சையாக எண்ணமிடுவதற்கு ஊக்க மளிக்க வேண்டும். சிறுவர்களின் சிந்தனா சக்தியை விகசிக்கச் செய்வதில் பள்ளிக் கூடங்களுக்கு ஒரு முக்கிய பங்குண்டு. இந்தத் திறமையை வளர்க்கும் அளவிற்குத்தான் முக்கியமாகக் கல்வியின் பயன் இருக்கின்றது. ஆனால் இன்று புத்தகங்களிலுள்ள அறிவையும் எண்ணங்களையும் சிறுவர்களுடைய மனதில் புகுத்துவதே கல்வியாகக் கருதப்படுகின்றது. சிறுவனுக்குத் தானாகவே எண்ணிப் பார்த்து முடிவுக்கு வரும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். எல்லா விஷயங்களையும் ஆசிரியர்களே கூறிவிடுவது சரியான முறையல்ல. மாணவன் தனது ஆலோசனையால் உண்மையைக் கண்டு பிடிக்க முயன்றால் அதனால் அவனுடைய மனத் திறமை வளர்வதோடு, தெரிந்து கொண்ட விஷயமும் உள்ளத்தில் ஊன்றிப் பதிந்து விடுகிறது.

பள்ளிகளில் நடைபெறும் கொண்டாட்டங்கள், பந்தய விளையாட்டுக்கள், நாடகங்கள் முதலியவற்றிற்கு அவசியமான திட்டங்களைச் சிறுவர்களே வகுத்துக் கொள்ளவும், அவர்கள் எண்ணப்படியே நடத்தவும் விட்டு விட வேண்டும். ஒரு காரியத்தைப் பொறுப்பேற்று நிர்வகிக்க நேரிடும் போதுதான் அதைப் பற்றித் தீவிரமான ஆலோசனையும் பிறக்கின்றது. ஆசிரியர்கள் அவர்களுக்கு ஆங்காங்கு உதவி புரிபவர்களாகவே பின்னணியில் இருந்து விடலாம். சிறுவர்கள் தவறு செய்தாலும் அதை அடிக்கடி சுட்டிக் காண்பித்து, அவர்களுக்குத் தங்களிடத்திலேயே நம்பிக்கையில்லாமற் போகும்படி செய்யக்கூடாது. அவர்களுக்கு ஊக்கமும் நம்பிக்கையும் உண்டாகுமாறு தைரியம் சொல்லி உதவ வேண்டும்.

வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுக்கின்ற போதும் சிறுவனுடைய சிந்தனை சக்தியை வளர்ப்பதிலேயே ஆசிரியன் நோக்கங் கொண்டிருக்க வேண்டும். பௌதிக சம்மந்தமான ஒரு உண்மையைப் பற்றிப் போதிக்கின்ற காலத்தில் அதை எடுத்தவுடனே கூறிவிடாமல், மாணவனே கண்டு பிடிக்கும் படியாகச் செய்யலாம். ஒரு கணக்குச் செய்கின்ற போது சந்தேக மேற்பட்டால் அதை ஆசிரியனே நிவர்த்தி செய்து விடாமல், மாணவன் தனது ஆலோசனையாலேயே நிவர்த்தி செய்து கொள்ள உதவலாம். இம் மாதிரி சந்தர்ப்பங்கள் பல இருக்கின்றன. அவற்றை நன்கு பயன் படுத்திச் சிறுவருடைய மனத் திறனை மேலோங்கச் செய்யலாம். பல உண்மைகளை ஆசிரியரோ புத்தகமோ எடுத்துரைக்க அவற்றை ஏற்றுக் கொள்வது தான் கல்வி என்ற எண்ணம் தவறானது. உண்மைக் கல்வியானது வாழ்க்கையில் எதிர்ப் படுகின்ற பிரச்னைகளைச் சமாளித்துக் கொண்டு வெற்றி பெறும்படியான எண்ணமிடும் திறமையை வளர்ப்பதாக இருக்க வேண்டும். சுருக்கமாகக் கூறினால் பரீட்சையில் வெற்றி பெறச் செய்வது மட்டும் உண்மைக் கல்வியல்ல; வாழ்க்கைப் பரீக்ஷையிலும் வெற்றி பெறச் செய்வதே உண்மைக் கல்வி.

அவ்வாறு வெற்றி பெறுவதற்கு சிறுவர்களுடைய சிந்தனை சக்தி நன்கு மலரும்படி செய்ய வேண்டும். அதற்குச் சிறுவர்களுடைய மனப் போக்கை அன்பும், அனுதாபத்தோடு அறிந்து கொண்டு அதைச் சுயேச்சையாக வளரும் படி செய்வதே சிறந்த வழியாகும்.

★

காதல்

காதலர்கள், பைத்தியக்காரர்கள்

லத்தின்

கனவிலும் காதலிலும் அசாத்தியம் எதுவும் இல்லை

ஹங்கேரி

அளவிற்கு மிஞ்சிக் காதலிப்பவன், அடிப்பதிலும் நிபுணன்

போலீஸ்

ஆசையுடன் காதல் செய்; அளவுக்கு மிஞ்சி இவளை

அமெரிக்கன்

விஷப் பரீட்சை

[எம். எஸ். ஹமீத்]

[ஆக்ரா நகரம். நடுப்பகல். பிஜ்லி மஹாலில் பாதுஷா தனியாக அமர்ந்திருக்கிறார். ஒரு சுந்தரி முதுகுப்புறமாய் வந்து நிற்கிறாள்.]

ஜஹாங்கீர்: யாரது?... (திரும்பிப் பார்த்து) ஸல்மா!

ஸல்மா: ஜஹாம்பனாஹ்!

ஜஹா: மெஹ்ருன்னிஸா நன்றாக இருக்கிறாளா?

ஸல்மா: ஆமாம். ஷேர்க்கான் இன்று வேட்டைக்குப் புறப்படத் தயார் செய்து கொண்டிருக்கிறார்.

ஜஹா: ஓ, சரி சரி! இம்மாதம் பத்தொன்பது பிறையில்தான் மீண்டும் தர்பார் கூடுகிறது. ஆதலால் அவன் வேட்டைக்குச் சென்று வர ஆறேழு நாள் அவகாசம் இருக்கிறது. போகட்டும். (மெல்லிய குரலில்) நீ மெஹருடன் நெருங்கிப் பழகி வருகிறாயல்லவா?

ஸல்மா: ஷாஹன்ஷாஹ்! தாதிமார்களில் நான் ஒருத்திதான் மெஹருன்னிஸாவின் உள்ளன்புக்குப் பாத்திரமானவள். தலைமைச் சேனாபதியின் மனைவிக்கு அந்தரங்கத் தோழி நானே. இவ்வகையில் நான் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறேன் என்று பெருமையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஜஹா: சந்தோஷச் செய்திதான்! ஆனால், இதற்குள் திருப்தியடைந்து விடாதே. மெஹர் பிடிவாதக்காரி என்பது ஞாபகம் இருக்கட்டும். அவளை நம் வழிக்குத் திருப்புவது அசாத்தியம்!

ஸல்மா: அசாத்தியம் என்ற சொல் ஷாஹன்ஷா ஜஹாங்கீர் வாயினாலா உச்சரிக்கப் படுகின்றது!

ஜஹா: ஸல்மா! சமர்த்தான சம்பாஷணையால் அசாத்தியம் சாத்தியமாகி விட முடியாது, தெரியுமா?

ஸல்மா: இல்லை ஜஹாம்பனாஹ்! தாங்கள் இளவரசராக இருந்த காலத்தில், நம் அக்பர் பாதுஷாவின் அந்தப்புரத்தை அலங்கரித்த கன்னி மெஹருன்னிஸாவைக் கொஞ்சம் ஞாபகம் செய்து பாருங்கள். தாங்கள் ரங்க மஹாலில் உல்லாஸமாய்ப் பொழுது போக்கிக்கொண்டு, இங்குமங்கும் ஒயிலாக அலைந்து திரியும் மெஹரின் அசைவுகளிலே கொண்ட ஒருவிதத் திருப்தி!...

ஜஹா: ஆம் ஸல்மா, ஆம்! அவளது அங்க அசைவுகளிலே, இன்னிசைக் கீதத்திலே ஏதோ ஒருவிதத் திருப்தி ஏற்பட்டது உண்மைதான். ஆனால் அது திருப்தி தானா? காதலின் ஜ்வாலை நிரம்பிய தீ என்று உனக்குத்

தெரியாதா? அந்த இன்பத்தின் நினைவுக் கோவை என் உள்ளத்தில் என்றென்றும் தேங்கிக் கிடக்கிறதே!... அவைகளை மறக்க முடியாமல் தவிக்கும்படி என் தந்தையல்லவா அவளை

சேனாபதி ஷேர்க்கானுக்கு விவாகம் செய்து கொடுத்தார்!...

ஸல்மா: ஷாஹன்ஷா அக்பர் நல்ல காரியம் செய்தார்கள். ஷேர்க்கானுக்கு மெஹரை விவாகம் செய்து கொடுத்தது எவ்வளவோ பாராட்டுதற்குரிய செய்கை!

ஜஹா: என்ன சொன்னாய்?... (கோபமாக)... என்னால் காதலிக்கப்பட்ட மெஹர் இன்னொருவனுக்கு வாழ்க்கைப் படுத்தப்பட்டது எவ்விதத்தில் பாராட்டுதற்குரியது? ஸல்மா! வேளையறியாமல் விளையாடாதே!

ஸல்மா: ஜஹாம்பனாஹ்! நான் விளையாடவில்லை. உண்மையைக் கூறினேன். தங்களால் மெஹருக்கு முன்பு காதலிக்கப்பட்ட அனார்க்கலி உயிருடன் சமாதி செய்யப்பட்டதை மறந்தீர்களா! அவள் செய்த குற்றம் என்ன?...... மெஹருன்னிஸாவைப் போல் அவளும் தங்களை மனத்தால் தீண்டியது தானே குற்றம்? அப்படியிருக்க, மெஹருன்னிஸா ஷேர்க்கானுக்கு வாழ்க்கைப் படுத்தப்பட்டது எவ்வளவோ நல்ல செய்கைதானல்லவா?

ஜஹா: (மெல்லிய துயரக் குரலில்) அனார்க்கலி!... மெஹருன்னிஸா!... என் இரு கண்மணிகள்!! அனார்க்கலி என்னைக் காதலித்ததற்காக உயிருடன் சமாதி செய்யப்பட்டாள்! மெஹருன்னிஸா இதயம் இல்லாத ஈவிரக்கமற்ற ஒரு சேனாபதிக்கு வாழ்க்கைப் படுத்தப்பட்டாள்!... என்ன கொடுமை! என் தந்தை தன் மைந்தனின் ஒரு கண்ணைப் பிடுங்கி சமாதி செய்தார்; மற்றொரு கண்ணின் பார்வையை மட்டும் எடுத்துக் கொண்டார்!......

(கண்கள் கலங்குகின்றன. ஸல்மா பாதுஷாவின் முக மாறுதலைக் கண்டு மருண்டு)

ஸல்மா: ஜஹாம்பனாஹ்! மன்னிக்க வேண்டும். தங்கள் அமைதிக்குப் பங்கம் விளைவித்து விட்டேன். நான் போய் வருகிறேன்.

(போக முயற்சிக்கிறாள்)

ஜஹரா : ஸல்மா! நில், இன்னும் கொஞ்ச நேரம் சொல்லிக் கொண்டே நில். உம், மெஹர் என்னைப்பற்றி ஏதாவது பேசுவாளோ?...

ஸல்மா : பேசாமல் என்ன! சில மாதங்களுக்கு முன் பாரசீகப் பெண்மணி ஒருத்தி மெஹரிடம் விருந்தாளியாக வந்து சில நாட்கள் தங்கியிருந்தாள். அவள் ஒரு கவியாம். அவளிடம் ஏதோ பேச்சில், "மொஹலாய சாம்ராஜ்ஜியத்தின் அதிபதி ஜஹாங்கீர்ஷா ஆடவர்களுக்குள்ளே மென்மையான உள்ளம் படைத்தவர்" என்று மெஹர் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டேன்.

ஜஹரா : உம்!...... (நகைத்து)... மொஹலாய சாம்ராஜ்ஜியத்தின் அதிபதி ஜஹாங்கீர்ஷாவின் இதய தேசத்தில், ஒரு சேனபதியின் பத்தினி ஆட்சி செலுத்துகிருள் என்பது அவளுக்குத் தெரியாது போலும்!

ஸல்மா : (மெதுவாக பயந்த குரலில்) ஜஹாம்பனுஹ்! களவு போன காதலுக்கு இதயத்தில் ஸ்தானம் தருவது தவருக வந்து முடியும்!

(பிஜ்லி மஹாலுக்குள் கூடு கட்டி வாழும் சில சிட்டுக் குருவிகள் தூரல் கொடுக்கின்றன. பாதுஷா நிமிர்ந்து அவைகளைப் பார்க்கிறர்.)

ஜஹரா : ஸல்மா! என் போன்ற சக்கரவர்த்திகள் வாசஞ் செய்யும் இந்த மஹாலுக்குள், கொஞ்சமும் பயமின்றி, கீச்சுக் கீச்செனக் கூச்சலிடும் இந்தக் குருவிகளைப் பார்!... இதைப் போலவே நான் விரட்டினுலும் வலிய வந்து குரல் கொடுக்கிறது காதல். இதயத்திற்குள் இழந்த காதல் சோக கீதம் பாடுகிறது. நான் என்ன செய்வேன்?

(சிறிது நேரம் மௌனம். பாதுஷாவின் தலைக்கு மேல் ஹுக்காவின் புகை, வளையம் வளையமாகச் சென்று கொண்டிருக்கிறது. அவைகள் பாதுஷாவின் மனத்திலுள்ள சிந்தனைச் சிக்கல்களைச் சித்தரிப்பது போல் நெளிந்து கொண்டிருக்கின்றன.)

ஜஹரா : ஸல்மா! இன்றிரவு நான் மெஹரைப் பார்க்க முடியுமா?

ஸல்மா : (திடுக்கிட்டு) ஜஹாம்பனுஹ்! என்ன சொல்கிறீர்கள்!

ஜஹரா : நான் மெஹருன்னிஸாவைப் பார்க்க விரும்புகிறேன்.

ஸல்மா : அவளுடைய அநுமதி?

ஜஹரா : அநுமதியா; கிடைக்காது. அவளுடைய காதலன் இப்பொழுது ஜஹாங்கீர் அல்ல;

ஸல்மா : அப்புறம் தாங்கள் எவ்வாறு சந்திப்பது?

ஜஹரா : நான் அவளைச் 'சந்திக்க' விரும்பவில்லை; 'பார்க்க' மட்டும் ஆசைப் படுகிறேன். ஒரு முறை — போதும்! ஒரு முறை நான் கள்ளத்தனமாக அந்த நிலா முகத்தைப் பார்த்தேனுல் போதும்! அந்த இன்ப நினைவிலேயே ஆயிரம் நாட்களைக் கவலையின்றிக் கழித்து விடுவேன். நான் அவளை எப்படியாவது ஒரு முறை பார்த்தேயாக வேண்டும்.

ஸல்மா : ஜஹாம்பனுஹ்! இன்று ஷேர்கான் வேட்டைக்குப் போகிருர். நாளைக் காலையில் வந்து பதில் சொல்லுகிறேன்.

(ஸல்மா மிகப் பணிவாய் ஸலாம் செய்து விட்டுப் போகிறள். பாதுஷா தனக்குள் சொல்லிக் கொள்கிறர்.)

ஜஹா : நான் ஷாஹன்ஷாஹ்!... நான் காதலித்த மங்கை என் அடிமை ஷேர்க்கானின் மனைவியாகக் காலம் கழிப்பதா?...... கூடாது! எவ்வாருயினும் மெஹருன்னிஸாவை அடைந்தே தீரவேண்டும்!...ஆனுல்... மெஹர்?......?......

2

(மறுநாள் இரவு. வட்ட நிலா வானத்து மையத்திலே தவழ்கிறது. ஷேர்க்கானின் மாளிகை. சன்னலருகில் அமைக்கப்பட்டிருக்கும் பளிங்காசனத்தில் அமர்ந்து, சந்திரனின் ஜால ஒளியிலே பூங்காவின் பொலிவைக் கண்டு மகிழ்கிறள் மெஹர். அந்தரங்கத் தோழி அருகில் நிற்கிறள்.)

மெஹர் : ஸல்மா! சந்திரனின் ஒளி வெள்ளம் உள்ளத்தை நிரப்புமோ!

ஸல்மா : அதிலென்ன சந்தேகம் பீபிஜான்? மாசிலா இதயங்களை நிலா, விவரிக்க இயலாத ஆனந்தத்தில் ஆழ்த்தி விடும்!

மெஹர் : அப்படியில்லையடி. பால் ஒளி என் அமைதியைப் பாழ் பண்ணுகிறது!... (பெருமூச்சு)... இது ஏன்?

ஸல்மா : ஒரு வேளை...... நான் சொல்லலாமோ?......

மெஹர் : தாராளமாகச் சொல். பேசும் உரிமை எல்லாருக்கும் உண்டு.

ஸல்மா : ஒரு வேளை...... தங்கள் கருத்தில் காதல் கலந்திருக்கலாம் என்று எண்ணுகிறேன். காதலுக்கும் இந்த நிலாவுக்கும் எவ்வளவு உறவோ அவ்வளவு பகை!

மெஹர் : இருக்கலாம். (தலையசைத்து) உம்?......

ஸல்மா : காதலர் நெஞ்சம் நிலவொளியில் ஆனந்தப்படுவதுமுண்டு; அவஸ்தைப் படுவதும் உண்டு. நிலாவுக்கு அது ஒரு விளையாட்டு. இதய வேதனை அதற்கென்ன தெரியும்? மனத்தின் அடித்தளத்தில் மண்டிக் கிடக்கும் மறந்து போன சம்பவங்களைக் குண்டு நிலா குத்திக் கிளறுகிறது. அப்போதுதான் மனமயக்கம் கொள்ளுகிறேம். பாருங்கள்......

மெஹர் : (குறுக்கிட்டு) ஸல்மா! நிலாவின் வேலையை உன் வசனம் பூரணமாய் செய்து முடிக்கப் பார்க்கிறதடி! தயவு செய்து......

ஸல்மா : பீபிஜான்! பேச்சுக்கு மனசை மயக்கும் சக்தி இருக்கிறது தான். ஆனுல் நினைவோ, மனதிற்குள் பலவித விசித்திர வர்ணங்கள் பூசி விட வல்லது!

(மெஹரின் வதனத்தில் துயர ரேகைகள் படருகின்றன. குரல் கம்முகிறது)

மெஹர் : விசித்திர வர்ணம்!... பறந்து போன காலத்தின் பரிதாபச் சித்திரம்!......... உம், அவைகளை எண்ணி என்ன பயன்?... எண்ணங்கள் என்னென்னவோ பின்னுகின்றன. முடிவில் மனம் பின்னிய நினைவு வலையின் விலை என்ன தெரியுமா?– ஒரு துளி கண்ணீர்!

ஸல்மா : ஒரு துளி;– அதற்குள் எவ்வளவு பெரிய கதை அடங்கியிருக்கிறது!... சோகக் கதை! சொல்ல வொண்ணுத் துயரம்!

எதிர்கால சரித்திராசிரியர்கள் அக்பர் பாதுஷாவின் இரும்பு போன்ற இதயத்தை ......

மெஹர்: சபிக்காதே ஸல்மா! தூர திருஷ்டி அற்றவர்களும், அரசியல் சூன்யங்களும் அக்பர் பாதுஷாவை இரும்பு மனத்தவர் என்று வர்ணிக்கலாம். உண்மையில் அவர் மனம் கரும்பு என்று கூறுவேன். நயமான கற்பனைகளையும், நேர்த்தியான கருத்துக்களையும் புரிந்து கொள்ள முடியாத பாமரன், பண்டிதனைப் பழித்த கதையாக இருக்கிறது உன் பேச்சு. அரசனை ஆண்டி என்று சில சமயம் அக்பர் பாதுஷா கூறியதை நான் கேட்டிருக்கிறேன். அரசனின் மனம் எந்தச் சக்திக்கும் அடிமைப் படுவதை அவர் விரும்பவில்லை. மனிதனைக் கடந்தவனே அமைதியாக ராஜ பரிபாலனம் செய்ய முடியும் என்று அவர் எண்ணியிருந்தார். அரசன் ஒருவன் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது தேசத்தின் நன்மைக்காகவே இருக்க வேண்டும் என்பது அவரது அவா. காதலுக்கு அவர் சிம்மாசனத்தில் இடம் தரவில்லை. நம் தேசத்தில் ஹிந்து மதம் ஒரு பெரிய சமுதாயம் அல்லவா? இங்கே மொகலாயர்கள் எப்போதும் அமைதியாக ஆட்சி புரிய முடியாது. இதற்காகவே, தேச நலனைக் கருதியே, அக்பர் பாதுஷா ராஜபுத்திர ரமணியை மணந்து ஹிந்து சகோதரர்களைக் கவர்ந்தார். அக்காலத்தில் இளவரசர் ஸலீம் காதலித்த அனார்க்கலி, என் போன்றவர்களின் சம்பந்தத்தை தேச நலனைக் கருதியே இரக்கமின்றித் துண்டித்தார். தன் மைந்தனுக்கும் அம்பர் ராஜ கன்னிகையான ஜோதிபாயை விவாகம் செய்து வைத்தார். இளவரசர் ஸலீம் பட்டத்திற்கு வந்து ஜஹாங்கீர்ஷா ஆனார். அக்பரின் அந்தச் செய்கை இன்று ஜஹாங்கீர்ஷாவுக்கு எத்தனையோ வகையில் நன்மை செய்து வருகிறது. அனார்க்கலியையோ, என்னையோ ஜஹாங்கீர்ஷா மணந்திருந்தால் இப்போது உல்லாஸமாக பிஜ்லி மஹாலில் உறக்கம் கொள்ள முடியாது! யுத்த களத்தில்தான் வாசம் செய்து கொண்டிருக்க வேண்டும்! புரட்சியின் பிறப்பிடமாகிய ராஜபுத்திர உள்ளங்களில் அதிர்ஷ்டவசமாக இன்று அமைதி குடி கொண்டுள்ளது! இதை நீ ஒப்புக்கொள்ளுகிறாயல்லவா?

ஸல்மா: பீபிஜான்! தேசத்திற்காகப் பிறந்து, வாழ்ந்து மடிபவன்தான் அரசன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால்......

மெஹர்: ஆனால்?.........

ஸல்மா: தேச நன்மைக்காக ஒரு பெண்ணை- களங்கமிலா உள்ளத்தை, உயிருடன் சமாதி செய்வதை அக்பர் பாதுஷாவின் தர்பார் ஒப்புக் கொள்ளலாம். ஆனால், அகிலத்தின் அரசனான அல்லாவின் தர்பாரில் அது மகத்தான தவறெனக் கருதப்படும்! இல்லையா?

மெஹர்: ஆம், தேச நன்மைக்காகவும் பாப காரியங்களில் பங்கு கொள்வது கூடாதுதான். அனார்க்கலிக்கு கொடுக்கப்பட்ட தண்டனை மிகவும் கொடியது என்பதை ஒப்புக் கொள்கிறேன். அது அக்பர் பாதுஷாவால் கொடுக்கப்பட்ட

தண்டனை யல்ல. முதன் மந்திரி பைராம்கானின் சூழ்ச்சியால் நடந்தது. அக்பர் பாதுஷா வின் அரசியல் கொள்கையை பைராம்கான் தனக்குச் சாதக மாகப் பயன் படுத்திக் கொண் டான். இதற்குக் காரணம் ஜஹாங்கீர்ஷாவுக்கும் அவனுக் கும் இடையிலிருந்த சொந்த மனஸ்தாபமே!... அக்பருக்குப் பிறகு ஜஹாங்கீர்ஷா பட்டத் திற்கு வந்ததும் பைராம்கானை உயிருடன் சுவற்றில் வைத்துப் புதைத்தார் அல்லவா?

ஸல்மா: பீபிஜான்! பைராம்கா னுக்குத் தகுந்த தண்டனை கொடுத்ததால் உதிர்ந்த மலர்கள் செடியேறிச் செழித்தனவா?

(மேஹரின் கண்கள் கலங்குகின் றன. விசனம் நிரம்பிய குரலில் பேசு கிறாள்.)

மெஹர்: ஸல்மா!......... வாழ்க் கையின் ஜீவோதயத்திலே கசக் கப்பட்ட மனமலர் மறுபடியும் மலரப் போகிறதா! ஒரு மலர் மடிந்தது; மற்றொரு மலர் மணம் இழந்தது!...... (அழுகி றாள்)... அனார்கலியைப் போல எனக்கும் ஏன் மரண தண்டனை சித்திக்கவில்லை!... நான் பாபி! என் கணவர் என்னை எவ்வளவு அன்புடன் நேசிக்கிறார். இருந் தாலும் என் மனம் சில சமயங் களில், பழைய நினைவுகளி னூடே தாவுகிறதே! மனசைக் கட்டுப்படுத்தும் வலிமை எனக் கில்லையே!.........

(மேஹருன்னிஸா தாவணித் தலைப்பை எடுத்து, கண்ணீரைத் துடைத்துக் கொண்டே நந்தவனத் தைப் பார்க்கிறாள். ஆந்தையின் குரல் கேட்கிறது.)

மெஹர்: (கையைச் சுட்டிக் காட்டி) ஸல்மா! நந்தவனத்தின் அந்த மூலையில் பார்!... யாரோ நிற்பது போல் இல்லை!

ஸல்மா: (தெரியாதவள் போல்) பீபிஜான்!...... எங்கே? எனக் கொன்றும் தெரியவில்லையே!

மெஹர்: அதோ பார்!... ஆஜா னுபாகுவான ஒரு உருவம் மல் லிகைக் கொடியின் அருகிலே... இதோ நகருகிறது!

(ஸல்மா விளக்கைப் பிரகாசப் படுத்துகிறாள். மேஹரின் அழகிய வதனம் விளக்கொளியில் மின்னு கிறது.)

மெஹர்: ஸல்மா! விளக்கைத் தூண்டாதே. வெளியிலிருந்து அறைக்குள் பார்ப்பவனுக்கு நம்மை நன்றாகத் தெரியும்!

(விளக்கொளி குன்றுகிறது. ரோஜாச் செடியின் பக்கத்தில் சென்று நின்ற அந்த உருவம், ஒரு மலரைக் கிள்ளி சன்னலுக்குள் எறிந்து விட்டு, மெதுவாக நடந்து மதிலேறிக் குதித்து மறைகிறது. மேஹர் சன்னல் வழி யாக வந்த மலர் மொட்டை திகிலுடன் எடுக்கிறாள்.)

மெஹர்: ஸல்மா! என்ன துணிச் சலான செய்கை பார்த்தாயா! அது யார் தெரிகிறதா?

ஸல்மா: தெரிகிறது; நிலவொளி யில் நன்றாகப் பார்க்க முடிந் தது. பறந்துபோன காலத்தை மறக்க முடியாமல் தவிக்கும்...

மெஹர்: (நடுங்கி) ஸல்மா!...... என்ன துணிச்சல்!...... யாரா வது கண்டால் என்ன நினைப் பார்கள்! என் அந்தஸ்துக்கு குழி தோண்டும் முயற்சி யல் லவா இது?...... முட்டாள்!

ஸல்மா: பீபிஜான்! இது முட்டாளின் செய்கை யல்ல. கள் வெறி கொண்டவனும், காதல் மது உண்டவனும் தன்னை மறந்து பரீட்சையில் இறங்குவது இயற்கை.

மெஹர்: இது விஷப் பரீட்சை!... சரி, சன்னல் கதவுகளை மூடித் தாளிடு. வெகு நேரமாகி விட்டது.

3

(படுக்கை யறை. மெல்லிய மக்மல் துணிகளாலான கொசு வலையை விலக்கிக் கொண்டு மெஹருன்னிஸா கட்டிலின் மேல் அமருகிறாள். அவள் வதனம் சிவந்து கலவரம் சூழ்ந்திருக்கிறது. ஸல்மா பளிங்குப் பாத்திரத்தில் பானம் கொண்டு வருகிறாள்.)

மெஹர்: ஸல்மா! என்ன அது? திராக்ஷை ரசமா?

ஸல்மா: ஆமாம் பீபிஜான்! இதில் கொஞ்சம் மது கலந்து தரட்டுமா?

மெஹர்: வேண்டாம். மனதிலே தாங்க முடியாத மயக்கம் இருக்கிறது. தலைக்குப் போதை தேவையில்லை. அதைக் கொடு.

(தாக சாந்தி செய்கிறாள். ஸல்மா அறைக் கதவுகளை மூடிவிட்டு, பக்கத்து அறையில் சென்று சயனம் கொள்கிறாள். மெஹருன்னிஸா மெல்லிய குரலில் தனக்குள் சொல்லிக் கொள்கிறாள்.)

மெஹர்: ....மனத்துள் ஏற்பட்ட போராட்டத்தைத் தணிக்கவல்ல தந்திரம் தெரியாமல் தவிக்கிறார் ஜஹாங்கீர்ஷா! இதய வேதனை அவரது அறிவை விழுங்கி விட்டிருக்க வேண்டும்! .....(சிந்தனை)...... இல்லையானால் அவர் இந்தக் கீழ்த்தர முயற்சியில் இறங்குவாரா?......என்ன பேதமை!......... என் வாழ்க்கையில் நிகழ்ந்த கேவலமான அம்சம் இதுவே! இதில் ஏதாவது சூது இருக்க வேண்டும்!... (முகம் விகாரமாய் மாறுகிறது) ...சை, அப்படி இருக்குமா?... ஸல்மா அப்படிப் பட்டவளா? ...எதற்காக அவள் விளக்கைத் தூண்டினாள்?......

(சேவல் கூவும் குரல்)

4

(அதிகாலை. மெஹருன்னிஸா ஸ்நானத்திற்குப் பின் கூந்தலைக் கோதிக் கொண்டு நந்தவனத்தில் உலாவுகிறாள். ஸல்மா வருகிறாள்.)

ஸல்மா: பீபிஜான்! காலைச் சிற்றுண்டி தயாராக இருக்கிறது.

மெஹர்: ஸல்மா! நீ இன்று என்னோடு அமர்ந்து சிற்றுண்டி சாப்பிடுவாயா?

ஸல்மா: பீபிஜான்! இது புது வழக்கமாயிற்றே. மற்ற தாதிமார்கள் என்ன நினைப்பார்கள்? இப்போதே என் மீது அவர்களுக் கெல்லாம் பொறாமை. தங்களுடன் 'கல கலப்பாக'ப் பேசுவதிலேயே இப்படி யென்றால் பாருங்கள். தயவு செய்து இம்மாதிரி......

மெஹர்: ஸல்மா! நீ ஒரு பைத்தியக்காரி. காரணமில்லாமல் நான் உன்னை என்னோடு அமர்ந்து சாப்பிட அழைப்பேனா?

ஸல்மா: என்ன காரணமோ?– புதிராகவல்லவா இருக்கிறது!

மெஹர் : கொஞ்ச நேரத்தில் தெரிந்து கொள்வாய் !......

(இருவரும் மாளிகையினுட் சென்று, சிற்றுண்டி யருந்திவிட்டுப் பளிங்கு வாசலில் வந்து நிற்கின்றனர். ஸல்மா ஒரு பெரிய காரியத்தில் வெற்றி பெற்ற பெருமிதத்துடன் நிற்கிறாள். மற்ற தாதிகள் அனைவரும் திகைப்பில் மூழ்கி விழிக்கின்றனர்.)

மெஹர் : கதீஜா! இங்கு வா !... (ஒரு தாதி வந்து பயபக்தியுடன் நிற்கிறாள்) இன்றிலிருந்து உன்னை என் அந்தரங்கத் தோழியாக நியமிக்கிறேன். ஸல்மாவுக்கு இந்த வேலை பிடிக்கவில்லையாம்! இவள் (ஸல்மாவைச் சுட்டிக் காட்டி) ஜஹாங்கீர் பாதுஷாவின் அனுசரணையில் வாழ ஆசைப்படுகிறாள் என்று தெரிகிறது! ஆதலால் நாம் இவளை ஆசீர்வதித்து அனுப்புவோம்!

ஸல்மா : (திகைத்து) பீபிஜான்!... என்ன சொல்லுகிறீர்கள் ?

மெஹர் : ஆசீர்வதிக்கிறேன். நீ போய் வரலாம்.

(மெஹருன்னிஸா, ஸல்மாவின் வலது கையில் ஐந்து மோகராக்களை வைத்து ஸலாம் செய்கிறாள். ஸல்மா வெட்கிப் போய்க் கண்ணீர் சிந்துகிறாள்.)

ஸல்மா : பீபிஜான் !...... என்னை மன்னிக்க வேண்டுகிறேன் !

(மெஹருன்னிஸாவின் குரல் உயருகிறது. கண்கள் அனல் கக்குகின்றன.)

மெஹர் : மன்னித்தேன். இனி இம்மாதிரி விஷப் பரீட்சையில் இறங்கி விடாதே! இந்தியாவைக் காவல் புரிவதுதான் பாதுஷாவின் வேலையும், கடமையும். இன்னொருவர் மனைவி மீது காதல் கொள்ளுவது அவர் கடமை யல்ல! இந்திய நாட்டுப் பெண்மணியின் இதயக் கதவு, தாலிக்கயிறு என்னும் சாவியின்றித் திறவாது என்று ஜஹாங்கீர்ஷாவிடம் போய்ச் சொல்! உம், நீ போகலாம்.

(கண்களைத் துடைத்துக்கொண்டே ஸல்மா போகிறாள்.)

அன்புக் கடிதம்

'தீபன்'

'ஐயாதுரை' என்று தீபன் அன்புக்கும், நட்புக்கும் பாத்திரமான இந்த ரஸிகரின் பெயரும் அ. தீத்தாரப்பன். இவருக்குத் 'தீபன்' சங்கீதத்தில் அபார மோகம். 'தீபன்' பாடுகிறதைத் தனியாக இருந்து வெகுகாலமாக அனுபவித்த யோகசாலி அந்தரங்க நண்பர். இருவரும் தமாஷாகவும், பச்சையாகவும், கொச்சையாகவும் பல விஷயங்களை மனம் விட்டு மனம் பரிமாறிக் கொள்வார்கள். கலாசாலைத் தோழமையோடல்லாது, தீபனுடைய இலக்கிய ரஸனையையும் சங்கீத பாணியையும் ரஸித்து அவருக்கு ஆதியில் உத்சாக மூட்டியவர் 'ஐயாதுரை'. இந்த ஐயாதுரைக்கு மாப்பிள்ளைத் தோழனாக செல்லையா இருந்திருக்கிறார்! யோகசாலி இவர்.

இவர் தற்சமயம் நெல்லை சங்கீத சபையின் உதவிக் காரியதரிசியாக இருக்கிறார். எவ்வளவோ அருமை அருமையான கடிதங்களை இவர் பெற்றிருப்பதை இலக்கிய உலகிற்கு விருந்தளிக்கலாம். ஆனால்..........ஏதோ ஒரு சில கடிதங்கள்தான் கொடுக்கக்கூடும். மற்றவை கூடாதவை என நினைக்கிறார். அவர் உதவிய சில கடிதங்கள். இவை 'தீபன்' நோய்வாய்ப் பட்ட பின்னால் எழுதியவை. அவர் ஆரோக்கியமாக இருந்த நாளில் எழுதியிருப்பவை கிடைத்தால்.... இதிலே தொனிக்கிற சோகக் குரல்—வியாதியின் தீனக்குரலில் கேட்காமல் இருக்கலாம்.

— ஆசிரியர்

ஏரோ.
மீனம்பாக்கம்,
12–4–40

தம்பி ஐயாதுரைக்கு,

யார் கடைசியாகக் கடிதம் எழுதியது என்பதுகூட மறந்து போய் விட்டது. அவ்வளவு காலம் மௌனம் சாதித்து விட்டோம். இன்று மௌனத்தைக் கலைக்க உத்தேசித்து விட்டேன்.

எனக்கு வேலை கிடைத்ததில் உனக்கு எவ்வளவு சந்தோஷம் இருந்ததோ அவ்வளவு சந்தோஷம் யாருக்கும் இருந்திருக்க முடி

யாது என்பது என்னுடைய நம்பிக்கை. உன்னைப்போல் என்னுடன் ஒருமனப் படுபவர் ரொம்பவும் அபூர்வம். அது காரணமாக உன் முன்னால் பாடுவதுபோல் நான் வேறு யார் முன்னாலும் பாடியது கிடையாது. இனிமேல் உன் முன்னாலும், என்னால் பாட முடியுமோ என்னமோ சந்தேகந்தான். வெகு நாட்களாக இருமி இருமி தொண்டை புண்ணாகிக் குரல் கம்மி விட்டது. பேசுவதற்கே சங்கடமாகத்தான் இருக்கிறது. குரலின் பாடே இப்படியென்றால் சாரீரத்தைப்பற்றிக் கேட்பானேன்? இன்னும் கேவலம்.

வேலையுடன் வியாதியும் வந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். சென்ற இரண்டு வருஷங்களாக வேலை பாதி வியாதி பாதி என்ற நிலைமையில்தான் இருந்து வந்திருக்கிறேன். வேலைக்கும் வியாதிக்கும் நெடுநாளாகப் போட்டி இருந்தது. கடைசியில் வியாதிதான் வெற்றி பெற்றது. வேலை தோல்வியுற்று என்னை விட்டுப் போய்விட்டது. சென்ற ஒரு மாத காலமாக வியாதியுடன் மட்டும் போராடிக் கொண்டு வந்திருக்கிறேன். வியாதியின் ஆதிக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டு வருகிறது. இன்னும் இரண்டு மாதம் ஓய்வு எடுத்தால் பூரண சுகம் ஏற்பட்டு விடும் என்று நம்புகிறேன்.

கொக்கிரகுளம் சுப்பிரமணியம் * இப்பொழுது இங்குதான் இருக்கிறான். அவன்தான் சொன்னான் நீ கொஞ்சகாலமாக கொக்கிரகுளத்திலேயே இருப்பதாக. ஊரோடு இருப்பது உனக்கு அநேக விதத்தில் சௌகரியமாக இருக்கும் என்று நம்புகிறேன். உனக்குக் கோடை விடுமுறை ஆரம்பித்து விட்டதா? சௌகரியப்பட்டால் இந்தப் பக்கம் வந்து போனால் எனக்கு சந்தோஷமாயிருக்கும். இப்பொழுது நான் மீனம்பாக்கத்தில் இருக்கிறேன்— ஆரோக்கியத்துக்காகத்தான். நல்ல காற்று. புகை வண்டி நிலையத்துக்கு வெகு சமீபம். கூப்பிடு தூரந்தான். அடிக்கடி மின்சார வண்டி போய் வருவதால் பட்டணம் வெகு தூரம் என்பது கூடத் தெரிவதில்லை.

வீட்டில் எல்லாரும் சௌக்கியந்தானா? உனக்குக் குழந்தை குட்டிகள் உண்டா? முழுக்குழந்தையா? அல்லது கால், அரை என்று Fraction லே இருக்கிறதா? போன மாசத்துக்குப் போன மாசம் எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது, தென் காசியில் வைத்து. நான் இன்னும் குழந்தையைப் பார்க்கவில்லை. நடராஜன் † மாதிரியே இருக்கிறதாம். நடராஜன் தங்கச்சி, தம்பி எல்லோரும் சௌக்கியம்.

---

* சுகி.

† மூத்த பையன்

பதிலையும் உன்னுடைய வரவையும் எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறேன்

உனதன்புள்ள,
செல்லையா.

2

ஏரோ.
மீனம்பாக்கம்,
20—4—40.

அன்புமிக்க தம்பி அய்யாதுரைக்கு,

உன்னுடைய பரிவான விரிவான கடிதம். நான் இன்னும் 'லீவில்' இருக்கிறேனா என்று கேட்டு எழுதியிருக்கிறாய். லீவும் இல்லை கீவும் இல்லை. வேலையே $ விட்டுப் போய்விட்டது. காரணம் லீவ் இல்லாததினால்தான். 'அடிப்படை விதிகளின்' பிரகாரம் சேர்ந்தாற்போல் மூன்று மாசத்துக்கு மேல் லீவு கிடையாது. எனக்கு மூன்று மாசத்துக்கு மேல் லீவு வேண்டியதிருந்தது. இது விஷயம் இப்பொழுது கவலைப் பட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. சுவர் இருந்தாலல்லவா சித்திரம் எழுதலாம். முதலில் சுவரைச் செப்பனிட்டுக் கொள்ளுவோம். பிற்பாடு இன்னும் ஒரு தரம் குருட்டு அதிருஷ்டம் அடித்தால் பார்த்துக் கொள்ளுகிறது.

நீ எழுதியிருக்கிறபடி 'கண் விழுவது கொள்வது முதலிய நம்பிக்கைகளில் எனக்கும் நம்பிக்கை விழுந்து விட்டது.

ஊரில் ▣ வைத்து வெ. ப. சு. அவர்களின் 80வது ஆண்டு விழாவின்போது காய்ச்சலோடு காய்ச்சலாய்ப் பாடினேன். அதைக் கேட்டு விட்டு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் 'தேன்' என்று எனக்குப் பட்டம் கொடுத்தார்கள். இப்பொழுதும் அவர்கள் என்னைப் பற்றி விசாரிக்கிறாராம். அன்றையிலிருந்து இருமல் ஆரம்பித்து விட்டது. அது நாளுக்கு நாள் பலத்துக் கொண்டே வந்தது. கடைசியாக என் வீட்டில் ராஜாஜி உட்பட ஒரு சதஸில் 'காக்கக் கடவிய நீ' என்ற பாட்டை மோகன ராகத்தில் ரொம்ப நன்றாகப் பாடினேன். எல்லோரும் வெகுவாகப் பாராட்டிச் சொன்னார்கள். இது நடந்தது 38 டிசம்பரில். அந்த மாசக் கடைசியில் 'படுத்தவன்' 39 மார்ச்சு மாதம்தான் எழுந்திருந்தேன். கொஞ்ச காலத்

$ வானொலி உதவிப் பத்திராதிபர் வேலை *14—3—1940* முதல் நீங்கியது.

▣ திருநெல்வேலியில் நடை பெற்றது. தலைமை வகித்தார்கள்.

துக்கு சரீரம் ரொம்ப நன்றாயிருந்தது. மறுபடியும் படுத்தேன். இப்பொழுதுதான் கொஞ்சம் தலையைத் தூக்கியிருக்கிறேன்.

இப்போது எடை எவ்வளவோ கூடியிருக்கிறது. சதையும் வைத்திருக்கிறது. வேஷ்டி இடுப்பில் இருக்கவே மாட்டேன் என்கிறது. நழுவி நழுவிப் போய்விடுகிறது. பசியும் எடுக்கிறது. சாப்பாடும் செல்லுகிறது. புஷ்டியான ஆகாரங்கள் சாப்பிட்டு வருகிறேன். காலையில் முட்டை கூட 'அடிக்கிறேன்.' இருந்தாலும் இன்னும் பலஹீனமாகத்தான் இருக்கிறது.கடிதம் எழுதுவது கூட சிரமந்தான். பூரண சுகம் பெற இன்னும் கொஞ்ச நாள் போக வேண்டும்.

அப்படியா சங்கதி...? ஒண்ணரை வயசில் ஒரு பெண் இருக்கிறதா? பேஷ்! ரொம்ப நல்ல சமாசாரம். அவபேரென்ன? அவ யாருமாதிரி இருக்கா? உன்னைப் போல் * சிவப்பா? அண்ணியைப் போல் கருப்பா? உன்னைப் போல் ஒல்லியா? அண்ணியைப் போல் பருமனா? எதற்காக இதெல்லாம் விசாரிக்கிறேன் தெரியுமா? நம்ம பயல்களில் ஒருத்தனுக்கு அவளைக் கட்டி விட்டால் என்ன என்று ஒரு யோசனை. யோசனை எப்படி? சீர் செனத்தியைப் பற்றி யெல்லாம் நேரில் பேசிக்கொள்வோம்.

சென்ற ஒரு வருஷ காலமாக உடல் நிலை மோசமாக இருந்தாலும் மனம் மேலான நிலையில் தான் இருந்தது. சிறு கதைகள் புனைவதிலும், புது மொழிகளும் பாட்டுக்களும் எழுதுவதிலும் என்னுடைய மனம் வெகுவாக ஈடுபட்டிருந்தது. உதாரணத்துக்கு இரண்டொரு தாலாட்டுக் கண்ணிகளைப் பாடிப் பார்த்துக் கொள். அதைக் கேட்டு உன்னுடைய மகள் உறங்குமா என்று பார்.

(1)

அத்தை இன்று வந்திடுவாள்
அழகான மருமகளும்
மெத் தையிலு மேலான
ம்டிமேலி ருந்திடலாம்.

(2)

சீடைமு றுக்குடனே
சின்னண்ணி வந்திடுவாள்

---

* வர்ணித்திருப்பதற்கு எதிரிடையாகக் கொள்க.

ஆடைஅ ணிகளுடன்
அத்தையும் வந்திடுவாள்

(3)

கன்னத்தைக் கிள்ளிடவே
காதைத்தி ருகிடவே
உன்னத்தை வந்திடுவாள்
உடனேஉ றங்கிடுவாய்

(4)

முத்தம்கோ டுத்திடவே
முகம்சாய்க்கும் வேளையிலுன்
அத்தானும் வந்திடுவான்
ஆசைமுத்தம் தந்திடுவான்

கடிதம் எழுதாததற்குரிய காரணத்தைக் குறித்து எழுதப் போகிற கடிதத்தை எதிர்பார்க்கும்.

செல்லையா

★

சரித்திரம்

காலதேவனின் சாட்சி; உண்மையின் சுடர்; ஞாபக சக்தியின் உயிரோவியம்; வாழ்க்கையின் ஆசான்; சமூகத்தின் தூதுவன்.

— அரசியல் வாதி

ராஜாக்களின் பெயர்ப் பட்டியல்; வருஷங்களின் கோவை; சூழ்ச்சி, வஞ்சகம், ஏமாற்று இவற்றின் நச்சுப் பொய்கை; பொய்யைக் கரைத்து, கற்பனையைப் படங்காட்டும் விளம்பர ஜாபிதா.

— ஓர் மாணவன் கட்டுரை.

நீரோட்டம்

ஆர். கே. விசுவநாதன்

ஆறுகளுக்குப் பெயர் போனது நமது தேசம். ஆற்றோரங்களில் தான் மக்கள் முதன் முதலில் வசித்து வந்ததாகக் கூறப்படுகிறது. விவசாயத்திற்கு மட்டுமல்லாமல் எல்லாவிதத் தொழிற் சாலைகளுக்கும் ஆறுகள் அவசியம். ஆறுகள் அதிகமுள்ள நாடுகளில் தொழிற் சாலைகளுக்கு வேண்டிய மின் சார சக்தியைச் சுலபமாகவும், குறைந்த செலவிலும் உற்பத்தி செய்து விடலாம். அமெரிக்காவில் மின்சார சக்தியை ஆறுகளைக் கொண்டுதான் அதிகமாக உற்பத்தி செய்து வருகின்றார்கள். நம் நாட்டில் சிறிது அளவுக்குத் தான் ஆறுகளை மின்சார உற்பத்திக்குப் பயன் படுத்தி வருகின்றோம்.

தண்ணீர் ஓடினாலும் தேங்கி நின்றாலும் அதற்குச் சக்தி அதிகம் உண்டு. ஆக்கல், அழித்தல் இரண்டையும் செய்ய வல்லமையுடையது. சில சமயம் ஆறுகளில் நீரோட்டம் கட்டுக் கடங்காமல் உண்டாகி, வெள்ளம் ஏற்படுவதை நாம் அறிவோம். பிரதி வருஷமும் வங்காளத்தில் தாமோதர நதியில் வெள்ளம் உண்டாகி அநேக கிராமங்கள் நாசம் அடைவதாகக் கூறப்படுகிறது. நீரோட்டத்தைப் போல காற்றோட்டம் கடுமையானால் புயற்காற்று என்கிறோம். வெள்ளம் ஏற்படுவதற்கு முன்னும், புயற்காற்று அடிப்பதற்கு முன்னும் எச்சரிக்கையுடன் இருக்க முடியும். புயற்காற்றைக் கட்டுப் படுத்தவே முடியாது. அடித்துத்தான் தீரும். ஆனால் வெள்ளத்தை வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து ஓரளவுக்குத் தடுக்க முடியும். புயற்காற்றைவிட வெள்ளத்தினால் சேதம் அதிகம் உண்டாகும். ஏனெனில் காற்றை விட நீர் பன்மடங்கு கனமான பொருள்.

ஆறுகள் உற்பத்தியாகும் இடங்களில் நீரோட்டம் கன கடுமையாக இருக்கும். மேட்டிலிருந்து பள்ளத்துக்கு நீர் ஓடி வரும் போது இயக்கத்தினால் அதிக ஆற்றலை (Kinetic Energy) மேற்கொள்ளுகிறது. இயக்கத்தினால் ஒரு பொருளுக்கு ஏற்படும் ஆற்றலின் அளவு பொருளின் நிறையையும், (Mass) செல்லும் கதியையும் (volouty) பொருத்து இருந்த போதிலும், மலைகளிலிருந்து கீழே ஓடிவரும்போது, தண்ணீரின் கதி அதிகமாக இருப்பதினால் இவ்வாற்றலும் அதிகமாக இருக்கின்றது. இதன் பயனாக கற்பாறைகள் முதலியவற்றை உருட்டி வருகின்றது. உருண்டு வரும் கற்பாறைகள் ஒன்றோடொன்று மோதி சிறு கற்களாகவும், கூழாங் கற்களாகவும் ஆகின்றன.

நீரோட்டத்தினால் அதில் கரையக்கூடிய பொருள்களெல்லாம் சுலபமாகக் கரைந்துவிடும். மற்றும் கரையோரங்களையும், தரையையும் தாக்கிக் கொண்டே வருவதினால் அவற்றையும் கரைத்து வண்டலாகத் தள்ளிக் கொண்டு வரும். நீரோட்டத்தில் பெரும்பாலும் இவ்வண்டல் மண்ணே அதிகமிருக்கும். தண்ணீர் சுத்தமாக இருக்குமிடங்களில் கரை

யோரங்களின் அழிவு அதிகம் ஏற்படாது. நீரோட்டத்தில் மணல், வண்டல் இவை வரும் போதுதான் கரையோரங்களில் அழிவு அதிகம் உண்டாகும். ஏனெனில் அவற்றின் இயக்க ஆற்றலும் (Kinetic Energy) சேர்ந்து நீரோட்டத்தின் ஆற்றல் அதிகரித்து விடுகின்றது. மேலும் மலைகளைத் தாண்டி சமவெளிகளில் ஓடிவரும்போதுதான் கற்கள், மணல், வண்டல் இவை அதிகமாக வரும். கரையோரங்கள் பலம் குறைந்து இருக்குமிடங்களில் அவை நீரோட்டத்தின் சக்தியைத் தாங்கமாட்டாமல் அதன் திசையையே மாற்றிவிடும். இத்திசை மாறுதல் கற்பாறைகளைத் தாண்டி வரும்போதும் ஏற்படலாம்.

அமெரிக்காவில் நீரோட்டத்தின் போக்கை அவ்வப்போது கண்காணித்து அனேக விவரங்களை அறிந்து வருகின்றார்கள். முக்கியமாக அதன் வேகம் ஆழத்தினால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்றும் அதில் கலந்துவரும் வண்டல் மண்ணின் அளவையும் அறிந்து வருகின்றார்கள். இத்துடன் அது தள்ளிக்கொண்டு வரும் பொருள்களின் திண்மை, பருமன், ஆற்றின் அடிப்பாகத்தின் அமைப்பு இவற்றுக் குண்டான விவரங்களையும் சேகரித்து வருகின்றார்கள். இக்காரியங்களுக்கென்று கரையோரங்களில் ஆங்காங்கே சோதனைச் சாலைகளை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். இவற்றில் வண்டல் மண்ணின் அளவைப் பற்றிய சோதனையை மட்டும் பார்ப்போம். இதைக் கண்டு பிடிப்பதற்கு சோதனைச் சாலையில் இரண்டு தொட்டிகளை ஆற்றின் சரிவுக்குத் தகுந்தவாறு வெவ்வேறு மட்டங்களில் கட்டிக் கொள்ளுவார்கள். ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தண்ணீர் ஓடி வருமாறு செய்வார்கள். தண்ணீரின் ஆழமும் ஆற்றிலுள்ளது போலவே இருக்குமாறு செய்யப்படும். மற்றும் நீரோட்டத்தின் பாதையின் இருபுறங்களையும் கண்ணாடித் தகடுகளால் அமைத்துக்கொள்ளுவார்கள். கண்ணாடித் தகடுகளின் மூலம் ஒளிக்கற்றை ஒன்றைப் புகச் செய்வார்கள். புகுந்து வெளிவரும் ஒளியின் பிரகாசம் புகுவதற்கு முன்னிருந்ததைவிடக் குறைவாக இருக்கும் என்று அறியலாம். நீரோட்டத்திலுள்ள வண்டல் மண்ணினால் உண்டாகும் ஒளி மாறுதலை மட்டும் அளந்து கொள்ளுவார்கள். இதைக்கொண்டு வண்டல் மண்ணின் அளவை நிர்ணயித்து விடுவார்கள். ஒளி மாறுதலை அளக்கும் கருவிக்கு ஒளிமின்கலம் (Photo Electric cell) என்றுபெயர். பேசும் படங்கள் காண்பிப்பதற்கு உபயோகப்படும் கருவியும் இதுதான். இதன் அமைப்பு மின்சார விளக்கைப் போலிருக்கும். இதன்மீது விழும் ஒளிக்குத் தகுந்தவாறு இக்கருவியில் மின்னோட்டம் ஏற்படும். இதை அளந்து ஒளியின் பிரகாசத்தில் ஏற்படும் மாறுதலைக் கணக்கிட்டு விடுவார்கள்.

இச்சோதனைச் சாலைகளில் நீரோட்டத்தினால் கரைகளுக்கும் தரைக்கும் ஏற்படும் அழிவைத் தடுப்பதற்கு வேண்டிய வழிகளைப் பரிசீலனை செய்து வருகின்றார்கள். இதனால் பெற்ற முடிவுகளைக் கொண்டு பல ஆறுகளை சீர்திருத்தி இருக்கின்றார்கள். அமெரிக்காவில் Tenresse valley என்று பெயர்போன இடம் உண்டு. அங்குள்ள சோதனைச்சாலையில் அமெரிக்காவிலுள்ள பெரிய ஆறுகள் எல்லாவற்றின் அமைப்பைக்

காட்டும் 'மாடல்கள்' இருக்கின்றன. ஆறுகளில் வெள்ளம் ஏற்படாதவாறு தடுப்பதற்கு உண்டான சோதனைகள் செய்து அவற்றைப் பயன்படுத்தி வருகின்றார்கள். மழை பெய்யும் காலங்களையும், இடங்களையும் அதன் அளவையும் முன்னதாகவே நிர்ணயித்து வெள்ளம் எந்த ஆறுகளில் ஏற்படக்கூடும் என்பதை அறிந்து அதைத்தடுக்க முன்னேற்பாடுகள் செய்து வருகின்றார்கள். இது போன்ற சோதனைகள் நம் நாட்டிலும் செய்து இங்குள்ள எல்லா ஆறுகளின் போக்கையும் கண்காணித்து வெள்ளப்பாழ் ஏற்படாதவாறு செய்ய வேண்டும்.

ஆற்றின் குறுக்கே அணை கட்டியே வெள்ளத்தைத் தடுத்து வருகின்றார்கள். அமெரிக்காவிலுள்ள எல்லா ஆறுகளுக்கும் அணைகள் உண்டு. அவற்றில் காலிபோர்னியாவிலுள்ள சஷ்டா (Shasta) அணை மிகவும் பெயர் போனது. ஸாக்ரமெண்டோ (Sacramento), பிட் (Pit), மிக்ளௌட் (Micloud) என்ற மூன்று ஆறுகளின் நீரோட்டத்தையும் இவ்வணை கட்டுப்படுத்துகின்றது. இவ்வணையின் உயரம் 560 அடி, நீளம் 3100 அடி. இவ்வணையைக் கொண்டு வெள்ளத்தைத் தடுப்பதுடன், கோடை காலத்தில் விவசாயத்திற்கு வேண்டிய நீரையும் தேக்கி வைத்துக் கொள்ளுகிறார்கள். தண்ணீரைச் சிறிது அளவும்கூட சேதம் செய்யாமல் முழுவதையும் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். இவ்வணையைப்போல பெரிய அணை நம் நாட்டிலும் உண்டு. அது தான் சுக்கூர் என்னுமிடத்தில் உள்ள லாயிட் அணை. நெடுங்காலமாகச் சிந்துநதியிலும், பஞ்சநதியிலும் வெள்ளம் ஏற்பட்டு பிரயோஜனமில்லாமல் எல்லாத் தண்ணீரும் சமுத்திரத்தில் விழுந்து கொண்டிருந்தது. தற்காலம் இந்நதிகளில் பல இடங்களில் அணைகள் கட்டி அவ்வணைகளிலிருந்து வாய்க்கால் வெட்டிக் கொண்டு போய் லக்ஷக்கணக்கான ஏக்கர் நிலத்தை சாகுபடி செய்து வருகின்றார்கள். இவ்வணைகளில் மிகப் பெரியது லாயிட் அணை. தென்னிந்தியாவிலுள்ள மேட்டூர் அணையைப் பற்றியும் அனைவரும் கேள்விப் பட்டிருக்கலாம்.

நீரோட்டத்தை போல தேங்கி நிற்கும் தண்ணீருக்கும் ஆற்றல் அதிகம். ஒரு பொருள் பூமி மட்டத்திலிருந்து உயரத்தில் இருக்குமானல் அதற்கு நிலைப்பு ஆற்றல் (Potenhal energy) இருப்பதாகக் கூறப்படும். இதன் அளவு பொருளின் நிறையையும் அது இருக்கும் உயரத்தையும் பொருத்து இருக்கும். பல அடி உயரத்துக்கு அணைக்கு அருகில் தண்ணீர் தேங்கி இருப்பதினல் அதற்கு நிலைப்பு ஆற்றல் உண்டாகிறது. இதைப் பயன் படுத்தி அணை கட்டிய இடங்களிலெல்லாம் மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகின்றார்கள். மேட்டூரில் உள்ள நீர்த் தேக்கத்தைக் கொண்டு பெருத்த அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கே அணைக்கருகில் சுமார் நூறு அடி உயரத்துக்குமேல் எப்பொழுதும் தண்ணீர் நிற்கும். அணைக்கு அடியில் நான்கு குழாய்களை அமைத்திருக்கின்றார்கள். அவற்றின் வழியாக பீறிட்டு வரும் தண்ணீரைக் கொண்டு டைனமோக்களை ஓட்டி மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

நீரோட்டத்தைக் கொண்டு நேராகவே மின்சாரத்தை உற்

பத்தி செய்யலாம். இதற்கு நீரோட்டம் நீர் வீழ்ச்சியாக இருக்க வேண்டும். நீர் வீழ்ச்சிகள் இருக்கும் இடங்களில் எல்லாம் மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகின்றார்கள். தென்னிந்தியாவில் பைகாராவிலும், சிவசமுத்திரத்திலும் இம்முறையில்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. சிவசமுத்திரம் என்னுமிடத்தில் காவேரி ஆறு நீர் வீழ்ச்சியாக விழுகிறது. இங்கே சுமார் நானூறு அடி உயரத்திலிருந்து தண்ணீர் கீழே விழுகிறது. அவ்வாறு விழும் தண்ணீரைக் கொண்டு பல் சக்கர உருளைகளைச் சுழற்றுமாறு செய்கிறார்கள். அவற்றுடன் டைனமோக்களை இணைத்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஸர் எம். விசுவேசுவர அய்யர், நம் நாட்டிலுள்ள நீர் சக்தியைக் கொண்டு சுமார் ஒன்றரைக்கோடி கிலோவாட் அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய இடமிருக்கிறது என்றும் அதில் மூன்று சதமே தற்சமயம் பயன்பட்டு வருகின்றது என்றும் கூறுகிறார். அமெரிக்காவைப் போல் நாட்டிலுள்ள நீர் சக்தி முழுவதையும் பயன்படுத்தி மின்சார சக்தியை உற்பத்தி செய்து எல்லாவிதத் தொழிற் சாலைகளையும் ஏற்படுத்த வேண்டியது நமது கடமையாகும். அப்பொழுதுதான் நாட்டின் வறுமைப் பிணி தொலையும்.

★

இலக்கியப் பணி

மற்ற உத்தியோகங்களுக்கு இல்லாத சிறப்பு, இலக்கியப் பணிக்கு உண்டு. அது சிறுவர்களின் அறிவுக்கதிர்; முதயோர்களின் இன்பப் பொழில்; காலதேவனின் வாடாத புஷ்பமாலை. நோயாளிகளின் ஔஷதம்; வீட்டுக் குள்ளும், வெளியிலும் சிரிப்பைத் தரும் அட்சய பாத்திரம். விளையாட்டு மெத்தையிலும், படுக்கையிலும் எங்கும் அது ஊன்று கோல்.

துன்பச் சுமையை இறக்கி, இன்பக் காற்றை சுவாசிக்கச் செய்யும் இயல்பு பெற்றவை. ஏமாற்றத்தின் கசப்பையும், விரக்தியின் வைரத்தையும் மாற்றி வாழ்விலே பிடிப்புக் கொள்ளும்படி செய்யும்.

ஒரு அறிஞர்

வெண்புறா

கே. ஸி. எஸ். அருணசலம்

[பூம்பட்டுத் திரையை நீக்கிச் சோழ இளவரசன் விஜயாலயன் வானத்தைச் சாளரத்து வழியே நோக்குகிறன். நீலக்கடலில் மிதக்கும் வெள்ளித் தோணியைப்போல் வானப் பரப்பிலே தவழ்கிறது வளர்மதி. சிருஷ்டியின் தலைவனுகிய ஒரு பித்தன் பெருமையறியாது வாரியிறைத்த வைரமணிக் குவியலென மினு மினுக்கின்றன தாரகைகள். சோழ நாட்டின் தலைநகராகிய உறையூரிலே, தங்கமணி விளக்கின் சுடரைத் தூண்டிவிட்டுத் தேம்பிய மனத்துடன் மஞ்சத்திலே சாய்கிறன் சோழ மன்னன் வீரவர்மன்]

வீர: குமார!

விஜய: (திரும்பி) தந்தையே!

வீர: பேரிடி ஒன்று இன்று என் வாழ்விலே மின்னுது இடித்து விட்டது.

விஜய: மன்னியுங்கள். சென்ற ஆண்டு வசந்த விழாவின்போது நம் அரண்மனையில் புத்த சரிதையை நாடகமாகக் கண்டோமல்லவா? அன்றே மின்னலும் மின்னி விட்டது. அந்த நிகழ்ச்சியும் அதன் பின் நான் கொண்ட புத்த சமய ஆராய்ச்சியும் எனக்கு இந்த முடிவைத் தந்தன.

வீர: களிக்கூத்தாகக் கருதி நடத்தினேன். நறுமணமுள்ள தாழை மடலுள்ளே நாகம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. சோழவள நாட்டின் பொன் சிம்மாதானம் உனக்காகக் காத்திருக்கையில் நீ ஒரு துறவியாகத் திரிவது இயலாது.

விஜய: தந்தையே! மாறும் நிலையிலே என் முடிவு இல்லை.

வீர: பிச்சை வாழ்விற்காக நீ பிறக்கவில்லை. உனது பேராண்மையும், கலை ஞானமும், சோழ நாட்டின் செங்கோல் வழியாக மக்களுக்குப் பயனுக வேண்டும் குமார! பகை மன்னரின் மணி மகுடங்கள் பட்டுச் சிவக்க வேண்டியவை உனது பாதங்கள்.

விஜய: பெற்ற அன்பினுலே கவிதா வர்ணனை செய்கின்றீர். அரச போகத்திலே இனி என் உள்ளம் அயராது.

(வீரவர்மனும் மெதுவாக எழுந்து சாளரத் திரையை நீக்கி நெட்டுயிர்ப்புடன் வானத்தைப் பார்த்தவனுய்)

வீர: விஜயா! அதோ! அந்த அழகுப் பிறைமதியைப் பார். இன்பவளம் கொண்ட இளம் பருவம். இனிமேல் தான்......

விஜய: சினம், பேராசை, வஞ்சனை, காமம் இவற்றின் புயலிலிருந்து விடுபட்டு ஒதுங்கி வாழ வேண்டுகிறேன். வான வீதியிலே கட்டின்றிப் பறக்கும் வானம்பாடி போல நான் இந்த

உலகக் கட்டுக்கள் நீங்கித் திரிந்தாக வேண்டும்.

வீர: காமத்தை வெல்வதாகக் கனவா? பருவத்தின் உணர்ச்சி வெள்ளத்திற்குத் தத்துவ அணையா? விஜயா! அது மஹரிஷிகளுக்கும் இயலாத மாபெரும் செயல். ஞானிகளுமே தவறி விடுகிருர்கள், அப்பா!

குமார! உன் சிந்தை, அரச வாழ்வை வெல்லலாம். ஆடம்பரத்தை வெல்லலாம். ஆனல் அழகி ஒருத்தியின் கொல்லும் கடைக் கண்ணை வெல்ல முடியாது. கடும் வேகத்துடன் ஓடும் காட்டாறு நீண்ட காலம் நிலையாது.

விஜய: எந்த அழகான நினைவினுலும் எனது இதயத்தைத் தாங்கள் நிறைக்க முடியாது.

வீர: விஜயா! நினைவு கொள். சிந்தையை அடக்கிய சித்தார்த்தன்கூட அழகி யசோதரையின் செங்கனி இதழிலே சொக்கியவன்.

விஜய: தந்தையே! இனி என்னவாயினும் என் உறுதி குலையாது. தங்களுக்குப் பின் சோழ நாட்டின் அரியணையை அழகு செய்ய என் தம்பி அபராஜிதன் இருக்கிருன். இனி எது நிகழினும் நிகழ்க. இறைவன் அருளும்போது நாம் மறுபடி சந்திப்போம்.

[வீரவர்மன் தன் மைந்தனைத் தழுவியவாறு கண்ணீர் ததும்ப]

வீர: விஜய! என் கண்ணே! கோழைத் தனத்திலே பிறந்ததல்ல உன் தந்தையின் கண்ணீர். உன் இளம் வாழ்வை ஏன் பாலை வனமாக்க விரும்புகிருய்? இந்தத் தீச் சோதனையிலே என்றேனும் ஒரு நாள் உன் மனம் சலித்தே தீரும். அப்போது நீ வந்து இந்தச் சோழ நாட்டின் மணி மகுடத்தை ஒப்புக்கொள். ஆண்டவன் உன்னைக் காப்பாளுக! போய்வா!

விஜ: (தன் தந்தையை வணங்கி) தந்தையே! என்று என் சிந்தையின் வலிமை சிதறுகிறதோ அன்றே தங்களது திருவடிகளைச் சரண்புகுவேன்.

[அரண்மனையிலிருந்து ஒரு அழகிய குதிரை காற்றெனக் கிளம்புகிறது. வீரவர்மன் மீண்டும் ஒருமுறை தாளாத துயருடன் சாளரத்தின் வழியே வானத்தைப் பார்க்கிருன். மெல்லிய கருமுகிற் சிதறல் ஒன்று மெதுவாகத் தவழ்ந்து பிறைச் சந்திரனை மறைக்கிறது. "நல்லதோர் வீணை செய்து, அதை நலங்கெடப் புழுதியில் எறிந்து விட்டேன்" என்று தன்னுள்ளே கூறிக் கொள்ளுகிருன்.]

* * *

ஓயாது தத்துவ விவாதங்களில் ஆழ்ந்து நாடெங்கும் திரிந்து இறுதியாக விஜயாலயன் சேர நாட்டில் அமரநாதர் என்னும் பௌத்த ஞானியிடம் சமய மாணவன் ஆகிருன்.

"வாருங்கள் உலகீரே! பல்வேறு திசை முகங்களிலிருந்தும் பிறந்தோடும் சிற்றருவியும், காட்டாறும், ஜீவ நதியும் எல்லாம் இறுதியிலே பரந்த கடலின் மார்பகத்தே கலப்பதுபோல உலகெங்குமுள்ள உயிர்க்குலமெல்லாம் பல்வேறு சமய வழிகளிலே போய் இறுதியிலே இறைவனது திருவடித்தாமரைகளிலே கலந்தமைகின்றன. அன்பு, அன்பு, என்று ஆடுவோம், ஆணவப் பேய்மடியச் சாடுவோம்" என முழக்கியவாறு விஜயன் தன் சமயப் பிரசாரத்தைத் துவக்குகிருன்.

(மதுரைமா நகர். வசந்த காலம்; ஒரு பூவனம், கீழ்வானிலே தழலில்

காய்கின்ற தங்க வட்டம் போல கதிரவனின் காட்சி. எங்கும் ஒரே பசுமை! பச்சிளம் மலர்ச் செடிகள் எல்லாம் இன்பம் நிறைந்த இளவேனி லுக்குத் தேன் நிறை புது மலரைக் காணிக்கையாக ஏந்தி நிற்கின்றன. மாங்கொம்பிலிருந்து ஒரு தீங்குயில் வசந்தத்திற்கு மங்கலம் கூறுகிறது. தன் ஆசிரியர் ஆணைப்படி வசந்த விழாச் சொற்பொழிவுக்காக மதுரை வரும் விஜயாலயன் ஒரு சோலை வழியே வருகிறான். சற்று தூரத் தில் எதிரே ஒரு சிவிகை வருகிறது. அதே கணத்திலே புதர் மறைவி லிருந்து வந்த ஒரு அம்பு விஜயனின் காலில் ஊராய்ந்து விர்ரென்று அரு கிலிருந்த ஒரு வெண்புருவைச் சாய்க் கிறது. தனக்கு நேர்ந்த துன்பத் தைப் பாராமல் அந்தப் புருவை எடுத்தணைத்து அதற்குச் சிகிச்சை செய்கிறான். மறைவிலிருந்து வந்த வேடன் ஒருவன் வணங்கி நிற்கிறான்)

வேடன்: சாமீ! நீங்க வந்ததைப் பாக்கிலீங்க. புருவுக்கு வச்ச குறி உங்க காலிலே பட்டிடுச்சு (கீழே விழுந்து வணங்குகிறான்)

[எதிர்ப்புறமாக அவ்வழியே ஒரு சிவிகை வந்து நிற்கிறது. அதிலிருந்து பாண்டியன் குமாரி சித்திராங்கதை தோழி சகிதமாக இறங்கி வருகிறாள். துணைவந்த காவலாளர் அருகே நிற் கிறார்கள்.]

சித்திராங்கதை: சுவாமி! என்ன நடந்தது? தங்களது காலிலி ருந்து ஏன் இரத்தம் கசிகிறது!

விஜ: ஒன்றும் இல்லை. கவனக் குறைவின் விளைவுதான்.

[வேடன் நடந்ததைச் சொல்லி அவனை அடிபணிகிறான்]

விஜ: (வேடனிடம்) அப்பா! வருந் தாதே. மாசற்ற இந்தப்புருவின் உயிரை மாய்க்க முயன்றதற் காக நீ மனம் கசியவில்லை. ஒரு மனிதனுக்கு நேர்ந்த சிறு துன் பத்திற்காக இரங்குகிறாய். வின் னைதான்! எல்லா உயிர்க் குலத் திற்கும் இரங்க இறைவன் ஒரு வன்தான் போலும்! நீ போக லாம். (வேடன் செல்லுகிறான்)

அரசகுமாரியின் ஆணைப்படி ஒரு காவலன் ஒரு பச்சிலை பிழிந்து விஜய னின் காலுக்குச் சிகிச்சைசெய்கிறான்.

சித்: சுவாமி! எதிர்பாராத துன் பம் தங்களுக்கு நேர்ந்து விட் டதே!

விஜ: வருந்துவதற்கு ஒன்றும் இல்லை. பாவம்! அவன் அறி யாது செய்த பிழை. தங்களது பேரன்பிற்கு வந்தனம். தாங் கள் யார்?

சித்: பாண்டியன் குலசேகரன் மகள் சித்ராங்கதை நான். வசந்தகாலமாகையால் அருகிலி ருக்கும் தேவாலயம் சென்று திரும்பி வருகிறேன், தாங்கள்...

விஜ: சேரநாட்டிலிருந்து வசந்த விழாவிற்கு இங்கு வந்தவன். ஒரு புத்த சமயத் தொண்டன். (நிமிர்ந்து நோக்குகிறான். இள வரசியின் கண்களிலே காவ்ய அழகு ததும்புகிறது)

சித்: சுவாமி! தங்கள் கையிலிருக் கும் அந்த வெண்புருவைத் தாங் கள் தந்தால் மகிழ்ச்சியுடன் நான் வளர்ப்பேன். சோர்ந்து கிடக்கும் அதனை என் மனம் விரும்புகிறது.

விஜ: (அவளது கைகளில் புரு வைக் கொடுத்து) பாண்டிய குமாரி! இறைவன் திருவருள் என் வழியே இன்று இந்த இளம் உயிரை மீட்டது. உனது மலர்க் கைகள் இந்த இளம் புரு வின் வேதனையைத் தீர்த்துப் புத்துயிர் அளிக்கட்டும்.

[இருவரும் ஒருவரை ஒருவர் வணங்குகின்றனர். சித்திரா பல்லக்கில் ஏறுகிருள், இறுதியாக ஒரு முறை இருவர் கண்களும் கனிவுடன் சந்திக்கின்றன சிவிகைசெல்லுகிறது]

விஜ: (தனக்குள்) ஒரு மஹா கவியின் அழகு வர்ணனையிலிருந்து பிறந்தாளோ? பச்சென்ற திருமுகம். சேயிதழ். வெண்ணகை. பார்வை யென்னும் நச்சம்பு. அமுதூறப் பேசுகின்ற மடமொழி. பஞ்சுக்கும் அஞ்சும் திருப்பாதம். கஞ்சமலர் முகத்துள்ளே கனிகின்ற கடலினும் பெரிய கண்கள். பொன் உயிர் ஓவியம் போல் என் முன்னே வந்து மின்னலாய் மறைந்தாள். மலரைக் கண்டு தாவும் வண்டைப் போல எனது மனம் அவளையேன் பின் தொடர வேண்டும்? (சோர்வுடன் செல்லுகிருன்)

[காலத்தோடு சேர்ந்து மனிதனும் மாறுகிருன். அறிவை அழகு வென்று விட்டது. சமயத் தொண்டிலே அவனது மனம் சோர்வுகாண ஆரம்பிக்கிறது. அவனது துறவு வாழ்விலே ஒரு அயர்வு அவனது மனதிலே தோன்றுகிறது. ஓயாது விஜயனது மனதிலே சித்திராங்கதையின் இன்ப நினைவே குடிகொள்ள ஆரம்பிக்கிறது. சேரநாடு சேர்ந்ததும் தன் ஆசிரியரை வணங்கித் தன் சோர்வை வெளியிட்டு நிற்கிருன்.]

அமர: (அன்புடன்) மகனே! உன் வாழ்வில் ஆத்ம ஞானத்தின் மேல் எழுந்த வெறும் ஆசை-துறவு நிலையைப் பற்றிய ஆர்வம்-காட்டாற்றைப் போல் பெருக் கெடுத்தது. நீ அதை, ஜீவ நதியாகக் கருதி விட்டாய். இப்போது ஆசை யென்னும் கோடை வெப்பத்தாலே உனது ஞானப்பற்று என்னும் காட்டாறு வறட்சியடைந்து விட்டது. ஆசையின் வேகம் அற்ப காலமே இயங்கினுலும் அற்புதக் கவர்ச்சியோடுதான் தோன்றி மயக்கும்.

விஜ: பற்றற்ற தூய வாழ்விற்காகத் தேடி அலைந்தேன். ஆனுல் முடிவிலே என்றும் நீங்காத ஒரு பந்த உணர்ச்சியையே எனது பாழ் மனம் பெற்றெடுத்து விட்டதே! என் செய்வேன்? அறிவு சொல்லியது. ஆனுல் ஆசை கேட்கவில்லை.

அமர: ஆம்! விஜயா! பலவர்ண மாயங்களோடு திகழ்கின்ற வானவில்லை நாம் பார்க்கின்ருேம். ஆனுல் உண்மையில் வானிலே வில் ஏது? அறிவு இதனை உணறுகிறது. ஆனுல் கண்கள் அறிவதில்லை. அது போலவே இம்மையின் பத்தின் நிலையாமையை அறிவு நன்கறிந்திருந்தாலும் ஆசை அதன் மினுக்கிலே சொக்கி விடுகிறது. வருந்தாதே. செதுக்கச் செதுக்கத்தான் வைரம் சீர் நிறையும். பக்குவம் தவறியும் பாசாங்கு செய்வது பெரும் பாவம். கள்ளமற்ற உனது உள்ளத்தினுல் நாம் பெரிதும் மகிழ்ந்தோம். மீண்டும் உலகை நோக்கிச் செல்லும் என் அன்பிற்குரியவனே! உன்னை இறைவன் அருள் பாதுகாக்கட்டும்.

(விஜயன் வணங்கி விடை பெறுகின்ருன்.)

* * *

[சித்ரா பௌர்ணமி. பாண்டியன் குலசேகரனின் அரண்மனைத் தெப்பக்குளத்திலே அழகிய தோணி ஒன்று தவழ்கிறது. துவளும் ஒரு பச்சிளங் கொடி போல நீலப்பட்டாடை அணிந்து ஒரு பஞ்சணையிலே சாய்ந்திருக்கிருள் சித்ராங்கதை. அருகே

தோழிகள் கமலினியும், பூங்கோதையும். வானிலே பூரணச் சந்திரனின் உலாத்துவங்குகிறது,]

கமலி : சித்ரா !

சித் : என் கமலினி ?

கமலி : ஏன் இவ்வாறு சோர்வுடன் காணப்படுகிருய் ?

சித் : ஒன்றுமில்லை, கமலினி. மனதிலே ஏனோ மகிழ்ச்சி இல்லை.

கமலி : மறைக்காதே! சித்ரா!

பூங்கோதை : பாண்டிய குமாரியின் கண்களிலே கடந்த சில நாட்களாகவே களிப்பில்லை.

கமலி : புண்பட்ட ஒரு வெண் புருவை ஒரு புத்த சந்யாசி யிடமிருந்து வாங்கி வந்தாளே அன்றிருந்துதான். அந்த அழகிய புருவைப் பார்த்துப் பார்த்து ஏனோ ஏங்குகிருள். அது சொல்லும் இன்பக் கதைதான் என்னவோ ?

பூங்கோ:(கொஞ்சலாக) ஒருவேளை இளமையின் ஏக்கமோ ?

[செந்தாமரை மலர் மேல் புரளும் கருமுகிலை, ஒரு காந்தள் மலர் கொண்டு விலக்குவது போல் தன் திருமுகத்தில் இளங் காற்ருல் வீழ்ந்து புரளும் கருங் கூந்தலைத் தன் மென் கரத்தால் விலக்கியவாறு]

சித் : பிதற்ருதே! பூங்கோதை!

பூங்கோ : (கமலினியிடம்) ஆம், கமலினி. அன்று என் மனம் பெரிதும் வேதனை யடைந்து விட்டது.

(இதைச் சொல்லி ஏனே மறு புறமாகத் திரும்பிக் கொள்கிருள். சிறிது கழித்து)

சித் : ஆஹா! அழகே உருவான அந்தப் புத்த சமய இளைஞரைப் பார்த்தாயல்லவா கமலினி? நீயும் தான் பார்த்தாயே பூங்கோதை? அரச குமாரனுக்குரிய அழகின் பொலிவை யல்லவா அவரிடத்தில் கண்டேன்! கண்ணையும் கருத்தையும் கவரும் கட்டழகு. கருணை பொங்கிக் கனிகின்ற கண்கள். துறவியின் கோலத்திலே மறைந்து நிற்கும் அரச கம்பீரம். கமலினி! அவரது தோற்றத்தைக் காணும் போது ஒரு குளிர்ந்த அருவி என் உள்ளத்திலே சிலுசிலுத்துப் பரவுவது போல் தோன்றியது.

(இதைச் சொல்லும் போது ஏதோ ஒரு வேதனை அவளது சொல்லைத் தடுக்கிறது. அப்போது தோணி ஒரு புறமாகத் திரும்புகிறது. அழகோடு மலர்ந்த அல்லிப் பூக்களின் கும்பல் இடையிலே தாமரைப் பூவொன்று சோம்பி நிற்கிறதைப் பார்த்து)

சித் : அதோ! கமலினி. அகம கிழ்ந்து நிற்கும் அல்லி மலர்க ளருகே சாம்பி நிற்கிறதே தாமரை.

கம : ஆசைக் காதலனாகிய சந்திர னைக் கண்டு அல்லி கொஞ்சி நிற்கிறாள். கதிரவன் நினைவாலே கமலம்......

[குறும்பாக கலகல வெனச் சிரிக்கிறாள் கமலினி.]

சித் : (தனக்குள்) பற்றற்றுத் திரியும் கதிரவன் மேல் கமலத்திற்குக் காதலாம். எப்போது அவளுக்கு ஆத்ம சாந்தி.

[முணங்கியவளாய் வானத்தை நோக்குகிறாள். அவளது ஏங்கிய இரு கரு நீலக் கண்களிலே நிலவின் வெண் அலைகள் தாம் படிந்தனவோ? வேதனையோடு ஒரு நெட்டுயிர்ப்பு. படகு செல்லும் மெல்லிய அலைகளால் பளிங்கு நீரிலே பிரதிபலிக்கும் பால் நிலவு குலுங்குகிறது.]

★

(காணாத தன் கன்றைக் கண்ட தாய்ப் பசுவைப் போல வீரவர்மன் தன் முதல் மைந்தன் விஜயாலயனை அணைத்து மகிழ்கிறான். சோழ நாடெங்கும், பாட்டும் கூத்துமாகக் கொண்டாடினன் வீரவர்மன். நாட்கள் செல்லுகின்றன. மெல்ல மெல்ல விஜயன் அரச வாழ்வில் ஆர்வம் செலுத்துகிறான். தன் மனத்தின் எண்ணத்தை இன்னும் தன் தந்தையிடம் தெரிவிக்கவில்லை.

சோழ மன்னன் அவைக்களத்திலே ஒரு நாள்.

[ஒரு ஒற்றன் கலக்கமுடன் வந்து வணங்கி]

ஒற்றன் : வாழ்க எமது சோழப் பேரரசு! மன்னர் மன்ன! நமது சிற்றரசாகிய மகதபுர மன்னன் பரகேசரி, கப்பம் செலுத்த மறுத்ததாகவும், சித்திரை விழாவின் போது தன் குடிகள் முன்னிலையில் எமது வணக்கத்திற்குரிய சோழப் பேரரசை எள்ளிப் பேசியதாகவும், வந்த குற்றச் சாட்டுகளை நேரில் விசாரிக்கச் சென்ற இளம் மன்னர் அபராஜிதர் சிறைப் படுத்தப்பட்டு பாண்டியநாடு கடத்தப்பட்டார். பாண்டியன் குலசேகரன் தன் பால்ய நண்பனான பரகேசரிக்கு உடந்தையாக நிற்கின்றான். இளவரசனாகிய விஜயாலயரை இழந்து வருந்திய சோழநாடு ஆண்மை குன்றிக் கிடப்பதாக அவர்கள் கனவு. பரகேசரியும் இப்போது பாண்டிநாடு சென்றிருக்கிறான்.

[இடியெனத் தாக்குகிறது கொலுமுகத்தை இச்செய்தி. கருநாகம் போலச் சீறி எழுகின்றான் வீரவர்மன்.]

வீர : என்ன? நான் கனவுதான் காண்கின்றேனா? காட்சிதானா? பெருமைக்குரிய என் அவைக்களப் பெரியீர்! நினைக்கவும் நாணத்தகும் இந்த நீசச் செயலைக் கேளுங்கள். ஆண்மையற்ற பேடிகள். அபராஜிதன் பாண்டிய நாட்டிலா சிறையிலிருக்கிறான்? பரகேசரியின் நெறியற்ற செய்கைக்குப் பாண்டியன் குலசேகரனும் உடந்தையா? வலிய ஒரு போரைப் பாண்டியன் வருந்தியழைத்துள்ளான். சோழப் பேரரசனின் இளைய மகனுக்கு பாண்டியனது சிறைக் கூடமா அரண்மனை? வஞ்சனை. விஜயாலயா?

[விஜயன் எழுந்து வணங்கி நிற்கிறான்.]

வீர: உன்னையே பிரதான படைத் தலைவனாக நியமித்துப் பாண்டி

நாட்டின் மேல் படையெடுக்கும்படி ஆணையிடுகின்றோம். கள்ளத்தனம் செய்த கயவர்களுக்கு உனது கை வாளும் வேலும் பதில் சொல்லட்டும்.

[சபையைப் பார்த்து]

வந்ததொரு நல் விருந்து வீரர்காள், நம் வாளுக்கும் வேலுக்கும்! நம் படைக் கலங்களின் யானைப் பசியை நாம் பாண்டி நாட்டிலே தீர்ப்போம். பகைவரது மார்பிலிருந்து பொங்கும் பசும் இரத்தத்தாலே புலிக்கொடி உயர்த்திய சோழ மன்னன் போர்க்களத்திலே பழி தீர்ப்பான். வாழ்க சோழ குலவன்மை! முழங்குக போர் முரசம்!

[நிகழ்ச்சிகளை யெல்லாம் நினைத்துப் பார்க்கிறான் விஜயன். இனிச் செய்வதற்குப் போரைத் தவிர ஒன்றும் இல்லை. நிலைமை கட்டு மீறிவிட்டது. பகைவன் பாண்டியன் சித்ராங்கதையின் தந்தை. அவன் சிறைச்சாலையிலே அருமைத் தம்பி அபராஜிதன். காதல் ஒருபுறம் - கடமை மறுபுறம்.]

* * *

பாண்டி நாட்டுப் போர்க்களம். முரசும் சங்கும் முழங்குகின்றன. எங்கும் அணி வகுத்த தங்க மணித் தேர்வரிசை. மின்னி ஒளிர்கின்றன இரு மன்னரின் வாட்படைகள். வெண் முகிலைப் போன்ற கண்கவரும் குதிரைகள். போர் தொடங்குகிறது. முதலிரண்டு நாட்களின் கடும் போருக்குப் பின்னே முதுமை மறந்து காளையாகப் பாய்ந்து போரிட்ட வீரவர்மன் பரகேசரியை மார்பைப் பிளந்து தன் வேலால் கொல்கிறான். நண்பன் மடிந்த பெருஞ் சினத்தால் பொங்கி யெழுந்த பாண்டியன் கடும் போருக்குப் பின்னே வாட் போரிலே வீரவர்மனது சிரத்தை யறுத்துத் தள்ளுகிறான். சினத்தால் சிவந்த கண்களுடன் வீரவர்மனது தலை போர்க் களத்திலே புரளுகிறது. சோழ சைன்யம் நிலைகுலைந்து பின்னிடுகிறது. போர்க்களத்திலே மற்றொரு புறத்திருந்த விஜயன் தாவி வந்து தன் தந்தையின் உடல் மேல் வீழ்ந்து முகத்தினை அணைத்து ஏங்குகிறான். கொடுஞ் சினம் ஊழி வெள்ளம் போல் உள்ளத்திலே பொங்குகிறது.

[உணர்ச்சியும், ஆண்மையும் நிறைந்த குரலில் பேசுகிறான் படை வகுப்பைப் பார்த்து]

மறுநாள் சோழ சைன்யம் அணிவகுத்து நிற்கிறது. ஒரு அழகிய வெண் குதிரையின் மேல் போர்க் கோலம் பூண்டவனாகி விஜயாலயன் நடு நாயகமாக நிற்கிறான். தூய்மையும் கருணையும் பயின்ற அவனது உள்ளத்திலே வெகு நாட்களுக்குப் பின்னே மூண்ட வெஞ்சினம் கொப்பறையில் காய்கின்ற எண்ணெய் போலக் கொந்தளிக்கிறது.

விஜய: மதிப்பிற்குரிய சோழ நாட்டுப் படைத் தலைவர்களே! வீரர்களே! போர்க்களத்திலே இன்று நான்காம் நாள். பகைவன் பரகேசரி அழிந்தான். அதோடு நமது சோழகுல தீபமான அரசர் பெருமான் வீரவர்மரையும் களப்பலி தந்து விட்டோம்.

நமது வணக்கத்திற்குரிய சோழமன்னர் வீர்வர்மருக்கு ஆத்ம சாந்தி பாண்டியன் குல சேகரனது மார்பிலேயிருந்து பொங்கும் பச்சை ரத்தத்திலே

தான். பாண்டியனுக்கு நாம் தரவேண்டிய பரிசு பழிக்குப் பழி இதோ! இங்கு ஓங்கிப் பறக்கும் சோழவள நாட்டின் புலிக்கொடியை வணங்கி, இன்றே போர் முடித்து வாகை சூடுவதற்காக வாளெடுப்போம் கீழ் வானிலே தவழும் கதிரவன் மாலையிலே மேற்குக் கடலிலே விழுவதற்கு முன்பாகவே நாம் நம் பகைவர்களின் இரத்திலே குளித் தெழுவோம். சோழ நாட்டு வீரமணிகள் வெற்றியை அன்றி மரணத்தை என்றும் சிந்தித் தறியாதவர்கள். நீடு வாழ்க சோழ வளநாட்டு நெடும் புகழ்!

[புதிய ஆவேசத்தோடு படைகள் பாண்டிய சைன்யத்துடன் மோதுகின்றன. நால்வகைப் படைகளும் ஒன்றுடன் ஒன்று மோதித் தாக்குகின்றன. பேய் மகன் போலத்திரிந்து பாண்டியப் படையை விஜயன் அழிக்கின்றான். அவன் சென்ற இடமெல்லாம் சிவப்பு வெள்ளம். பாண்டியற்குத் தோல்விக் குறிகள் திட்டமாகத் தெரிகின்றன. சோழ சைன்யத்தின் ஒருபகுதி பாண்டியனது நகருள்ளே புகுந்து விடுகிறது. பாண்டிய வீரர்கள் கலங்கிப் பின்னிடுகிறார்கள். இது கண்ட குலசேகரன் ஒரு தங்கத் தேரேறி விஜயனுடன் போராடுகிறான். மிகவும் பயங்கரமான போருக்குப்பின்னே பாண்டியனது குதிரைகளை மாய்த்து அவனது சிரத்தை விஜயாலயன் அறுத்துத் தள்ளுகிறான். பாண்டியனது பரந்த மார்பில் புரளும் அழகிய வேப்ப மாலை, இரத்தத்தால் சிவந்தலைய அவனது உடலம் தேர்த்தட்டிலே சாய்கிறது. பாண்டிய வீரர்கள் முடிவாகக் கலங்கிச் சிதறி ஓடுகிறார்கள்.]

பாண்டிய நாட்டில் புகுந்த படைகளுடன் தெருவெல்லாம் போர் நடக்கிறது. பெண்களும் மாற்றுடை யணிந்து சோழ நாட்டுப் படைகளை எதிர்க்கிறார்கள். பாண்டியனை மாய்த்துச் சில நாழிகை கழித்து வெற்றி மகிழ்வுடன் குதிரை மீது திரியும் விஜயன் திடீரென்று குதிரையை நகர்த்தித் தாவுகிறான். குதிரை மரண வேதனையுடன் கீழே சாய்ந்து மடிகிறது. அதன் உடலிலே பெரிய ஒரு வேல் பாய்ந்திருக்கிறது, மறுகணம் விஜயனின் வில் வளைகிறது. 'அம்மா!' எனக் கூவியவாறு எதிரிலே வந்து விஜயனைக் கொல்ல வேல் எறிந்த ஒரு அழகிய இளைஞன் மார்பில் பாய்ந்த அம்புடன் குதிரையிலிருந்து சாய்கிறான்.

மறுகணம் ஒரு ஒற்றன் விஜயனை வணங்கி "வணக்கம் இளவரசே! அபராஜிதர் விடுவிக்கப்பட்டுப் பாசறையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். நகருள் போர் இன்னும் பூரணமாக நின்றுவிடவில்லை. பெண்களும் போர்க் கோலம் பூண்டு எதிர்க்கின்றார்கள். அதோ! சற்றுமுன் தங்கள் கணையால் வீழ்ந்தவளும் ஒரு இளம் பெண் தான்!" எனக் கூறுகிறான்.

விஜய: பெண்ணா? ஓ! இது என்ன பெரும் பாவம்.

[வியந்தவனாய் ஓடுகிறான். ஒற்றனும் பின் தொடருகிறான். அந்த மாற்றுடை யணிந்த பெண் தன் மார்பிலிருந்து இரத்தம் வழியக் கிடக்கிறாள். ஆவலோடு அவளைக் குனிந்து பார்க்கிறான் விஜயன். ஆ! நினையாத ஒன்று. உலகமே அவனுக்கு இருளுகிறது. கணைபட்ட மயில் போலே துடிதுடித்து மெய்மறந்து கிடக்கிறாள் சித்ரா!]

* * *

[விஜயனது பாசறை: சிறை மீண்டு வந்த அபராஜிதன் தன் தமையனைக் கட்டி யணைத்து மகிழ்ந்து, விஜயனது துயரத்திற்குக் காரண மறியாமல் வியப்பெய்தி நிற்கிறான். துன்பமே வடிவாக நிற்கும் விஜயனருகே சோழ நாட்டு அரசவைத்தியன் சோர்வுடன் நிற்கிறான். சித்ரா தன் மார்பிற் கணைபட்ட காயத்திற்குக் கட்டுண்டு இன்னும் மெய்மறந்து கிடக்கிறாள்.

வைத் : (விஜயனை வணங்கி) யுவ ராஜா! மனித முயற்சி அனைத்தையும் செய்தேன். எனினும்... விதிதான் வெல்லும். இன்னும் சில நாழிகைகளே தான்......

[விஜயன் கண்ணீர் வழிய சித்ராவின் அருகே மண்டியிட்டு கனிவாக]

சித்ரா!

(சில வினடிகள் கழித்துத் தன் மான் விழிகளை அகல விரிக்கிருள் சித்ரா!)

சித் : (சோர்ந்து மெல்லிய குரலில்) யார் அது? நான் எங்கே யிருக்கிறேன்?

விஜய: சோழ இளவரன் பாசறையில்!

சித்ரா : (நிகழ்ந்தன யாவும் அவள் மனதிலே மின் வட்டம்போல் பின்னிச் செல்கின்றன. படுக்கையை விட்டு எழ முயல்கிருள்) கண்ணியம் தவறவேண்டாம் சோழ மன்னரே! சித்ரா பாண்டிய குமாரி என்பது நினைவிருக்கட்டும் [அடிபட்ட குயில் சினந்து பேசுவது போலிருக்கிறது அவள் பேசுவது]

விஜய : தெரியும் சித்ரா! என்னை நீ எங்கேனும் பார்த்ததாக நினைவிருக்கிறதா?

சித் : பாண்டிய குமாரிக்குச் சோழ மன்னனைச் சந்தித்துப் பழக என்றும் தேவை யிருந்ததில்லை!

விஜய : (அன்பு கனிய) பதருதே! சித்ராங்கதா! ஒரு கதை கேள். பாண்டிய நாட்டில் ஒரு நாள் காலையிலே, ஒரு சோலையிலே ஒரு வேடனின் அம்புபட்டுச் செம்புண் அடைந்த ஒரு அழகிய வெண்புருவை அவ்வழி வந்த ஒரு புத்த இளம் துறவி எடுத்தணைத்தான். அவன் விரலிலும் அவ்வம்பால் இரத்தம் கசிந்துக்கொண்டிருந்தது. அப்போது பல்லக்கில் தேவாலயம் சென்று திரும்பிய ஒரு இளம் பெண் அதைக் கண்டு அந்த புத்த துறவியிடமிருந்து அவ் வெண்புருவைத் தான் வளர்க்கப்போவதாகப் பெற்றுக் கொண்டு...........

சித் : பதட்டமுடன், அரசே! அரசே! அது நான் தான். அது நான்தான். அந்தப் புத்த ஞானியைத் தங்களுக்குத் தெரியுமா? எங்கே அவர்?

விஜய : சித்ரா! உன்முன் நிற்கும் சோழ இளவரசனுகிய நான் தான் அந்தப் புத்த சந்நியாசி! இன்னும் தெரியவில்லையா?

சித் : (வெறுப்புடன்) பொய். பொய். வஞ்சனை. ஆசையை ஒழித்த ஆத்ம ஞானி அவர். அரசிளங் குமாரர் அல்ல. புத்த ஞானிக்குத் தவப்பள்ளி போர்க்களமல்ல!

(அப்போது மெய் சிலிர்க்க சித்ராவிடம் நிகழ்ந்ததை சுருக்கமாகச் சொல்லுகிருன் விஜயன்.

சித் : (சொல்லறிய வியப்பாலும், மகிழ்ச்சியாலும்) என் அன்பர் பெருமை மிகுந்த சோழ மன்னரா? என் இன்பக்கனவு நினைவாயிற்ரு? (தாங்க முடியாத மகிழ்ச்சியால் அவள் நெஞ்சம் அதிர்ந்து சோர்கிறது. மெல்ல மெல்ல அவளது நிலை தடுமாறுகிறது.)

சித் : ஆஹா! நானே புண்யவதி என் ஆருயிர் அனைய தங்களை நான் மீண்டும் காணப் பெற்றேனு......ஆ.........

விஜய: (அவளுடைய செங்கரங்களைப் பற்றியவாறு) பற்றற்றுத் திரிந்த மனத்தோடு இருந்த என் முன்னே வந்து சித்ரா! நீ ஒரு பச்சை மோஹினியாக மயக்கினாய். என் இதயம் ஆண்டவனது அரவிந்தத் திருவடிகளையும் மறந்து அல்லும் பகலும் உன் இன்பக் கனவாலே ஏங்கியது. உன் கருத்து என்ன என்பதையும் சிந்திக்க மறந்தேன். மீண்டும் உலக வாழ்வை நோக்கித் திரும்பிப் பெருமை மிகுந்த சோழ நாட்டின் இளம் மன்னனாக வந்து பாண்டிய குமரியாகிய உனக்கு மாலை சூட்ட முடிவு செய்தேன். எனது நாட்டை யடைந்த சிறிது காலத்திற்குள் உன் தந்தையோடு பரகேசரி பகையானான். என் தம்பி சிறைப் பட்டான். இந்தப்போர் இன்றியமையாத தாயிற்று. பாண்டிய நாட்டில் எவ்வாறேனும் உன்னைக் காணலாம் என்று நினைத்தேன். உனது தந்தையை மாய்த்து, உனது வேலுக்கும் தப்பி, உன்னை, என் ஆருயிரை, அமுத வடிவை அம்புக்கு இரையாக்கினேனே!

[துன்பம் அவனைப் பேசவொட்டாது தடுக்க, அவனது கண்களிலே பெய்த மழை, மார்பை நனைக்கிறது.]

சித்: அன்ப! மாசற்ற என் மனத்திலே அன்று தங்களைக் கண்ட போது ஒரு பெரும் மகிழ்ச்சி பிறந்தது. ஓயாது தங்கள் நினைவாலே என் உள்ளம் ஓய்ந்தது. தங்கள் ஆத்மீக வாழ்வு ஒரு பெண்ணாசையாலே அவலமாய் விடும் என்று நான் கனவிலும் கருத வில்லை. துறவிற்கும் மோகத்திற்கும் இடை உள்ள நெடுந் தூரம் எனக்குத் தெரியாது போகவில்லை. எனவே என் பேராவல் என்றும் வெளியிட முடியாத ஒன்று. என் காதல் கனவிலும் கருத முடியாத ஒரு கற்பனை. உலகின் முன் என் ஆசை ஒரு கேலிக் கூத்தாகத்தான் தோன்றும் என முடிவு செய்தேன். கருதுவாரற்றுக் காட்டிலே பூத்துக் கருகும் அழகிய மலர்போல என் பேராசை எனது உள்ளத்திலேயே மடிய வேண்டியதே என்று எண்ணினேன். மூண்டது போர். பரகேசரி மடிந்தான். எமது சேனையும் சிதறிவது. பாண்டியற்குத் தோல்விக் குறிகள் தெளியத் தோன்றின. படையின் ஒருபகுதி நகருள்ளும் புகுந்தது. மானங் காக்க விரும்பிய பெண்கள் அனைவரும் போர்க்களம் புகுந்தனர். ஆகையாலே நானும் களம் புகுந்தேன். பகைவனுக்கு அடிமை யாவதா? மானம் போயும் வாழ்வரோ மறக்குடிப் பெண்டிர்?

ஆஹா......... காணமுடியா ஒன்றினைக் காணப் பெற்றேன். வீரக் குடிக்கேற்ற விழுப் புண்ணும் அடையப் பெற்றேன். காதலன் கையாலே கடுங்கணையும் பாயப்பெற்றேன். தங்களது மாசற்ற அன்பாலே எனது உள்ளமும், உயிரும் குளிர்ந்தன. ஆஹா! யான் பெற்ற இப்பெரும் பேறு இவ்வுலகில் யார் பெற்றார்?

(அவள் கண்களில் ஊற்றெனக் கண்ணீர் பெருகுகிறது. அவளின் கரங்களை முத்தமிட்டு)

விஜ: என் பாலைவன வாழ்விலே பனித் தென்றலாய்த் தவழ்ந்தவளே! என் அன்புக் கடலில் உதித்த அவிர் வெண் திங்களே! ஆண்டவனின் அருள் நினைவையும்

இழந்தேன். இம்மை இன்ப மாகிய உன்னையும் இழக்கப் போகிறேனே. ஐயோ! சித்ரா! நீ என்னை மன்னிப்பாயா? காதலை வேண்டிக் கரைந்த கன்னி ஒருத்திக்குக் கொல்லும் கொடுங்கணையைப் பரிசாகக் கொடுத்த கொடியேனை மன்னிப்பாயா? புண் சிறிது ஒரு புறுவுக்குச் செய்த ஒரு வேடனுடன் ஞானம் பேசி, பெண் ஒருத்தியைக் கொல்ல வில் வளைத்த இந்தப் பெரும் பாவியை மன்னிப்பாயா?

(சித்ராவின் உயிர்ச்சுடர் ஒடுங்க ஆரம்பிக்கிறது. உடலம் நடுங்குகிறது. சொற்கள் சோர) சித்ரா: அன்ப! கவலைவேண்டாம். அன்று தாங்கள் தந்த வெண்புறு என் அந்தப் புரத்திலே ஒரு மணிக் கூண்டிலே வளர்கிறது. என் ஆசைக் காதலின் அழகுச்சின்னம் அது. என் ஆசை அவலமாய்ப் பறந்து போயிற்று. என் கனவு நனவாகிக் காலனுக்கு இறையாகப் போகிறது. இனி அந்தப் புறுவையும் நிரந்தர விடுதலை செய்து வானத்திலே களிப்புடன் திரிய விட்டு விடுங்கள். உயிர்த் துணைவ! விதியின் விஸ்வ வடிவத்தின் முன்னே மனிதன் ஓர் கைப் பொம்மை. இந்தத் துயர் நிறைந்த வாழ்விலிருந்து நான்...... விடை பெறுகிறேன்.

(சித்ராவின் ஆவிச்சுடர் அணைகிறது.

துயரமென்னும் எரிமலை விஜயனின் நெஞ்சிலே வெடித்துக் குமுற அந்த வாடிய கொடி மேலேவீழ்ந்து கதறுகிறான். அபராஜிதன் முதலிய யாவரும் கண்கலங்கி நிற்கிறார்கள்.)

விஜய: சித்ரா! முள் நிறைந்த என் வாழ்வுப் புதரில் மோனமொடு பூத்தசைந்த கள்நிறைந்த புதுமலரே! நீ கழிந்தாயோ?

என் காரிருள் வாழ்வில் வந்த கனகமணி விளக்கே! உன் ஆருயிர்ச் சுடரதுவும் அழிந்ததுவோ?

நச்சென இவ்வாழ்வை வெறுத்து இச்சை எதுவுமின்றித் திரிந்த நான் பெற்ற பச்சைக் கிளியே! நீ பறந்தாயோ!

ஐயோ! அரியணையை விரும்பி அரச வாழ்வை விரும்பி, பொன்னையும், மணியையும் விரும்பி இறுதியிலே இந்தப் போர்க்களத்தையும் விரும்பினேன்.

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கினேன். கண்ணாரக் காணும் கட்டழகியை இனிக் காணேன்.

வெண்புறுவின் துயர்கண்டு புண்ணான மனத்தினேன் இன்று இந்தச் செங்குருதிக் காட்டினையும் சிருஷ்டித்தேன். புத்த தேவனின் அமுத மொழி துறந்து, இறைவன் திருவடிகளை மறந்து, பித்தனாய்க் கத்துகின்றேன் கண்ணே! சித்ரா! எல்லாம் உனக்காகத்தான். ஐயோ! விளையாடி விட்டாயே விதியே!

[உன்மத்தனைப் போல எழுந்து தன் தம்பியை அணைத்தவனாய் "அபராஜிதா! எதை நினைத்து வந்தேனோ, எதற்காக என் ஆத்ம லக்ஷ்யத்தைத் துறந்தேனோ, எதற்காக அல்லும் பகலும் உள்ளம் நொந்தேனோ அதை, என் ஆருயிர் அமுதத்தை, நானே! இந்தப் பேயினும் தீயவனாகிய நானே! என் கையாலே சாவின்காலடியிலே தள்ளிவிட்டேன். ஆம்! எழுதிச் செல்லும் விதியின் கையை மனிதன் அழுது தடுக்க முடியாது. பாண்டிய நாட்டின் அரண்மனையில் சித்ரா வளர்த்த வெண்புறு

அவளது அந்தப் புரத்திலே மணிக் கூண்டில் இருக்கிறது. அதனை விடு வித்துவிடு. பாண்டி நாட்டு மக்களிட மும், அரச குலத்தாரிடமும் கருணை காட்டு. எல்லா உயிர்க்கும் இனிய வளுக வாழ்க்கை நடத்து. இறைவன் உன் வாழ்வையேனும் சீரும், செம்மை யும் உள்ளதாகச் செய்யட்டும். இந் தத் துன்பம் நிறைந்த பேயுலகத்தி லிருந்து நானும் விடை பெறுகிறேன் வருந்தாதே.]

[உடனே திரும்புகிருன். 'அண்ணு' என வீறிடுகிருன் அபராஜிதன். கணப்பொழுதில் விஜயனது கூரிய வாள் விஜயன் மார்பினுள்ளே புதை கிறது. வாடித் துவண்டு கிடந்த ஒரு பச்சிளங்கொடிமேலே ஒரு குலேந்த கொழு கொம்பு வீழ்ந்தது.]

மறுநாள்:

பாண்டிய நாட்டின் அரண் மனையில், கொடிக் கம்பத்திலே சோழ மன்னனின் புலிக் கொடி கம்பீரமாக அசைந்தாட ஆரம்பிக் கிறது. அப்போதே அரண்மனை யின் அந்தப்புரத்திலிருந்து ஒரு அழகிய வெண்புரு விடுபட்டு வான வெளியிலே வனப்புடன் பறந்து செல்கிறது!

★

கிழங்கு மகசூல்

மேட்டுப்பாளையம் வாசி: இவ்வருஷம் உருளைக் கிழங்கு சக்கைப் போடு போட்டது. கோலிக்குண்டு பருமனுள்ள கிழங்குகள், சுண் டைக்காய் பருமனுள்ள கிழங்குகள்; இது தவிர பொடிராசியும் மகசூலில் கிடைத்தது!

கலைக்கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்...

அத்தியாயம் ஏழு

வடநாட்டுப் பிரயாணம்

சாயங்காலம் பம்பாய்த் துறைமுகத்தில் கலைக்கோயிலார் வந்து இறங்கினார்கள். உடனே அண்ணாமலையும் முத்துவும் இன்னும் பல நண்பர்களும் ஜயமாலைசூட்டி வரவேற்றனர்.

மணி அனைவரையும் அன்புடன் நோக்கி தோழர்களை அறிமுகப்படுத்தினான். மணியுடன் வந்தவர்கள் வாணி, கமலம், கண்ணன், ஜெங்கின்ஸ் தம்பதிகள், வில்ஸன் தம்பதிகள், பால் என்ற விஞ்ஞானி, பீடர் என்ற யந்திரப்புலவன், மார்கெரட் என்ற சீமாட்டி, தொண்டர் சிலர். இவர்கள் பம்பாய் தாஜ்மஹால் ஓட்டல் மாடியில் தங்கினார்கள். உடனே பம்பாய் மாதுங்காத் தமிழர்கள் வரவேற்றனர். மராட்டியர்களும் குசராத்தியர்களும் பத்திரிகையில் பார்த்து தமிழ் மணியை ஒரு பிரசங்கம் செய்யச் சொன்னார்கள். மணி எனது உலகயாத்திரை என்பது பற்றிப் பேசினான். அதையே முத்து கலைக்கோயில் பத்திரிகையில் போடும்படி அனுப்பினான்.

பிரசங்கம் முடிந்த பிறகு சில கனவான்கள் வந்து அடுத்த நாள் ‘எனது தாய்நாடு’ படம் பார்க்க விரும்பினார்கள். பெரிய நாடக சாலையில் படம் ஓடியது. மறுநாளும் படக்காட்சி நடந்தது. மணி தன் கலைக்கோயில் விஷயமாகச் சில சேட்டுகளிடம் பேசினான். மராட்டிய குசராத்தியச் செல்வர்களையும் துணை செய்யும்படி அழைத்தான். அந்தந்த மொழிப் புலவர்களைக் கண்டான். நான்கு மராட்டியர்களும் ஐந்து குசராத்தி புலவர்களும் கலைக்கோயிலுக்குத் தங்களை அர்ப்பணித்தனர். தமிழ் மணி சபர்மதிக்குவந்து மஹாத்மா காந்தியைத் தரிசித்தான். அவரது மெய்யொளியும் எளிமையும் அவ

னைக்கவர்ந்தன. "தொண்டு செய்" என்ற திருவாசகம் பெற்று மஹாத்மாவை வணங்கி மணி பிருந்தாவனம் வந்தான். அங்கே பிஜிலி — மீரா, கலைக்கோயிற் பணிக்கே தன்னை அர்ப்பணித்தாள்.

தமிழ்மணி கோகுலம் துவாரகை முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து சிந்து மாகாணத்திற்குச் சென்ருன். அங்கிருந்து பஞ்சாலத்திற்கு தாவினன். காரணம் தமிழகத்தில் வெள்ளையன் செய்துள்ள குறும்புகள் பத்திரிகைப் பிரசாரத்தால் அடங்கிய பிறகே தெற்கே வர வேண்டுமென்றுதான். முத்தையா மூலம் சாமிநாதனுக்கும் மற்ற நண்பருக்கும் அண்ணுமலை மூலம் இராமநாதபுரம் சிவகங்கை மன்னருக்கும் நன்றிச் செய்தியுடன் கலைக்கோயிலுக்குத் தமிழகத்தைத் தயாராக்க வேண்டும் என்று செய்தி வேண்டுகோள்விடுத்தான்.

பஞ்சாபில் மணி முகிஞ்சதாரு, ஹரப்பா ஆகிய இரண்டு பழைய தமிழர்களின் புதை பொருள்களைப் பார்த்து கலைக் கோயிலுக்கு ஓர் கட்டுரை எழுதினன். கூடவந்த வெள்ளைக்காரருக்கு 'எங்கள் தமிழர் வசித்தநிலம் இது. இந்தியா முழுதும் ஒரு காலம் தமிழ் மயமாயிருந்தது. ஆரியர்களும் இஸ்லாமியர்களும் முதலில் இந்தப் பிராந்தியங்களுக்கே வந்து குடியேறி மெல்ல மெல்ல வட இந்தியாவை ஆக்ரமித்துக் கொண்டு தமிழரைத் தெற்கே தள்ளினர்' என்று காட்டினன். பஞ்சாபில் தயானந்தர் கல்லூரி, சீக்கியரின் கோவில்கள் எல்லாம் பார்த்து விட்டு மகாகோசலத்திற்கு வந்தான் மணி. அயோத்தி கோரக்பூர் ஹரித்வாரம் காங்கிரி குருகுலம் எல்லாம் பார்த்துக் கொண்டு காசிக்கு வந்து சேர்ந்தான்.

காசியில் ஆதிமூர்த்தி நல்வரவேற்ருர். அங்கே படமும் சொற் பொழிவும் நடந்தன. காசி சர்வகலாசாலை விசுவநாதர் கோயில், குமாரசாமி சத்தரம் எல்லாம் பார்த்தான். ஒரு காலம் குமரகுருபரர் அக்பர் முன் கம்பராமாயணம் அரங்கேற்றியதையும் அக்பர் தந்த இடத்தில் இப்போது குமாரசாமி கோட்டம் எழுந்து விளங்குவதையும் வெள்ளை நண்பருக்குச் சொன்னன். காசியில் இந்திப்புலமையும் சமஸ்கிருதப் புலமையும் பெற்ற தமிழ் வித்வான்கள் மணியின் பணிக்கு வந்து சேர்ந்தனர். அவர்களை அன்புடன் சாமிநாதனிடம் அனுப்பி விட்டுக் கல்கத்தா சேர்ந்தான். கல்கத்தா முன்பே பார்த்ததாயினும் இப்போது வங்காளிகளின் மொழிப்பற்றையும் தேச பக்தியையும் கண்டு வியந்தான். ஆனல் அவன் போன சமயம் சித்தரஞ்சனதாஸன் இறந்த நாள். அதற்காக மாபெரும் அனுதாபக் கூட்டம் நடந்தது. அதில் மஹாத்மா, மோதிலால், ஜவஹர் சேன்குப்தா சுபாஷ் முதலிய தலைவர்கள் பேசக் கேட்டான். நாட்டுத் தலைவரை ஒருங்கே கண்டது மகிழ்ச்சி தான். மணி சாந்திநிகேதனத்திற்கு வந்து தாகூரை மீண்டும் தரிசித்துத் தான் கொண்டுவந்த 'எங்கள் தாய் நாட்'டைக் காட்டினன். தாகூர் மிக்க மகிழ்ச்சியடைந்து 'தமிழ் மணி செய்துள்ள பணிக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும்?' என்ருெரு கேள்வி போட்டார். உடனே மணி 'தங்கள் ஆசிரமத்தில் தமிழும் வங்கமும் தெரிந்த அந்தப் புலவரைக் கலைக்கோயிலுக்குத் தாருங்கள். அவருடன் இரண்டு அசல் வங்காளிகளும் வந்து தமிழ்

கற்கட்டும். இங்கே தமிழ்ப் பீடம் ஏற்படுத்துங்கள். செலவை நானே ஏற்பேன்' என்ருன் மணி. தாகூர் அவ்வாறே செய்தார். மணி தனியாகத் தன் கலைக்கோயில் பிளானைத் தாகூரிடம் காட்டினுன். அவர் சொன்ன குறிப்புகளையும் வில்ஸனிடம் தெரிவித்தான். வில்ஸன் சாந்தினிகேதனையும் காங்கிரியையும் காசி சர்வ கலாசாலையையும் கேம்ப்ரிட்ஜ் ஆக்ஸ்போர்டையும் நினைப்பில் கொண்டு அமைதியில் நீண்ட நேரம் யோசித்து நிலையான பிளான் வரைந்து விட்டான்.

தாகூரின் ஆசிபெற்று மணி பூரியைத் தரிசித்துக் கொண்டு ஆந்திர தேசத்தில் விசாகப் பட்டணம், மசூலிபட்டணம், பெஜவாடா கோகநாடா முதலிய பட்டணங்களில் படங்காட்டி தமிழும் தெலுங்கும் தெரிந்த நான்கு புலவர்களையும் உடனழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்தான். சென்னையில் பெரிய வரவேற்பு நடந்தது. எனினும் மணி அதிக உற்சாகங்காட்டவில்லை.

“என்னருமைத் தமிழர்காள்! உலகெல்லாம் சுற்றி அனுபவச்சுமையுடன் வந்திருக்கிறேன். என் கனவு நிலையானது. தமிழருக்கு உலகில் பெருமை தேடி விட்டேன். ஆனுல் கலைக்கோயில் நாட்டி நான் கோரிய திட்டங்களைச் செய்து முடித்த பிறகு தான் உங்கள் வெற்றி மாலைக்கு உரியவனுவேன். ஆதலால் உங்கள் அன்பிற்கு நன்றி கூறி நேராக என் காரியத்திற்குச் செல்கிறேன். எனக்கு நீங்கள் தேவையான உதவி தரவேண்டும். கலைக் கோயில் பத்திரிகையில் எல்லா விபரமும் வரும் என்று நேராகத் திருச்சி சென்ருன்.

அத்தியாயம் எட்டு

செயலுக்குப் பிறகு பேச்சு

அச்சமயமே ஐயரின் அருவி — மரணம் பத்திரிகைகளில் வந்தது. ஐயர் தமிழுக்காக எழுப்பிய குருகுலம் தகர்ந்த செய்தி தமிழ்மணியை வருத்தியது. தமிழ் மணி ஐயரிடம் மிகவும் பற்றுதல் உடையவன். சென்னையிலிருந்தே தமிழ் மணிக்கு நாட்டின் இயற்கை தெரிந்தது. தமிழன் தமிழனை மதிப்பதில்லை. ஒருவன் உலகப் புகழ் பெற்று வந்தாலும் பொருமை கொண்டு எதிர்க்கும் மகானுபாவர்கள் இங்கிருக்கிருர்கள். ஆயிரம் குரல்கள் வாழ்த்தினுலும் சபிக்கும் சில குரல்கள் இருக்கின்றன. திருச்சியில் முத்தையா கந்தன், அருணுசலம் முதலிய அன்பர் தமிழ்மணியை நல்வரவேற்றனர். அதே கூட்டத்தில் சொக்கு வெள்ளையன் கூட்டம் கருப்புக் கொடி பிடித்து “கம்மனுட்டிபுருசா” போ என்று கூச்சலிட்டது விநோதமாயிருந்தது. இந்த மனிதரே மேடையேறி மறுமண உரிமை பெண்ணுரிமை பேசுவோர். இன்னெரு கூட்டம் வெள்ளையரை எதற்காகக் கூட்டி வந்தாய்? நமது நாட்டில் கலைக்கோயிலுக்கு ஆளில்லையா? என்று கூச்சலிட்டது. இன்னெரு கூட்டம் வாணியைக் கேலி செய்தது. இவற்றிற்கிடையே உண்மைத் தமிழர் மணியை மனமார வரவேற்றுப் பெரிய மைதானத்தில் மேடை போட்டுபசரித்தனர்.

ஸ்ரீ பி. டி. ஸ்ரீநிவாச ஐயங்கார் தலைமை வகித்து தமிழ்மணியின் சேவைகளை மெச்சினர். 'ஒரு தமிழன் மனோதைரியத்தால் இங்கிருந்து புறப்பட்டு, பர்மா மலேயா அமெரிக்கா இங்கிலாந்து பிரான்சு ஜெர்மன் ரஷ்யா முதலிய நாடுகளில் தமிழர் நாகரிகத்தைப் படமுடன் பேசி விளக்கி வந்தான். தமிழர் கலையை உலகிற்கு அவனே அறிமுகப் படுத்தினன். இங்கும் வடநாட்டைச் சுற்றி நமது கலையை விளக்கி, வெற்றிக் கொடி நாட்டி வந்தான். அவனைத் தமிழர் முழுமனதுடன் வரவேற்று அவனது கலைக்கோயிலை அமைக்கத் துணைசெய்ய வேண்டும். அது தான் தமிழருக்குப் பெருமை. நாளெல்லாம் தமிழுக்குப் பாடுபடும் ஒருவனைப் பத்திரிகைகளில் தூற்றுவதும், புறங்கூறிப் புன்மை செய்வதும், அலட்சியம் செய்வதும், அவன் கலையைப் புறக்கணிப்பதும் நம்மை நாமே இழிவுறுத்தலாகும். இன்று சிலர் கேலி நையாண்டி செய்து கறுப்புக் கொடி பிடித்து, கூச்சலிட்டது மிகவும் வெறுக்கத் தக்கது. அதில் மணியின் உறவினர் இருவர் பங்கு கொண்டது கண்டிக்கத் தக்கது. திருச்சித் தமிழர் தமிழ் மணியை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர். திருச்சி தான் தமிழ் நாட்டுத் தலைநகர். கலைக்கோயிலை இந்த ஜில்லாவிலேயே காவிரிக் கரையில் நாட்டும்படி வேண்டுகிறேம்.

சாமிநாதன் எழுந்து தமிழ்மணியின் அருமை பெருமைகளையும் அறிவுத் திறனையும் மெச்சிய பிறகு வீராவேசமாகப் பேசினன்.

எனது தங்கை வாணி கலை ஆர்வங் கொண்டு மணியின் கலைக் கோயிலுக்கே தன்னை அர்ப்பணித்தாள். இருவரும் மிக பரிசுத்தமான அன்புடன் உலகிற்கு உதாரணமாக வாழ்கிறார்கள். இங்கே சிலர் கொடிய கட்டுக் கதைகளால் இருவரையும் தூற்றித் திரிவது கண்டிக்கத்தக்கது. எனது தங்கை எங்கும் யாருடனும் ஓடிப் போகவில்லை. நானே நண்பர் மணியிடம் அழைத்துச் சென்றேன்; அதே மாதிரியே இதோ கமலமும் கலைக் கோயிலில் இசைப்பணி செய்கிருள். இவர்களால் மணியின் பாட்டு வெள்ளைக்காரர் கூட மெச்சும்படி ஒலித்தது. தமிழிசையின் இன்பத்தை இவர்களால் உலகெல்லாம் பருகியது. இவர்களைக் கேலி செய்யும் தமிழர் என்ன சாதித்தார்கள். சும்மா ஊர் வம்படிப்பதைத் தவிர இவர்களால் தமிழ் ஓர் அங்குலங்கூட முன்னேருது. தமிழர்களே வாணி தமிழ் மணியின் கலைப்பணியில் பங்கு கொண்டு இந்தியப் பெண்மைக்கே பெருமை தேடினள். நாளை நீங்கள் 'எனது தாய் நாடு, 'இந்தியப் பெண்மை' என்ற இரண்டு படங்களைப் பார்ப்பீர்கள் அவற்றில் உண்மை விளங்கும். கந்தன் நடத்தும் கலைக்கோயில் பத்திரிகையில் மணியின் சேவையால் உலகில் தமிழின் பெருமை எப்படி உயர்ந்திருக்கிறது என்பதைக் காண்பீர்கள். நாமெல்லாம் நல்ல காரியங்களில் ஒற்றுமையாயிருந்து நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் உலகம் மதிக்கும்படியான புகழ் தேடவேண்டும். நாங்கள் நாட்டும் கலைக்கோயிலில் நீங்களெல்லாம் பங்கு கொள்ள வேண்டும். எந்தாய் வாழ்க.'

இன்னும் சிலர் பேசிய பிறகு கரகோஷங்களுக் கிடையே மணியெழுந்து சுருக்கமாகப்பேசினன். 'நண்பர்காள், இதோ மைதானத்தில் பல்லாண்டுகளாக எத்த

ளையோ மேடைப் பேச்சுகள் நடக்கின்றன. நாம் வேண்டுமட்டும் பேசித் தீர்த்து விட்டோம். இப்போது என் மனம் செயலை நாடுகிறது. என் பிரயாண அனுபவங்களைப் பத்திரிகைகளிலும் நூல்களிலும் படத்திலும் காண்பீர்கள். என் உள்ளத்தையே இங்கே சுருக்கமாக விளக்குகிறேன். உலக மொழிகளில் தமிழுக்கு ஆங்கிலம் போன்ற இடம் வேண்டும். தமிழர் என்ருல் இன்னும் உலகிற்குத் தெரியாமல் இருக்கிறது. கூலிகளே தமிழர் என்று பலர் நினைக்கிருர்கள்.

நமது சமுதாயத்தைக் கேலி செய்து நம்மைக் காட்டுமிராண்டிகள் என்று படம் பிடித்துக் காட்டும் வெள்ளைக்காரர் ஏராளம். நாம் பெண்களை முதலைவாயில் தள்ளுவதாகவும் தீயில் போடுவதாகவும் பொய்ப் பிரசாரங்கள் நடக்கின்றன. தமிழ் ஒலியே எட்டாத நாடுகள் பல. இவற்றையெல்லாம் மாற்றி தமிழர், உலகின் நாகரிக சமுதாயத்தார். தமிழ் மொழி உலக மொழிகளில் முந்தியது, இன்றும் நல்ல வளர்ச்சி பெற்று வருகிறது என்று நமது சமுதாய வாழ்வையும் படம் பிடித்துக் காட்டி விளக்கினேன். பிறகு தான் உலகிற்குத் தமிழ், தமிழர், தமிழகம் என்பதை மதிக்கத் தெரிந்தது. நண்பர்காள்! இன்னும் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் மிகப்பல. அதற்கு நாம் பல நாட்டினரின் கூட்டுறவும் பல மொழிகளின் துணையும் பெற வேண்டும். நான் தமிழருக்காகவே உலகின் கட்டுறவை விரும்புகிறேன். மனித சமுதாயம் முழுதும் திருக்குறள் வடிவில் அமைய விரும்புகிறேன். அருட்பாவின் ஞான ஜோதியை உலகெல்லாம் பரப்ப விரும்புகிறேன். தமிழகத்தில் பலகலைகளையும், கலைத் தொழில்களையும் வளர்த்து ஆயிரக் கணக்கான பேர்களுக்கு அறிவும் உழைப்பும் பிழைப்பும் தந்து மடமையிருளையும் வறுமைத் துயரையும் ஓட்ட விரும்புகிறேன். அதற்காகவே கலைக்கோயில் நாளையே தொடங்கப் போகிறது. கலைக்கோயில் அமைக்க இதோ இங்கிலாந்திலிருந்து பெரிய சிற்பி வந்திருக்கிருர். அவரிடம் நமது தமிழர் சிற்பத் தொழில் கற்கலாம். தற்காலக் கலைகளை நாம் வெள்ளைக்காரரிடமே கற்க வேண்டியிருக்கிறது. காலத்திற்கேற்ற பல யந்திரத் தொழில்களுக்கும் தக்க நிபுணர்களை ஏற்பாடு செய்திருக்கிறேன். மாதம் பதினயிரம் ரூபாய் செலவில் கலைக்கோயில் நான்கு கோடி ரூபாய் முதலுடன் நடக்கும்.

ஆனுல் பணத்திற்காக நான் யாரையும் யாசகம் கேட்கவில்லை. சந்தா கேட்கவில்லை. நமது நாட்டில் எதற்கெடுத்தாலும் சந்தாவாயிருக்கிறது. கலைக்கோயிலார் பல தொழில்களில் பாடுபட்டுழைத்தே பலனைக் கொண்டு கோயிலை நிர்வகிப்பார். தகுதி பெற்ற தமிழர் வாருங்கள். தியாக புத்தியுள்ள தமிழர் வாருங்கள். சாதி, மத, சாத்திர, கோத்திர, நாடு, நிற பேதமெல்லாம்ஒழிக. சுத்தசன் மார்க்கம் பொலிக! கலைக்கோயிலில் எல்லாரும் ஒருகுலமே. எல்லாரும் அருட்பணியாளரே. எல்லாரும் எட்டுமணி நேரம் பொது நலப்பணியாகத் தொழில் செய்து தேவையளவு உண்டுடுத்தி நிம்மதியாக வாழலாம். முதலில் ஐநூறு தமிழ் வாலிபர்கள் வேண்டும். பிறகு ஆண்டுதோறும் தொழில் விரிவாகும். ஏராளமான தமிழர் கோயிற்பணி செய்யலாம். தமிழர்காள்! கலைக்கோயில் தமிழன்

னையின் உலகாலயம். அதற்கு நீங்கள் மனதாரத் துணை செய்யுங்கள். பெருந்தொகையிருப்பவர் ஒரு தொழிலுக்கேற்ற பணத்தைத் தாருங்கள். தொழிலின் லாபத்தில் பங்கு தருவோம். அறிவாளர் அறிவைக் கோயிலுக்கு அர்ப்பணியுங்கள். அறிவுக்கேற்ற தொழிலும் பயனும் கிடைக்கும். குறிப்புணர்த்தியாயிற்று. இனிச் செயலிற் புகுவோம். தமிழர்காள்! உங்கள் அன்புக்கு நன்றி. கலைக் கோயில் எழுந்து இவ்வேலை செய்து ஊன்றிக் கொண்ட பிறகு நாம் வெற்றி முரசடிப்போம். செயல் முன், பேச்சு பின்னே தான். செயலே பேசுக! எந் தாய் வாழ்க!

இத்துடன் கூட்டம் கலைந்தது.

மறுநாளே திருச்சியில் ஒரு பெரிய பழைய மாளிகையை மணி பதினாயிரம் ரூபாய்க்கு வாங்கினான். அது காவேரிக்குச் சமீபமாகவும் இருந்தது. கலை நண்பர்களை அதில் சௌகரியமாக வசிக்கச் செய்தான். அவர்கள் செலவுக்குத் தினம் இரண்டு தரம் படம் ஓட்டிக் காட்டவேண்டும். மாதம் நான்கு தரம் இசையரங்கு நடத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்தான். பிறகு வில்ஸன், ஜம்பு, சாமிநாதன், முத்தையா, அண்ணாமலை எல்லாரும் மோட்டாரில் காவேரிக்கரைகளைச் சுற்றி ஓர் அழகான இடத்தைக் கண்டுபிடித்தனர். அது மலைச் சாரலில் நதிக்கு அருகே அரைமைல் தூரத்தில் அழகாயமைந்தது. மணி உடனே அங்கே ஆயிரம் ஏகராக்கள் வாங்கினான். வில்ஸன் போட்ட பிளான்படி வேலைசெய்ய 500 வேலையாட்களை அமர்த்தினான். தான் ஜப்பானிலும் அமெரிக்காவிலும் பெற்ற பணத்திரளைக் கொண்டு வேலையை விரைவாக நடத்தினான்.

அன்பர் கருத்துடன் எல்லாம் கவனித்தனர். வில்ஸனுடன் நான்கைந்து தமிழ்ச் சிற்பிகளும் உழைத்தனர்.

தமிழ்மணி கட்டிடப் பொறுப்பெல்லாம் அவர்களிடமே விட்டுத் தெற்கே சென்றான். அவனை மதுரையில் அமோகமாக வரவேற்றனர். மானாமதுரை சிவகங்கையில் ஜமீன் வரவேற்பு நடந்தது. மதுரையில் தன் அன்னை விசாலாட்சி பெயரால் ஒரு இசைமாளிகை நாட்டி, 'தாயே கலைக்கோயில் உருவானது; உன்பணி நிறைவேறியது' என்று வணங்கினான். சிவகங்கை மன்னர் கலைக்கோயிலுக்கு ஒரு நாடகமன்றம் கட்டப் பணந் தந்தார். இருபது தொழிலாளரைத் தந்தார். இராமநாதபுரம் மன்னர் தமிழ் மணியைத் தழுவி முதுகில் தட்டிக் கொடுத்து "உன்னால் நமது சமஸ்தானமே பெருமை பெற்றது. உன் கலைக்கோயிலில் இசையரங்கு, தமிழ்க்கல்வி இரண்டிற்கும் வேண்டிய பொருள் நாமே தருவோம்' என்றார்.

இராமநாதபுரத்திலிருந்து மன்னருடன் மணி விவேகானந்தருக்கு நாட்டிய வெற்றித் தூணருகே சென்றான். அங்கே ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். மணி கம்பீரமாகச் சில வார்த்தைகள் பேசினான்.

"என்னவர்காள்! நான் சிறு வயதில் இந்த வெற்றித் தூணுக்கு முன் சுவாமி விவேகானந்தர் வேதாந்த கர்ஜனை செய்யக் கேட்டேன். அவருக்குச் சில தேவாரங்களும் பாடிக் காட்டி ஆசி பெற்றேன். அவரைப் போல

நமது சுத்தசன்மார்க்கத்திற்கும் தமிழுக்கும் உலகப் புகழ்தேட விரும்பியே என் வாழ்வை அர்ப்பணித்தேன். இறைவன் என்னை எங்கெங்கோ எப்படியெப்படியோ நடத்தி என் காரியத்தை நிறைவேற்றி முடிவில் இந்த வெற்றித் துணுக்குமுன் நிறுத்தி விட்டான். தமிழின் வெற்றிக்கு ஒரு கலைக்கோயில் தயாராகிறது. அது வெற்றி பெற்றிலக இறைவனருளும் உங்களன்பும் துணை செய்க. நான் சேதுபதி நாட்டில் பிறந்து, அவன் அன்பில் வளர்ந்து, இன்று அவருக்கே நன்றிசெலுத்தும் இன்பம் பெற்றேன். கலைக்கோயில் எழுந்து விளங்கும்போது நீங்கள் வந்து பார்த்து என்னை ஆசீர்வதிக்க வேண்டும். மன்னரே! அதில் முதலில் கொலுவிருந்து கலைத்தெய்வத்திற்கு முதல் மலர் தூவவேண்டும். எந்தாய் வாழ்க!''

இந்தப் பிரயாணத்திற்குப் பிறகு தமிழ்மணி கப்பலேறிக் கொழும்பிற்குச் சென்று வந்தான். அங்கே அனுராதபுரம் சிற்பங்களைப் பார்த்து வந்தான். கலைக்கோயிலில் உயர்ந்த சிற்பச் செல்வங்களை அமைக்க அதுவும் நல்ல யோசனையைத் தூண்டிற்று. தமிழ்மணி இலங்கையிலிருந்து நேரே வேதாரண்யம் வந்து உடனே திருச்சி சேர்ந்து கோயிற் பணியைக் கவனித்தான்.

அத்தியாயம் ஒன்பது

கலைக்கோயில்

திருமாவளவன் காவிரிப்பூம்பட்டினத்தை அமைத்தது போல அன்பரும் தொழிலாளரும் கருத்தூன்றி அதே வேலையாயிருந்து கலைக்கோயிலைக் கட்டினர். வில்ஸன் செங்கற்களின் தன்மை பார்த்துத் தானே நேரிருந்து அடுக்கச் சொல்லி வேலையாட்களை உற்சாகப் படுத்தி அழகான கட்டிடங்களை அமைத்தார். வெறும் பொட்டலாயிருந்த நிலம் இப்போது ஓர் சௌந்தர்ய புரியாய் விட்டது. கோயில் திறப்பு விழாவுக்கு இராமநாதபுரம் சேதுபதி தலைமை வகித்தார்; சிவகங்கை மன்னர் திறப்புச் சொல்லாற்றினார். தமிழ் நாட்டுப் புலவர்களும் தொழிலாளர்களும், செல்வரும் அன்பரும் பதினாயிரத்திற்கு மேல் கூடியிருந்தனர். அத்தனை பேருக்கும் நாவிருந்தும் செவிவிருந்தும் இரண்டு நாட்கள் நடந்தன. தமிழ்மணி இன்பக் கண்ணீர் துளும்ப, இசையன்பருடன் உருக்கமாகப் பாடிக் கடவுளுக்கு நன்றி செலுத்தினான்.

தந்திகள் பறந்தன. லூயி இரு படப்பொறிகளையும் அச்சுப் பொறிகளையும் கப்பலில் ஏற்றி இங்கே பறந்து வந்தான். அவனுடன் ஜாக்கும் வந்து சேர்ந்து உடனே இருவரும் வேலை தொடங்கினர். அச்சகமே உலகின் முதலான சக்தி. அதை வசதியான மாளிகையில் லூயி நிறுவினான். ஜாக் படப்பொறிகளை மற்றொரு கட்டிடத்தில் தக்கபடி அமைத்தான். படநிலையம் மிக்க விசாலமாகவும் கச்சிதமாகவும் அமைந்தது. அச்சும் படமும் வருமானந்தருவன. அவற்றுடன் அறுபது நல்ல தொழில்கள் கோயிலின் சார்பில் நடந்தன. ஏராளமான

அன்பர் அங்கே உழைத்துப் பிழைத்து ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

கலைத்திருவிழாவில் பழைய நண்பர் பலர் வந்து சேர்ந்தனர். அவருள் முதன்மையானவர் மீராவாக விளங்கும் பிஜிலியும் டுணுக்கேசராக விளங்கிய மதனகோபாலனுமே. மதனகோபாலன் தன் மனைவி கமலத்தை மன்னிப்புக் கேட்டு அவளுடன் கலைப்பணியில் ஈடுபட்டான். பிஜிலி மீரா பரமசாதுவாக நடன சாலையை நடத்த ஒப்புக் கொண்டாள். வெள்ளையனும் சொக்குவும் தங்கள் பாய்ச்சல் பலியாமல் உறவு கொண்டாடி மணியை நயந்து கொண்டு இன்பவிலாசத்தை ஒழித்து அதன் சாமான்களையெல்லாம் கோயிலுக்கே தத்தம் செய்தனர். வெள்ளையன் அழகியுடன் ஒழுங்காக வாழ்வதாகச் சத்தியம் செய்தான். சொக்கு முரட்டு வேலைகளில் அமர்ந்தான். வெள்ளையன் மாசாணம் இருவரும் நாடகக் கம்பெனியை நிர்வகித்தனர். முத்தையாவும் கந்தனும் தமிழ்ப்பத்திரிகையான கலைக்கோயிலை நிர்வகித்தனர். அண்ணாமலை கணக்கு வழக்குகளைத் திறமையாகக் கவனித்தான். சாமிநாதன் காகிதத் தொழிலை நடத்தினான். ஜம்புநாதன் நூற்றல், நெசவு இரண்டையும் கவனித்துப் பெருத்த லாபந் தந்தான். ஜாக்கும் மணியும் படத்தொழிலைத் திறமையாக நடத்தினர். ஜெங்கின்ஸ் ஆங்கில இலாக்காத் தலைமை வகித்தான். ஸ்ரீமதி ஜெங்கின்ஸ் பெண்கள் சௌகரியங்களைக் கவனித்தாள். வாணி யாழிசை பயிற்றினாள். கண்ணன் குழலிசை, கமலம் பிடில் கற்பித்தார்கள். மத்தளம் கஞ்சிரா, கோட்டு, ஸ்வரகெத், ஸாரங்தா, சலதரங்கம் முதலிய எல்லா வாத்தியங்களுக்கும் தக்க புலவர் அமைந்தனர். நாடகக்கலை மதனகோபாலன் தலைமையில் நடந்தது. சிற்பம் சித்திரம், சிலைவடித்தல், வீடமைத்தல், பஞ்சலோக சாமான்கள் செய்தல், மரவேலை, இரும்புவேலை, தந்தவேலை, நெட்டிவேலை, ஓலைமுடைதல், தோல் பதனிட்டுப் பெட்டிகளும் மிதியடிகளும் செய்தல், பசுக்காத்தல், காளைவளர்த்தல், குதிரை வளர்த்தல், பறவைகள் வளர்த்தல், குழந்தைவளர்த்தல், உணவுகள் தயாராக்கல், முதலிய எல்லா நல்ல தொழில்களும் நாளடைவில் கலைக் கோயிலில் செழித்தன. தொழிலைப் பணமாக்கிப் பணத்தைத் தொழிலாக்குவதே மணியின் கொள்கை. பணம் சேர்த்துப் பூட்டுவது செல்வியைச் சிறையிடுவதாகும்.

கோயிலில் அனைவரும் தினம் எட்டுமணி நேரம் உண்ண உறங்க இளைப்பாறச் செலவிடுகிறார்கள். எட்டுமணிநேரம் குறிப்பிட்ட கோயில் வேலையை ஏகாக்கிரத்துடன் செய்கிறார்கள். நான்கு மணி நேரம் அறிவை வளர்க்கிறார்கள். நான்கு மணிநேரம் தியானகான பக்தி சாதனம் செய்கிறார்கள்.

கோயில் ஒரு பெரிய ஊராக விளங்குகிறது. நடுவே அருள் மந்திரம் வட்ட வடிவாக அமைந்திருக்கிறது. அதில் மூவாயிரம் பேர் கீழும் இரண்டாயிரம் மேலும் அமர்ந்து கடவுள் தியானமும், திவ்ய நாமசங்கீர்த்தனமும் செய்யலாம். அங்கே சூரியோதயம் சூரியாஸ்தமனம் இரண்டும் தோன்றும்படியாக கண்ணாடிச் சாளரங்கள் உண்டு. சூரியோதயத்தில் தியானமும், சூரியாஸ்தமனத்தில் பக்தி கானமும் நடக்

கும். ஆண்கள் ஒரு வரிசையிலும் பெண்கள் ஒரு வரிசையிலும் பரிசுத்தமாக அமைந்து தெய்வ பக்தி செய்வார்கள். வேறு பேச்சு அங்கில்லை. சாதிமத வாடையுமில்லை. உருத்தொழுகை கிடையாது. எந்த மனிதனையும் வணங்கத் தேவையில்லை. ஒவ்வொருவரும் நேராக இறைவனையே உள்ளத்தால் தியானித்தல் வேண்டும். மந்திரத்தில் தினம் ஓர் அருள்மொழியை மணி, தேர்ந்தெடுத்தெழுதி எல்லாரையும் முறைவைக்கச் செய்து விளக்குவதுண்டு. இசைக்கருவிகளுடன் பஜனை நடத்துவதுண்டு. பக்தியான சாதனங்கள் ஆனதும் அவரவர் வண்டுபோலத் தத்தம் வேலைகளில் ஈடுபட்டிருப்பார். அருள் மந்திரத்தைச் சுற்றிக் கனித் தோட்டமுண்டு. அதில் கல்விச் சாலை நடக்கிறது. பெரும்புலவர்கள், நன்மாணுக்கரைப் பயிற்றி மற்றவர்களுக்குக் கல்வி கற்பிக்கச் செய்கிறார்கள். அதற்கடுத்தபடி பல அருங்கலைச் சாலைகளுண்டு. அதற்குப் பிறகு பலவகைத் தொழிற்சாலைகள். பிறகு இல்லறத்தார் வீடுகள். அதற்கப்புறம் தொழிலாளர் வீடுகள். நகர் சுத்தம் செய்தல், ஆடை வெளுத்தல், பயிர் செய்தல் முதலிய பல தொழில்களைச் செய்வோர் மிகவசதியாக அங்கிருப்பர் கலைக்கோயிலைக் காக்கும் தொழிலுக்குத் தொண்டர்படையுண்டு. நல்ல உடற்பயிற்சியும், யோகாசனப் பயிற்சிகளும், சுகாதாரப் பயிற்சியும் தர டாக்டர் சிங்கமே இசைந்தார். வைத்திய இலாகாத் தலைவர் அவரே.

கல்வி, கலைத் தொழில் வாணிகம் காவல், இசை, நாடகம், முதலிய எல்லாத் தொழில்களுக்கும் நம்பிக்கையான தலைவருண்டு. அவருக்கே உழைப்பதிகம். அவருடன் இலாகாவுக்குத் தக்கபடி பல தொண்டர் ஒத்துழைப்பார்கள். உதாரணமாக லூயி அச்சகத்தில் இருநூறு தமிழர் உழைக்கிறார்கள். ஸிம்பிள் ஜாக்கின் படத்தொழிலில் இருநூறு பேர் உழைக்கிறார்கள். இப்படியே மற்ற இலாகாக்களிலும் தேர்ந்தெடுத்த அன்பர் கருமயோகம் செய்கிறார்கள். எல்லாரும் அங்கே விளையும் உணவுப் பொருள்களால் ஆன உணவுகளையே காலை மதியம் மாலை ஆகிய மூன்று வேளையுண்பர். அங்கே நூற்று நெய்யும் கைந்நூலாடைகளையேஉடுப்பர். கலைக்கோயிலார் இல்லறத்தாரே. அனைவரும் தமிழ் அறிவர். இந்தி ஆங்கிலம் பேசுவர் நிர்வாகமெல்லாம் தமிழர் கையில். மற்ற நாட்டுப் புலவன் தமிழ் மாணவரைப் பயிற்றலாம். சதிபதிகள் மாதம் ஒரே முறைதான் கூடலாம்; குழந்தை பிறந்து இரண்டாண்டுகள் பிரமசரிய விரதம் தாங்க வேண்டும்.

இரங்கூன் உல்லாச மாளிகை, சிங்கை இசையரங்கு, சிகாகோ தமிழ் நிலையம், லண்டன் சிங்க மாளிகை, கோயிலில் எல்லாம் கலைக்கோயிற் பணியையே தாங்கின.

தயாரான படங்களைத் தொண்டர் ஊர் ஊராகக் காட்டுவர். கோயில் பாடகர், ஆடகர் நடிகர் இளவேனிற் காலங்களில் புறப்பட்டு நாடெங்கும் கலையின்பங் காட்டிப் பொருள் தேடிவருவர். புலவர்கள் நாடெங்கும் அரிய பயனுள்ள சொற்பொழிவாற்றுவர். அவர்களுக்குத் துணையாகக் கல்விப் படங்களும் விளக்குப் படங்களும் செல்லும்.

அச்சகத்தில் உலக பாஷைகள் பல, அச்சேறுகின்றன. எல்லாந் தமிழுக்கே. பழைய அத்யாத்ம

நூல்களையும் தற்போது மணி செய்த புதிய நூல்களையும் பல பாஷைகளில் மொழி பெயர்த்துத் தேசமெங்கும் விற்பதுண்டு. அதே போல் பல மொழிகளில் உள்ள நயமான நூல்களைத் தமிழிலும் ஆக்கி வெளியிடலுண்டு. இவ்வாறு தமிழறிவும் பெருகும். தமிழ்ப்பண்பும் கலையும் உலகிற்குத் தெரியும். ஒரு நூலை ஜப்பானிய மாக்கவேண்டுமானல் நாகாசிமா தயாராக உதவுவார். திருக்குறளை ஜெர்மனுக்க இதோ ஜெங்கின்ஸ். கம்பனை ஆங்கிலக் கவியாக்க வேண்டுமா? சிங்கம் செய்து விட்டார். தமிழில் புதிய பலதுறைச் சாத்திரங்கள் தயாராக்க ஒரு குழு வேலை செய்கிறது. அவர்கள் எழுதும் நூல்களையே இந்தி,வங்கம், குசராத்தி, மராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆங்கிலம், பிரெஞ்சு,ஜெர்மன், ரஷ்யம், இதாலியம், சீனம், ஜப்பானியம் முதலிய மொழிகளில் உடனுடன் வெளியிடுவதால், தமிழ் மணம் இந்த மொழிகளிலெல்லாம் பரவுகிறது. உலகோர் தமிழை எளிதாக கற்கவும், எழுதவும், வழி காட்டும் நூல்களைத் தானேஎழுதி உலகெங்கும் மணி பரப்பினன்.

இவ்வாறு தமிழ்மணி உலகில் தமிழ் மணமும் கலையின்பமும் பரப்பினன். கலைக்கோயிலைப் பார்த்து மகிழாதவரில்லை. தியான மந்திரத்தில் நிம்மதியாயிருந்து ஜப தபங்கள் செய்யவே ஏராளமான பேர்கள் வருவதுண்டு.

இன்று தமிழ்மணி தியான மந்திரத்தில் உருக்கமாகப் பாடுகிறன். வாணி பரவசமாக யாழிசைக்கிருள். அரிய ராகங்களில் கீர்த்தனங்கள் நடந்த பிறகு கலைக்கோயிலின் கொள்கையை விருத்தமாகப் பாடினன்.

வானுறு சுட்டும் உண்டு
மாமழை யமுத முண்டு
தேனுறும் பொழில்கள் உண்டு
செய்தொழில் பலவும் உண்டு
ஊனுயிர்க் கொருவன் உண்டு
உள்ளத்தில் ஒளியும் உண்டு
மானுடர் உரிமை தாங்கி
வாழலாம் ஒருமை கொண்டே.

இச்செய்யுளைப் பாடும்போது 'தம்பி நீ நல்லாயிரு. மணீ! நீ நீடு வாழ்.' என்ற சத்தம் கேட்டது. சட்டிச் சாமியாரே சிவநேசத்துடன் உள்ளே நுழைந்தார். தமிழ்மணி வியந்துவணங்கி 'அப்பா! வா சுவாமி வருக.' என்று உயர்பீட மீந்து உபசரித்தான். இருவரும் சிதம்பரத்திலிருந்து வந்தார்கள். கலைக்கோயிலைக் கண்டு மகிழ்ந்தார்கள். "மணி, உன் அன்னை எண்ணம் நிறைவேறியது. உன் கனவு கோயிலானது. என் வாழ்வும் சபலமானது." என்ருர் தந்தை. சாமியார் 'அப்பனே சக்தியைநன்ருகப் பயன் படுத்தினய். உலகிற்குக்கலையின்பமளித்ததுடன் வாழ்வுக்கலையையே விளக்கினய். அன்பா, இதுதான் முடிவான இன்ப வழி' என்று சுவாமிகள் பாடத் தொடங்கினர். மணி கோஷ்டி உடன் இசைத்தது.

கடலுண்ட மேகம் போலக்
கருணையே செய்து நெஞ்சில்
இடமகல் உலகை யெல்லாம்
இலிங்கமாய் இலக வைத்துக்
கடமையே பூசை யாகக்
கல்வியுந் தொழிலும் போற்றி
உடலுயிர்க் குலங்க ளெல்லாம்
ஒன்றென வாழ்க மாதோ!

கலைக்கோயில் முற்றிற்று.

குறிப்பு:

என்னருமைத் தமிழர்காள் இந்தத் தொடர் கதை என் கனவே. இதில் வருவோரனைவரும் எனது உள்ளரங்கின் பாத்திரர்களே. தமிழகத்தையே உலகம் போற்றும் கலைக்கோயிலாக்க நான் கனவு கண்டேன். அதைச் சொல்லோவிய மாக்கினேன். கலைக்கோயி லின் பாதையில் எத்தனையோ இடர்களுண்டு. அவற் றையெல்லாம் வென்று முன்னேறும் வழியும் இதில் உள்ளது. இதிற் காட்டிய கலைக்கோயிலை என் ஆயுளில் நானே செய்து காட்டாமற் போகலாம். ஆனால் என் எண்ணங்களை மட்டும் ஆழ உங்கள் உள்ளத்தில் விதைத்தேன். பத்துத் தமிழ்மணிகள் என்றுவது சேர்ந்து கலைக்கோயில் கட்டி உலகில் தமிழ னுக்குப் பெரும் புகழ் விளக்கினால் என் ஆவி எங்கிருந் தாலும் மகிழும். உலகில் மிகப் புராதனமான நமது தெய்வமொழிக்கு ஆக்கந் தேடுங்கள். கட்டுங்கள் கலைக்கோயில். ஒவ்வொரு வீடும் கலாமந்திரமாகுக! எந்தாய் வாழ்க!

சுத்தானந்த பாரதி

197245

விதியும் வீணையும்

எச். விஜயகுமார்

எனக்கு ஜோஸியம் மட்டும் தெரிந்திருந்தால் பிரேமாவும் அவள் கணவன் ராஜகோபாலும் என் அறைக்குப் பக்கத்து அறையில் வந்த அன்றைக்கே என் அறையைக் காலி செய்து விட்டு வேறெங்காவது குடி போயிருப்பேன்... ஆனால்... பிரம்மாவுக்குக் கூட ஜோஸியம் தெரியாதே! இல்லையேல் அவன் இவ்வுலகைப் படைத்திருப்பானா?

அன்று காலையிலிருந்து விடாமல் பெய்து கொண்டிருந்த மழை அப்போதுதான் சற்று அடங்கித் தூறிக் கொண்டிருந்தது. நான் லேசான இருளால் சூழப்பட்ட என் அறையில் உட்கார்ந்து ஐந்நூறு மைல்கள் தொலைவிலிருக்கும் ஒரு குக்கிராமத்தில் எனக்கு வேலை கிடைத்து விட்ட சந்தோஷச் செய்தியைக் கேட்க ஆவலோடு உட்கார்ந்து கொண்டிருக்கும் என் தாயாருக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன்.

எதிர்பாராத விதமாக அறைக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டேன். உள் தாழ்ப்பாள் போடப் படாமல் இருந்ததால், உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே யாராக இருந்தாலும் உள்ளே வரும்படி கூறினதும், "உங்களிடம் சுத்தி இருக்கிறதா?" என்று கேட்டவாறு பதினாறு அல்லது பதினேழு வயது நிரம்பிய ஒரு யுவதி உள்ளே நுழைந்தாள்.

ஏறக்குறைய பன்னிரண்டு மாத காலமாகச் சென்னையில் வேலைக்காகத் தெருவுக்குத் தெரு அலைந்து கொண்டிருக்கும் நான் ஒரு யுவதியையும் பார்த்திருக்க மாட்டேன் என்று உங்களால் சொல்ல முடியுமா? என் போன்றவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பணச் செலவில்லாமலேயே சிறிது மறந்திருக்கச் செய்யும் கடற்கரை, பார்க்கு, போன்ற மனிதர் கூடுமிடங்கள் என் அறையைப் போலவே எனக்குப் பரிச்சியமானவை. இருந்த போதிலும் இவளைப் பார்த்த போது நான் பிறந்து வாழ்க்கையில் முதன்முதலாக ஒரு யுவதியைப் பார்ப்பது போன்ற உணர்ச்சி எனக்கு உண்டானதற்குக் காரணம்...? அவளது கண்களாக இருக்குமோ என்னவோ...?

"உங்களிடம் சுத்தி இருக்கிறதா?" என்ற அவளது கேள்வி என்னை நினைவு நித்திரையிலிருந்து விழிக்கச் செய்தது. ஆனால் அவளுக்கு நான் பதில் கொடுப்பதற்கு முன்னாலேயே, "இருக்கிறதா பிரேமா?" என்று கேட்டவாறு முப்பது வயதுள்ள ஒரு 'மனிதன்' என் அறைக் கதவருகில் வந்து நின்றான்.

முன் பின் பரிச்சியமற்ற முகங்களைப் பார்க்க நான் மிகவும் ஆவலுள்ளவன்! எனினும் பரிச்

சியமற்றமனிதர்களுடன் பேசுவ தென்றால் எனக்கு மிகவும் சங் கோஜம். ஆகவே நான் உட் கார்ந்திருந்த இடத்திலிருந்தே 'சுத்தி இல்லை' என்பதற்கு அடை யாளமாகத் தலையை அசைத்தேன். அதற்குத்தான் காத்திருந்தானோ என்னவோ தெரியவில்லை அந்த மனிதன்! உடனே உள்ளே நுழைந்து பிரேமாவுக்கு அருகில் நின்று கொண்டு, "இன்று முதல் நாங்கள் பக்கத்து அறையில் குடி வந்திருக்கிறோம்! நான் ஜக் மோஹன்தாஸ் கம்பெனியில் வேலை பார்க்கிறேன்..." என்று கூறிக் கொண்டே வந்தவன் 'சட்' டென்று நிறுத்தி, என் அறையைச் சுற்றிலும் ஒரு முறை தன் பார் வையைச் செலுத்தி, "உங்கள் வீட்டுக்காரி எங்கே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

"என் வீட்டுக்காரியா......" என்று என்னை அறியாமலேயே நான் கேட்டு விட்டேன். ஆறேழு வருடங்களுக்கு முன் தன் பிறந்த வீட்டில் க்ஷயரோகத் தினால் இறந்து போன, என் மனைவியின் முகத்தை ஞாபகப் படுத்திக் கொள்வதில் என் மனம் முனைந்தது.

"இதில் என்ன சங்கோஜம் மிஸ்டர்? நாங்கள் அடுத்த அறை யில் இருப்பவர்கள்தானே? எங் களிடம் சொல்வதில் என்ன வெட்கம்? பெண் எந்த ஊர் சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்று அந்த மனிதர் கேட்டதும் சிந்தனைக் கடலிருந்து என் மனம் மீண்டது.

"அவள் மறைந்து ஏழு வருஷங் களாகி விட்டன!" என்று பதில ளித்தேன் நான்.

"அதற்குப் பின் கலியாணமே செய்து கொள்ளவில்லையா?"

"இல்லை!"

"சமூகத்தில் பெண் குட்டி களுக்குப் பஞ்சம் போலிருக் கிறது!" என்று அவன் கேட்ட தும், "பெண்களுக்குப் பஞ்ச மில்லை! வேலைக்குத்தான் பஞ்சம்!" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டேன். என்றாலும் வெளிக்குக் காட்டிக் கொள்ளா மல், "ஒரு பெண் கேட்டால் ஒன்பது பெண்கள் தயாராக வந்து நிற்பார்கள்! இருந்தாலும் நமக்குப் பிடித்தமான பெண் அகப்பட வேண்டுமல்லவா...!" என்று சொன்ன போது என்ன காரணமோ தெரியவில்லை என் கண்களும் பிரேமாவின் கண் களும் தற்செயலாகச் சந்தித்துக் கொண்டன. அவள் கணவனை அந்த மனிதன் இதைக் கவனித் தானோ என்னவோ? எனக்குத் தெரியாது.

"அப்படியானால் நீங்கள் இந்த அறையில் தனியாகத்தான் இருக் கிறீர்கள் போலிருக்கிறது!" என்று அவன் கேட்டான். நான் உண்மையான பதிலைக் கொடுத் தால் அவனுக்குப் பிடிக்காது என்று நன்றாக அறிந்து கொண் டேன். ஆதலால் பிரேமாவின் பக்கம் திரும்பும் என் கண்களைச் சிரமத்துடன் வேறு பக்கம் திருப்பி, "இப்பொழுது தனி யாகத்தான் இருக்கிறேன்! என் றாலும் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு என் அம்மாவை அழைத்து வைத்துக்கொள்வதாக உத்தேசம்! ஹோட்டல் சாப்பாடு எவ்வளவு நாட்களுக்கு ஒத்துக்கொள்ளும்?" என்று பாதி மெய்யும் பொய்யும் கலந்த பதிலை அளித்தேன்.

"வாஸ்தவம்தான் ஸார்! எனக் கும் நிறைய அநுபவமிருக்கிறது! சரி! நமஸ்காரம் போய் வரட்

டுமா?'' என்று அவன் கூறி, பிரேமாவைப் பார்த்து, ''வா பிரேமா போகலாம்! வீணை இவருக்குச் சிரமம் கொடுத்தோம். சுத்தி கிடைத்தால் படங்களையும் இப்போதே மாட்டி விடலாம் என்று நினைத்தேன்! சரி...ம்!'' என்று கூறியவாறு வெளியே செல்ல ஆரம்பித்தான். நானும் சம்பிரதாயத்தை ஒட்டி, ''அதில் சிரமமென்ன ஸார்! ஏதாவது வேலை ஆக வேண்டியிருந்தால் அவசியம் சொல்லுங்கள். சங்கோஜப்படக் கூடாது!'' என்று சொல்லி வைத்தேன்.

அவர்கள் சென்றதும் திறந்திருந்த கதவைத் திறந்தபடி விட்டு விட்டு, அரை குறையாக விட்டிருந்த கடிதத்தைப் பூர்த்தி செய்ய ஆரம்பித்தேன்.

2

சாதாரணமாகப் புதுத் தம்பதிகள் எவ்வளவு ஆனந்தமாக வாழ்க்கை நடத்துவார்களோ அந்த ஆனந்தத்தைவிடப் பிரேமா ராஜகோபால் இவர்களின் ஆனந்தம் ஒன்றும் குறைந்து விட்டதாக எனக்குத் தோன்றவில்லை. அவர்களது விஷமப் பேச்சுக்களையும், விளையாட்டுகளையும் என் அறையிலிருந்தவாறு நான் அடிக்கடி கேட்பது உண்டு. தினமும் காலையில் எட்டரை மணிக்குச் சாப்பாட்டை முடித்துவிட்டு ராஜகோபால் வேலைக்குச் சென்று விடுவான். நான் விழித்துக் கொண்டிருந்தாலும் தூங்கிக் கொண்டிருந்தாலும் ஒன்பது மணிக்கு முன் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் வழக்கமே எனக்கிடையாது. ஆனால் பிரேமா பக்கத்து அறையில் குடி வந்த பிறகு என் தினசரி வாழ்க்கையில் ஒரு சிறிய மாறுதல் ஏற்பட்டது. அதிகாலையில் பால்காரன் வந்து பால் கொடுத்துவிட்டுப் போன பிறகு கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போடுவதை விட்டு விட்டேன். அது மட்டுமல்லாமல் கதவைப் பாதி திறந்தபடி விட்டுப் படுக்கையிலேயே புரண்டு கொண்டு கிடப்பேன்!

அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. தினமும் ராஜகோபாலன் மாடிப் படியை விட்டுக் கீழே இறங்கிச் சென்றதும் பிரேமா என் அறைக் கதவருகில் வந்து நின்று கொண்டு, ''இன்னும் என்ன தூக்கம்? மணி ஒன்பதாகி விட்டது!'' என்று திருப்பள்ளியெழுச்சி பாடுவாள். நான் அவள் பக்கம் திரும்பும் போது அவள் கண்களும் என் கண்களும் சந்தித்துக் கொள்ளும். நான் சிரித்துக் கொண்டே பதில் கூறுவதற்கு முன்னால் அவள் மின்னலைப்போல் மறைந்து விடுவாள்! அதற்கப்புறமும் நான் சில சமயங்களில் பத்துப் பத்தரை மணி வரையில் கூடப் படுக்கையிலேயே கிடப்பேன்.

அதற்குக் காரணம் இருந்தது!

பிரேமாவின் குரல் இனிமையாக இருந்தது! ''யுவதிகளின் குரல் இனிமையாகத்தானே இருக்கும்! இதில் என்ன அதிசயம்?'' என்று நீங்கள் கேட்கலாம்! ஆனல் எந்தக் குரல் இனிமையானது அல்லது இனிமையற்றது என்பதைச் சந்தேகமில்லாமல் தீர்மானிக்கும் அளவுக்கு எனக்குச் சங்கீத ஞானம் இருந்தது! அதோ அந்த மூலையில் கிடக்கும் வீணை கூட......''

போகிறது விட்டுத் தள்ளுங்கள்! எனது சங்கீத ஞானத்தைத் தெரி

விப்பதற்கா நான் இந்தக் கதையை எழுதுகிறேன்?

தன் அறைக்குச் சென்ற பின் பிரேமா ஏதோ ஒரு பாட்டின் ஓரிரு வரிகளை முணுமுணுப்பாள். சில சமயங்களில் கீர்த்தனைகளும், கும்மிப் பாட்டுகளும் இன்னும் சில சமயங்களில் சினிமாப் பாட்டுகளும் சேர்ந்து அவள் வாயிலிருந்து கதம்பமாக வெளிவரும்.



3

பிரேமா குடி வந்த பிறகு பதினைந்து நாட்கள் சென்றன. ஒரு நாள் நான் ஒன்பதரை மணிக்கே படுக்கையிலிருந்து எழுந்து முகங்கழுவி 'காப்பி' போடுவதற்காக 'ஸ்டவ்'வைப் பற்றவைத்துக் கொண்டிருந்தேன்.

"இன்று சிரமப்பட வேண்டியதில்லை!" என்று எதிர்பாராத விதமாகப் பின்னாலிருந்து பிரேமாவின் குரல் கேட்டது.

நான் திரும்பிப் பார்த்தபோது பிரேமா கையில் 'காப்பி' டம்ளருடன் நின்று கொண்டிருந்தாள்.

என் நெஞ்சு 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது. அவளையே பார்த்தவாறு நின்றேன்.

"இன்று வழக்கத்துக்கு மாறாகக் 'காப்பி' கொஞ்சம் அதிகம் போட்டு விட்டேன்! ஒரு டம்ளர் மிஞ்சி விட்டது. இந்தாருங்கள்!" என்றாள் அவள்.

நானும் பேசாமல் 'ஸ்டவ்'வைப் பற்ற வைப்பதற்காகக் கையில் எடுத்த தீக்குச்சியைக் கீழே போட்டுவிட்டு அவள் கையிலிருந்த டம்ளரை வாங்கிக் கொண்

டேன். என் வாய்க்கு அருகில் டம்ளரைக் கொண்டு செல்வதற்கு முன் அவள், "ஜாக்கிரதை! மிக வும் சூடாக இருக்கிறது!" என்று எச்சரித்தாள்.

"காலையில்தானே போட்டீர் கள்! இது வரைக்கும் சூடாகவே இருக்கிறதா?" என்று நான் கேட்ட கேள்விக்கு அவள் பதில் கூறுமலேயே மூலையில் தூங்கிக் கொண்டிருந்த வீணையைச் சுட் டிக் காட்டி, "சங்கீதத்தில் மிகவும் ஆசை போலிருக்கிறது!" என்று கேட்டாள்.

"என்றைக்காவது ஒரு நாள் வாசிப்பதுண்டு. ஆனல் இப் போது பல மாதங்களாக அதன் மேலிருக்கும் தூசியைக் கூடத் தட்டவில்லை!" என்று பதிலளித் தேன்.

"ஏன் இது இப்படி அனாதை யாகக் கிடக்கிறது?"

"கேட்டு ரசிப்பவர்கள் இல்லா மையால்தான்!" என்று என் தொண்டை வரைக்கும் வந்த பதிலை விழுங்கிக் கொண்டு, "என் சோம்பேறித் தனத்தால்தான்!" என்றேன்.

"பாழாய்ப் போச்சு! எடுத்த தற்கெல்லாம் சோம்பேறித் தனமா? கலியாணம் செய்து கொள்வதற்குச் சோம்பேறித் தனம்! வேலை செய்வதற்குச் சோம்பேறித்தனம். வீட்டில் உட்கார்ந்து சங்கீதம் பாடுவதற்கு சோம்பேறித்தனம்! சர்வம் சோம்பேறி மயம் வாழ்க்கை!"

நான் காலி செய்த டம்ளரை வாங்கிக் கொண்டே அவள் தொடர்ந்து சொல்ல ஆரம்பித் தாள்: "அவர் காலையில் எட்டரை மணிக்குப் போனல் இரவு ஒன்ப தரை மணிக்குத்தான் திரும்பி வருகிறார். நாள் போவது யுகமாக இருக்கிறது! இந்த மாதிரி ஏதாவது வீணையோ ஹார்மோனியமோ வாசிக்கத் தெரிந்திருந்தால் நாள் போவதே தெரியாது!"

"பின் கற்றுக் கொள்வதற் கென்ன?" என்று என்னை யறி யாமல் நான் கேட்டு விட்டேன்.

"அவருக்குச் 'சங்கீத மென் ருலே பிடிக்காது!"

"கேட்கக் கூடப் பிடிக்காதா?"

"ஊஹூம்! கேட்கக் கூடப் பிடிக்காது. கௌரவம் மிக்கவர் கள் பாடக் கூடாது என்பது அவர் அபிப்பிராயம்!"

"அப்படியானல் எனக்கு வீணை வாசிக்கத் தெரியும், என்று அவ ருக்குத் தெரிந்தால் கௌரவமற்ற வர்கள் கோஷ்டியில் என்னையும் சேர்த்து விடுவார் போலிருக் கிறது!"

"சந்தேக மென்ன?" என்று அவள் அழுத்தமாகக் கூறினள்.

இருவரும் சேர்ந்து சிரித்து விட் டோம்.

அன்று முதல் தினம் காப்பி போட வேண்டிய வேலை எனக் குத் தொலைந்து விட்டது. தின மும் எட்டரை மணிக்கு ராஜகோ பாலன் வேலைக்குச் சென்றதும், பத்து நிமிஷங்களுக் கெல்லாம், பிரேமா காப்பி டம்ளருடன் என் அறைக்குள் நுழைவாள். சங்கீ தம், பழமை, புதுமை, சினிமா இவைகளைப் பற்றி ஏதாவது கொஞ்ச நேரம் பேச்சு நடக்கும். பிறகு வீணையை எடுத்து என் மடி யில் வைத்து ஏதாவது பாடச் சொல்வாள்! நானும் முதலில் மறுத்த போதிலும் பின்பு பாடிக்

காண்பிப்பேன்! அவளும் ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டிருப்பாள்! சில சமயம் என் கையிலிருந்து வீணையை வாங்கித் தன் மடியில் வைத்து மெதுவாகத் தன் விரல்களால் அதன் தந்திகளைத் தடவுவாள்.

"உங்கள் கையில் வீணை எவ்வளவு பொருத்தமாயும் அழகாயும் இருக்கிறது தெரியுமா? இரண்டு மாதம் பழகினுல் நன்ருக வந்து விடும்!" என்று ஒரு நாள் நான் கூறி விட்டேன். பிறகுதான் ஏண்டா சொன்னேம் என்று எனக்குத் தோன்றியது.

"ஆனுல் பழகுவதற்கு உங்களருகில் எப்படி உட்கார முடியும்?" என்று அவள் கண்களில் தோன்றிய கேள்வி இதழ்கள் வரை வருவதற்குள், "இரண்டு வாரங்களில் சரிகம பழகிக் கொண்டால் பிறகு புத்தகத்தைப் பார்த்து அதற்கு மேல் பழகிக் கொள்ளலாம்!" என்று கூறினேன்.

"அவரைக் கேட்டுப் பார்க்கிறேன்!" என்ருள் அவள்.

"சரி!" என்றேன்.

4

அன்றிரவு பத்தரை மணிக்கு நான் படுக்கையில் படுத்தவாறு நாவல் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தேன். அதற்குள் கதவு தட்டும் சப்தத்துடன், "இதற்குள் தூங்கி விட்டீர்களா என்ன?" என்ற ராஜகோபாலனின் குரல் கேட்டது.

"வாருங்கள் வாருங்கள்!" என்று வரவேற்றவாறு கதவைத் திறந்தேன்.

"என்ன ஸார்! நம்ம பிரேமாவுக்கு......" என்று நிறுத்தி பிரேமாவின் பக்கம் திரும்பி "என்ன சொல்வார்கள் அதை?" என்று கேட்டான்.

"வீணை!" என்று பதிலளித்தாள் பிரேமா, எங்களிருவரையும் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

"உட்காருங்களேன்!" என்று இருவரையும் என் படுக்கையின் மீது உட்கார வைத்து எதிரில் ஒரு நாற்காலியில் நானும் உட்கார்ந்தேன்.

"என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டேன்.

"நான் என்னவோ சார் வேலையும் நானுமாக இருக்கிறேன்! இந்தப் பிரேமாவுக்குத்தான் பட்டணக் காற்று பட்டுவிட்டது! பெண்களுக்குப் பொழுது போகா விட்டால் ஏதாவது தையல் கிய்யல் பழகுவார்களா, இல்லை தம்பூராவை எடுத்து வைத்துக் கொண்டு கத்துவார்களா? இவளோ ஒரே பிடிவாதம் பிடிக்கிருள்! சட்! சுத்த மோசம் இந்தப் பெண்கள்! பெண் பிடிவாதத்திற்கு முன் அந்தச் சிவபிரானே தோற்றுப் போகும் போது ஜக் மோஹன் தாஸ் கம்பெனியில் வேலை பார்க்கும் ஏழைக் குமாஸ்தாவாகிய நான் எம்மாத்திரம்?"

"ஆனுல் அவர்கள் குரல் இனிமையாக இருக்கிறது! மேலும்...!"

"அதெல்லாம் கிடக்கட்டும் சார்!" என்று கூறி முகத்தைச் சுளித்தான் அவன்.

ஏண்டா சொன்னேம்! என்று என்னை நானே கடிந்து கொண்டேன். பிறகு பேச்சை மாற்றுவதற்கு அவனைப் பார்த்து, "இதோ பாருங்களண்ணு, முன் காலத்தில் பெரிய பெரிய கற்பர

சிகள் கூட......!" என்று நான் மேலே சொல்வதற்குள் அவன் இடைமறித்து, "அதெல்லாம் பழைய காலம் ஸார்! அது சத்ய யுகம்!... இரண்டு நாட்களில் ஏதோ பழகிக் கொண்டால் அப்புறம் புஸ்தகத்தைப் பார்த்துப் பழகிக் கொள்ளலாம் என்று பிரேமா சொன்னாள். ஏதோ இரண்டு நாளைக்குப் பழக்கிக் கொடுங்களேன் ஸார்! நமக்குத் தொந்திரவு குறையும்! ஆனால் உங்களுக்கு வீண் சிரமம்தான்!" என்றான்.

"சிரமம் என்ன அண்ணா! அரை மணி நேர வேலை! அவ்வளவுதான்!"

"அந்தப் புஸ்தகம்...?"

"புஸ்தகம் என்னிடம் எங்காவது இருக்கும், அப்புறம் தேடிக் கொடுக்கிறேன். புதிதாக வாங்கினாலும் ஒன்றிரண்டு ரூபாய்க்கு மேல் போகாது!"

"அப்புறம் வீணைக்கு என்ன செலவாகும்?"

"இப்போதெல்லாம் விலை அதிகமாகும்! தற்சமயம் என்னுடைய வீணை தூங்கிக்கொண்டுதானே இருக்கிறது. அதை வைத்துக் கொள்ளலாம்."

அவனுக்கு இந்த விஷயம் திருப்தியே அளித்தது என்று அவன் முகத்திலிருந்து நன்றாகத் தெரிந்தது.

பிரேமா வீணையை எடுத்து என்னிடம் கொடுத்தாள். நானும் அவளுக்குச் சரிகம சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். பதினைந்து நிமிஷங்கள் ஆகியிருக்கும். ராஜகோபாலன் கொட்டாவி விட ஆரம்பித்தான்.

"இன்றைக்குப் போதும்! பாக்கி நாளைக்கு! பிரேமா! வா போகலாம்" என்று கூறிக் கொண்டே எழுந்து என்னைப் பார்த்து, "வரட்டுமா ஸார்! தூக்கம் வருகிறது. நமஸ்காரம்" என்றான். நானும் "சரி" என்று தலையை அசைத்தேன்.

தம்பதிகள் என் அறையை விட்டுச் சென்ற பிறகு அறைக் கதவைமூடி, மறுபடியும் நாவலைக் கையிலெடுத்தேன். ஆனால் படிப்பதில் மனம் ஓடவில்லை. கடைசியில் சலித்து நாவலை ஒரு மூலையில் போட்டு விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தேன். ஆனால் தூக்கம் வந்தால்த்தானே! பிரேமாவை நான் முதன் முதல் பார்த்ததிலிருந்து இது வரைக்கும் நடந்த சம்பவங்கள் என் மனக்கண் முன் தோன்றி நடனமாடின. சாந்தமான கடலுக்கடியில் மெதுவாக ஊர்ந்து செல்லும் நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து திடீரென்று 'டார்பிடோ' வெடிப்பது போல் என் மனத்தில் ஒரு விசித்திர எண்ணம் தோன்றியது.

பிரேமாவுக்கு வாழ்க்கையில் ஆனந்தம் இருக்குமா? அந்தக் கணக்கெழுதும் குமாஸ்தா எங்கே? சங்கீதப் பித்துப் பிடித்த இந்தப் பிரேமா எங்கே? அவள் குரலில்தான் என்ன இனிமை? இந்த ராஜகோபாலன் மனிதனா அல்லது இயந்திரமா?

5

அன்று பௌர்ணமி! சந்திரன் ஏகபோகமாக ஆகாயத்தில் தன் ஆட்சியைச் செலுத்திக் கொண்டிருந்தான். பசுஞ் சோலை ஒன்றில் பச்சைப் பசேலென்ற புல் தரையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன் நான். எதிரில் பிரேமா

வீணையும் கையுமாக அமர்ந்திருந்தாள். அவள் என் சிஷ்யை! இந்த எண்ணமே எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. ஆனல் அம்மகிழ்ச்சிக் கிடையில் ஒருவித துயரமும் என் மனதில் தோன்றிக் கொண்டிருந்தது. அன்றுதான் நான் அவளுக்குச் சிக்ஷை கொடுக்கும் கடைசி நாள்! அதற்கு முந்தின நாட்கள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருந்தன. வெளியுலகை மறந்து நாங்கள் சங்கீதத்தில் மூழ்கி விடுவோம். ஆனல் இனிமேல் அவள் வர மாட்டாள்! கணக்கனை தன் கணவனிடம் சென்று விடுவாள்! நான்? நான்......வேலையை நாடி வேட்டையாடச் சென்று விடுவேன். என் கண்கள் நீரால் நனைந்து விட்டன.

"இதென்ன கண்களில் நீர்?" என்று கேட்டவாறு வீணையைப் பக்கத்தில் போட்டுவிட்டு பிரேமா என்னருகில் ஓடி வந்தாள்.

"ஒன்று மில்லை!" என்றேன் நான்.

"பொய்! நீங்கள் உங்களை எவ்வளவு தூரம் அறிந்திருக்கிறீர்களோ அதற்கு மேல் நான் உங்களை அறிந்திருக்கிறேன்! உண்மையைச் சொல்லுங்கள்! கண்களில் நீர் வரக் காரணமென்ன?"

"பிரேமா! நீங்கள்தான் என்னை நன்ருக அறிந்திருக்கிறீர்களே!"

"அதனல்தான் கேட்கிறேன்!"

"அதனல்தான் நானும் பதில் சொல்வதில்லை. பிரேமா! என்ன இருந்தாலும் நீ—நீங்கள்—ஒருவருடைய மனைவிதானே!"

"என்ன சொன்னீர்கள்? நான் யாருக்கும் மனைவி இல்லை! எனக்கு யாரும் புருஷனுமில்லை. ராஜகோபாலனின் மனைவி பிரேமா இறந்துவிட்டாள்! நான் புனர் ஜன்மம் எடுத்திருக்கிறேன். என் புதிய வாழ்க்கையின் பூரண உரிமையாளர் நீங்களேதான்!" என்று கூறியவாறு அவள் என்னை நெருங்கி......

"அடி துரோகி! பாபி!" என்றது அவள் கணவனின் குரல். அவன் தடி பிரேமாவின் மண்டையை இரண்டாகப் பிளந்து விட்டது!......

"ஐயோ..." என்ற கூச்சலுடன் என் கண்கள் திறந்து கொண்டன.

"ஏன்? ஏதாவது கனவு கண்டீர்களா?" என்று கூறியவாறே கையில் காப்பியுடன் உள்ளே நுழைந்தாள் பிரேமா.

"ஒன்றுமில்லை!" என்று கூறி அவள் கேள்வியைக் காற்ருேடு விட்டுவிட்டுப் பேச்சை மாற்றி, "இன்று நான் அதிக நேரம் தூங்கி விட்டேன்! இல்லையா?" என்று கேட்டேன்.

"இரவில் தூக்கம் வந்திக்காது!"

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"எனக்கும் கூடத் தூக்கம் வரவில்லை."

"ஏன்?"

"வீணையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன்."

"உம்."

"அப்புறம் காலையில்தான் கண்கள் மூடின."

"உம்."

"அப்புறம் ஒரு கனவு கண்டேன்."

என் நெஞ்சு திக்திக் கென்று அடித்துக் கொண்டது!

"என்ன......?" என்று கேட்டேன் நடுக்கத்துடன்.

"ஒரு கனவு......" என்று கூறிக்கொண்டே காப்பி டம்ளரை என் நடுங்கிய கைகளில் கொடுத்து மறுபடியும் சொல்ல ஆரம்பித்தாள்.

"...அதாவது நீங்களும் நானும்! ......நானும் நீங்களும்......"

"நீங்களும் நானும் என்ன?..." என்று பதட்டத்துடன் கேட்டேன்.

"இதோ பாருங்கள்! இப்போது நீங்கள் குருவாகி விட்டீர்கள் அல்லவா?"

"ஆமாம்! அதற்கு என்ன?"

"ஆகவே என்னை 'நீங்கள்' என்று அழைக்கக் கூடாது! 'நீ' என்றுதான் அழைக்க வேண்டும்!"

"அதெப்படி முடியும் பிரேமா! நீங்கள் ராஜகோபாலனின்......" காலையில் கண்ட கனவு ஞாபகத்திற்கு வந்ததும் உடல் முழுதும் நடுங்கியது!

"என் இப்படி பயந்து சாகிறீர்கள்? அவர் என்ன பேயா, புலியா?"

"பேய் புலியாக இல்லாவிட்டாலும் மனிதன்தானே! மனிதன் மனதில் பொறாமை அல்லது சந்தேகம் ஒரு சிறிது தோன்றி விட்டாலும் அவன் பேய் புலிகளைக் காட்டிலும் இழிந்தவனாகி விடுகிறான்"

பிரேமா ஒரு பெருமூச்சுடன் "பொறாமைப் படக்கூடிய அளவாவது அவர் மனிதராக இருந்தால் தேவலையே?" என்றாள்.

"உங்கள் கனவு என்னவாயிற்று...?"

"உன்னுடைய கனவு' என்று சொன்னால்தான் சொல்லுவேன்!"

"சரி! உன்னுடைய கனவு என்னவாயிற்று?"

பிரேமா மௌனம் சாதித்தாள். பின்பு ஒரு நீண்ட பெருமூச்சுடன் "உங்களுடன் வாழக் கொடுத்து வைத்தவள் பாக்கியசாலி!......" என்று கூறி, என் கண்களோடு தன் கண்களை ஒரு முறை பொருத்திப் பின் காலியான டம்ளரை எடுத்துக் கொண்டு திரும்பினாள்.

"அந்தக் கனவு என்னவா......" என்ற சொற்கள் என் தொண்டைக்குள்ளவே தங்கி விட்டன... ஐயோ! திடீரென்று ராஜகோபாலனின் கண்கள் என் கண்களைக் கடுமையாகப் பார்த்தன......... விபரீதம்!

யாரோ தேசத்தலைவர் கைதியாக்கப்பட்டதின் காரணமாக ஆபீஸ் மூடப்பட்டிருந்ததால் வேலைக்குச் சென்ற ராஜகோபாலன் திரும்பி வந்திருந்தான்.

அவன் என்னென்ன பார்த்தானோ, என்னென்ன கேட்டானோ என்பதெல்லாம் எனக்கு இன்றுகூடத் தெரியாது. ஆனால் என்னைக் கடுமையாகப் பார்த்த அந்தக் கண்களில் இயற்கையின் தத்துவங்கள் கோர நடனம் புரிவதைக் கண்டேன்! கணநேரம் அவன் கண்கள் என்மீது நெருப்பைக் கக்கின. ஏதாவது சொல்ல

வேண்டும் என்று துடிப்பது போலத் தோன்றிய அவன் உதடு களில் பூகம்பத்தின் கோர அதிர்ச் சியும் நடுக்கமும் காணப்பட்டன. நான் ஏதாவது சொல்வதற்குள் அவன் பிரேமாவை முன்னே அனுப்பிப் பின்னுல்தான் அறைக் குள் நுழைந்து கொண்டான். ஒரு பயங்கரமான கூக்குரலுடன் அறைக் கதவுகள் மூடிக் கொண் டன! மறுமுறையும் அதைவிடப் பயங்கரமான கூச்சல், வேலைப் போல என் நெஞ்சைப் பிளந்து கட்டிடம் முழுவதையும் ஒரு ஆட்டு ஆட்டி ஆகாயத்தில் காற் ருேடு கலந்தது! நான் இன்னது செய்வதென்று தெரியாமல் சிறிது நேரம் விழித்தேன். பின் வெகு வேகமாகப் போலீஸ் ஸ்டேஷ னுக்கு ஓடினேன்.

ராஜகோபாலனுக்குத் தூக்குத் தண்டனை கிடைத்து இன்று எவ் வளவோ வருடங்களாகி விட் டன. அந்தத் துர்ப்பாக்கியத் தம்பதிகளைப் பற்றி உலகத்தார் என்னென்னவோ கட்டுக் கதை களையெல்லாம் கட்டி விட்டு விட் டார்கள். ஆனல் என் அறைக் குப் பக்கத்து அறையில் அதற்குப் பின் ஒருவன்கூடக் குடிவரவில்லை. ஆனல் நான் மட்டும் இன்னும் அதே அறையில்தான் வசித்துக் கொண்டிருக்கிறேன்! ஏனெனில் நள்ளிரவுக்குப்பின் எங்கிருந்தோ வீணையின் நாதம் என் காதுகளில் ஒலித்து என்னைப் பரவசத்தில் ஆழ்த்தி விடுகிறது!

★

அழகின் சூது

அழகு மறைவதோடு நில்லாமல், முகத்தில் விட்டுப் போகும் முத்திரையின் மூலம், தன் முடிவு என்ன என்பதைத் தெரிவிக் கிறது.

எல்பர்டு ஹப்பார்டு

பக்திப் பரவசம்

[சி. பி. பொன்னுசாமி]

முட்டைக்குள் இருக்கும் சிசுப் பறவையைப் போன்று மலரினும் மென்மையான அன்னையின் இன்பக் கரத்தின் அணைப்பிலே நான் உணர்வற்றுக் கிடந்தேன். முல்லை மொக்குகளை மூடியிருக்கும் இதழ்கள் போன்று இமைகள் அப்பொழுது என் கண்களை மூடியிருந்தன.

உலகின் சூறுவளிகள், பேதா பேத உணர்ச்சிகள் இவற்றினின்றும் நான் எவ்வளவு காலம் உணர்வற்ற தன்மையில், தன்னை மறந்த லயத்தில் சொக்கிப் போயிருந்தேன் என்பதை என்னால் சிந்திக்கக் கூட முடியவில்லை. தாமரை இலைகளிலே உருண்டோடும் நீர் முத்துக்களைப் போன்று அவை என் நிர்மலமான தூய உள்ளத்திலே விளையாடிச் சென்று விட்டன. இந்த மயக்கில் நான் எவ்வளவு சாந்தியுடன் இருந்தேன்! தேவ சுவர்க்கத்திலும் இனிய சுகத்தின் சிருஷ்டியில் எவ்வளவு காலம் ஆழ்ந்திருந்தேன் என்பதைக் கனவைப் போல் தான் நினைக்க முடிகிறது. மதுவுண்டு மலரிதழ்களில் மெய்மறந்து உறங்கும் வண்டைப் போல் மயங்கிக் கிடந்த என்னை, ஐயோ! கொடு நெருப்பை இறைத்துச் செல்லும் சூறுவளி போல் சுழன்று கொண்டிருக்கும் கோர உலகின் கொந்தளிப்பு, 'சோ' வென்று இறைந்து கொண்டிருக்கும் கொடுமைக் குரல்கள் மயக்கத்திலிருந்த என் கண்களை எப்படியோ விழிக்கச் செய்து விட்டன. சிருஷ்டியின் சூழ் நிலைகளை அப்பொழுது தான் நான் உணர்ந்தேன். இந்த மண்ணில் நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன் என்று தான் நான் அழுதேன். மணலில் துடிக்கும் மீனைப் போன்று அப்பொழுது என் உள்ளத்திலே துடிப்பு நிறைந்திருந்தது. அந்த இதயத் துடிப்பு என் வாழ்க்கைப் பருவத்தின் விந்தையான மாறுதல்களை சிருஷ்டித்துக் கொண்டு கால ரதத்தைக் கடத்திச் சென்றது. புதிய இதழ்கள் விரித்து மலர்ந்திருக்கும் புதுப் பூவைப் போல் நான் வனப்பு மிகுந்த யுவதிப் பருவத்தைப் பெற்றேன். வண்டுக்காகத் தேன் சுமக்கும் மலரைப் போல சுமந்து கொண்டிருந்த என் அழகை, இளமையை அள்ளி சூறையாடிச் செல்லவா என்னிடம் வந்தன? என் பிறை நெற்றியிலே தவழ்ந்த இருண்ட மேகம் போன்ற கூந்தற் கற்றைகளையும், மை விழிகளின் அஞ்சன ரேகைகளையும், தாமரை வதனத்தின் வனப்பையும் கண்டு அவன் என்னிடம் காதல் கொண்டான். எனக்காக எட்டாத மலர்களை எல்லாம் எட்டி எட்டிப் பார்த்து வந்தான். 'அந்தச் சோலை மலரொளி தான் உன் சுந்தரப் புன்னகை' என்றான். தஞ்சம் நீ! என்று என்னைச் சரண் புகுந்தான். அவன் மோகன வார்த்தைகட்கும் முத்து முழு நகைக்கும் நான் பித்துப் பிடித்தேன். அவன் அணு அணுவாகப் பின்னி வைத்த மோகக் கண்ணிகளிலே மதிமயங்கி வீழ்ந்தேன். என் வாழ்வின் கதி முழுவதுமே அவன் இனிய கரத்தில் ஒப்புவித்தேன். அவன் ஆசையுடன் அணைக்கும்

மலர்க்கரத்தின் சுகம் ஒன்றே என் வாழ்வின் இனிய சுவர்க்கத்தை சிருஷ்டித்தது. காதல் அலைகளிலே களிப்புடன் தோணியைக் கடக்க விட்டோம். ஆனல் சீறி எழுந்த கடுஞ் சூருவளி என்னைக் கதி கலங்கச் செய்து விட்டது. மண்டிக்கிடக்கும் பூவிதழ்களிலே ஜாஜ்வலித்துக் கொண்டிருக்கும் செங்கதிரின் வர்ணப் பிழம்புகளைப் போன்று என் கண்களைப் பறித்து விட்டு கணப் பொழுதில் மறைந்து விட்டன, என் புது வாழ்வின் ஒளி ரேகைகள். நான் விரும்பிப் பறிக்கப் போன ரோஜா மலர் என் கரத்திலே முள்ளைத் தைத்து விட்டது. நல்ல மாணிக்கத்தைக் கொடுக்கும் என்று ஏந்தி நின்ற என் கரத்திலே நஞ்சைக் கக்கிவிட்டது நாகம். காதல் காதல் என்று களிகொண்டு துடித்துப் போன என் கண்களுக்குக் கண்ணீரைக்கொடுத்து விட்டு பக்தி மார்க்கத்திலே அவன் படிந்து விட்டான். அந்த மனத்தின் இருள் என் இளமை உள்ளத்திலே கவிழ்ந்து விட்டது. நீல வானும், காலைப்பிறையும், மாலைச் சுடரும், குளிர்ந்த ஊற்றும் கொடுந் தீச்சிதறல்களை அள்ளி என் முன் இறைத்தன. நான் மற்றப் பெண்களிடமிருந்தும் ஏன் இந்த உலக வாழ்வினின்றும் புறக்கணிக்கப் பட்டேன்!

நான் கூந்தலிலே சூடிய மலர் வாடி உதிர்ந்தன. நெற்றியிலே தீட்டிய திலகம் கண்ணீரிலே தோய்ந்து கரைந்தது. என் அழகுக்கு அழகு செய்த அலங்கிர்தங்கள் என்னை விட்டுப் பிரிந்தன. மல்லிகையைப் போன்ற ஒரே வெண் துகில் என் இயற்கை மேனியைத் தழுவி நின்றது. கூட்டிலிருக்கும் குஞ்சுகளை நோக்கி விரைந்து செல்லும் பறவையின் சிறகுகளைப்போன்று வாழ்க்கை யுலகிலே நிலைகுலைந்த என் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. அலகை போல் அலைந்தேன். இந்த வேதனையின் கொந்தளிப்பில் இளம் பெண்மை யுள்ளம் எவ்வளவு காலம் சகிக்க முடியும்? சாந்தி நிறைந்த ஒரு சுவர்க்கத்தைத் தேடினேன். அது உன்னிடமிருக்கிறது என்று உனக்காக அலைந்தேன். எங்கிருந்தோ குழலினின்றும் வழிந்து பொழியும் கீதம் என் உள்ளத்தை உயிருடன் உருக்கிப் பிழிந்து கொண்டிருந்தது. அந்த இசையை நோக்கிச் சென்றேன். ரத்த ரேகைகள் ததும்பிய சிவந்த பாதங்களிலே சிலம்பொலிக்க, குயிலினும் மென்மையான கீதமிசைத்து அரம்பையர் போன்ற அழகிகள் மழை முகில் கண்ட மயில்கள் போல் நடமாடிக் கொண்டிருந்தனர்.

கோவிலின் உட்பிரகாரம் எங்கு பார்த்தாலும் கற்சிலைகளின் ஒரே கலை அழகு, அலங்காரம், அற்புதம், இவை பிரமிக்கச் செய்தன. தீபவொளிகள் நட்சத்திரங்கள் போன்று சுடர் விட்டுக் கொண்டிருந்தன. வர்ண வர்ண இதழ்களுடன் இனிய மணத்தை வடித்து வந்த வனப்பு மிகுந்த மலர்கள் சிதறிக் கிடக்கும் மீன் போன்று மலர்ந்திருந்தன. ஒரே எழிற்சிலையாய் வடிவு கொண்டிருந்த உன்னைக் கண்டேன். உன் முன் சிரம் வணங்கி மண்டியிட்டேன். மனமுருகிப் பிரார்த்தித்தேன். என் வாழ்வின் இறுதி லக்ஷியமே உன் பிரார்த்தனையாக முடிந்தது. சின்ன பின்னப் பட்ட என் வாழ்வின் சாந்திக்காக உன்னை மன்ருடிக் கெஞ்சினேன். என் வாழ்வென்னும் இளம் பூவின் இதழ்களை உன் திருவடியில்

உதிர்த்தேன். எவ்வளவு காலம் உன் இறைஞ்சுதலில் என் உடம்பையும் உயிரையும் கசக்கிப் பிழிந்திருப்பேன்! நான் உனக்காகக் கொணர்ந்த கனிகள், மலர்கள் இவைகளைக் கொண்டு ஒரு பூவனமே சிருஷ்டித்துவிடலாமே? ஐயோ! நீ அவற்றை கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பார்களே? ஆனால் உன் உள்ளம் பேயினும் கொடிதாகத்தானிருந்தது. ஆனால் உன்னை நான் இன்னும் தேடிக் கொண்டுதானிருக்கிறேன். துடித்துக் கொண்டிருக்கும் என் ஆன்மாவின் உள்ள நிறைவான சாந்தி உன்னிடம்தானிருக்கிறது. உன் கண்களின் கருணைப் பொழிவிலே தான் நான் சஞ்சரிக்கும் உலகிலே ஒரு இன்ப சுவர்க்கத்தைக் காண முடியும். அந்த இனிய சுவர்க்கத்திலே உன்னை நான் எப்பொழுது காணப் போகிறேன்?

உதிர்ந்த இதழ்கள் போன்று என் இளமையின் வனப்பை உதிர்த்து விடாமல் என்றுமே மதியத்தைப் போன்று மலரச் செய்விக்க முடியுமானால்? சாவின் கொடு நெருப்பிலே என் சவுந்தரியம் சாம்பலாகக் கரைந்து விடாமலிருக்கச் செய்ய உன்னால் முடியுமானால்? மணல் வனத்தில் தகிக்கும் கொடு வெப்பத்திலே சிலு சிலிர்க்கும் குளிர்ந்த ஊற்றைப் போல், வெதும்பித் துடிக்கும் பசி வயிற்றிலே குளிர்ந்த நீரைத் தெளிக்க உன்னால் முடியுமானால்? கலங்கி நிற்கும் ஏழையின் கண்களைக் கண்டு உன் கனிந்த முகம் கசிந்து பொழியுமானால்! குளிர்ந்த மழைத்துளிகளுக்காக வானை நோக்கி வாடித் துவளும் மலர்க்கொடிகள் போல் கைவிடப் பட்ட வாழ்வின் வனப்பையும் இன்பத்தையும் நினைந்து ஏங்கித் தவிக்கும் இளம் பெண்ணின் கண்ணீரைக் கண்டு உன் கல் நெஞ்சு கரைந்து உருகுமானால்? அப்பொழுது என் மூடிய கண்கள் மலரும். என் புலன்கள் உணர முடியாத கண்கள் காண முடியாத உன் உலகத்தை விட்டுக் கீழே இரங்காது. என்றுமே உன் கண்கள் காணாத இந்த மனித உலகைத் திரும்பிப் பார். இந்த அழகி உதிர்த்து விட்டுப் போன கண்ணீரிலே ஈரமற்ற உன் கல் வடிவத்தைக் கரைத்து விடு. மண்ணில் நெளிந்து கொண்டிருக்கும் புழு பூச்சி முதற் கொண்டு விண்ணில் சுழன்று கொண்டிருக்கும் அணுரேகைகள் வரை உயிர் கொண்டு துடிக்கும் கோடானு கோடி வர்க்கத் தோற்றங்களின் சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன். உன் கண்களைக் கருணைப் பொலிவிலே திறந்து விடு. இந்த உலகின் கண்ணீருக்காக நீ இரங்கி முகம் பார்.

பக்தி! ஆம். பக்தி. என் நெஞ்சத்திலே கல்லை விடக் கடின எண்ணங்களை விதைத்த பக்தி! இதுவும் ஈசனின் திருவுளச் சம்மதம் தானே? அன்று சொன்னாய்; "உன் மனசை என் மனசாக ஆக்கிப் பார்" என்று ஆம் அவ்விதமே செய்தேன், செய்கிறேன். ஊழி ஊழியாக உலகை அடிமை கொண்ட 'பக்தி, என்னையும் உன் வசம் ஆட்கொள்ளட்டும். நமது நறுமலர்களின் மணம் ஒன்றாய்க் கலக்கட்டும். உனது உயரிய சித்தாந்த தத்துவங்கள் எனக்கு விளங்கா விட்டாலும் உன்னோடு சேர்ந்து வாழும் ஒரு இனிய உலகில் சேர்வேனாக! அந்த ஆனந்த உலகின் இன்ப இசைகளை என் நெஞ்சமும் தன் வசமாக்கட்டும்! அந்த நாளே என் திருநாள்!

குட்டித் தெய்வம்

டி. சி. ராமசாமி

பீகிங் நகரத்திலிருந்து மேற்கு மலைக்குச் செல்லும் பாதை ஓரத்தில் ஒரு கோயிலுண்டு. அதன் சுவர்களுக்குப் பழுத்த சிவப்பு நிறம் பூசப்பட்டிருந்தது; கூரை முழுவதும் பிரகாசமுள்ள பொன்னிறமான ஓடுகளால் மேயப்பட்டிருந்தது; உட்பிரகாரத்தில் ஒரு குட்டித் தெய்வமுண்டு. அந்தத் தெய்வம் அவ்வளவு முக்கியமான தெய்வமல்ல! பத்மாசனம் போட்டு உட்கார்ந்து கொண்டு எப்பொழுதும் சிரித்த வண்ணமிருக்கும்; ஒரு கையைத் தூக்கிக் கொண்டிருக்கும்; அதனைப் போர்த்திருக்கும் ஆடையும் சல்லடைக் கண்களாகக் காட்சியளிக்கும்; அதன் உச்சியில் பச்சைக் கதிர்கள், நீலக் கதிர்கள், பொற்கதிர்கள் — இப்படிப் பல வர்ணக் கதிர்கள் விழுந்து கொண்டிருக்கும். அதன் சுற்றுப் புறத்திலுள்ள கிராமவாசிகள் தினமும் அதற்கு வாசனை வத்திகள் கொளுத்தியும், உணவுத் தட்டுகள் பரிமாறியும் பூஜை செய்வது வழக்கம். தங்களுக்கு வேண்டும் வரங்களை, அதனிடம் கேட்பதுண்டு; வேனிற் காலத்தில் பயிர்கள் வாடாமலிருக்க வேண்டும் என்று விசேஷமாகக் கேட்பார்கள்.

அறுவடை முடிந்த பிறகு அதற்கு முன்னிலும் அதிக வத்திகளும் பீங்கான் தட்டுகளில் மற்ற கேழ்வரகு, தினை முதலியவற்றைக் கொண்டு வந்து வைப்பார்கள். இன்னும் அதற்கு என்னவெல்லாம் பிடிக்கும் என்று நினைக்கிறார்களோ அவ்வளவும் கொண்டு வருவார்கள். என்றாலும் லாமா கோயிலிலுள்ள புத்த விக்கிரஹத்திற்குச் செய்யும் பூஜைக்கு முன் இது எம்மாத்திரம்! குவான்இன் என்ற பெண் தெய்வத்திற்குப் பண்ணும் பூஜைக்குமுன் இது எம்மாத்திரம்! என்ன இருந்தாலும் குட்டித் தெய்வமல்லவா?

மக்களின் விருப்பங்களையும் குறைகளையும், சூழ்ச்சி நிறைந்த ராஜதந்திரிகளின் ஆசைகளையும், நாடிழந்த மஞ்சு இளவரசர்களின் புகார்களையும், வாலிபர்களின் உள்ளத்தைத் திருடும் 'சினிமா ரம்பைகளின்' அந்தரங்க ஆசைகளையும் கேட்பார் புத்தர். அதனால்தான், இரண்டு அடி உயரமுள்ள வாசனை வத்திகளும், குறைந்த பட்சம் 30 உணவுத் தட்டுகளும் அவருக்கு அளிக்க வேண்டும் என்று விதித்தனர் போலும்!

பெண்களின் துயர்களையும் துன்பங்களையும், பூப்போன்ற பாதங்களை இரும்புச் சுவடுகள் நெருக்க வேதனைப்படும் சிறுமிகளின் அழுகையும், கன்னிகளின் நெஞ்சிற் புரளும் ரகசியங்களையும், மலடிகளின் வியாகூலங்களையும், கைவிடப்பட்ட மனைவிமார்களின் கண்ணீரையும் நன்கு அறிவாள் குவான் இன் என்ற பெண் தெய்வம். அதனால்தான், கணக்கற்ற பாதரட்சைகளும் பீங்கான் தட்டுகளும் அவளுக்கு அளிக்கின்றனர் போலும்!

குட்டித் தெய்வத்திற்கு இதெல்லாம் ஒன்றுமில்லை. மழையை வரவழைத்து நாட்டைச்செழிக்கச் செய்ய வேண்டியது அதன் கடமை. எவ்வளவு சுலபமான கடமை! அதற்கு ஏற்றவாறு வத்திகளும், கேழ்வரகும் அளிக்கப் படுகின்றன!

ஒரு வேனிற்காலம். நாட்கணக்கில் கிராமவாசிகள் வானத்தை நோக்கிக் கொண்டிருந்தனர். மேகங்கள் குவியவில்லை; மழை பெய்யவில்லை; பயிர்கள் தலை நிமிர்ந்து நிற்கவில்லை. நிலங்கள் வரண்டும் வெடித்தும் வந்தன. மொட்டை மரங்களுக்கு அடியில் நாய்கள் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு படுத்துக் கிடந்தன. கழுதைகள் நடக்கவும் ஜீவனின்றித் தத்தளித்துக் கொண்டிருந்தன.

மனிதனை எலும்புக் கூடாக்கும் கொடிய 'வடக்குப் பஞ்சம்' குமரிகளை அடமானம் வைக்கும்படி செய்யும் பஞ்சம், பட்டினியால் வாடும் தாய்மார்கள் தங்கள் மார்பில், குழந்தைகள் பால் குடிப்பதற்கில்லாமல் இறக்கும்படி செய்யும் பஞ்சம் — கோரப் பஞ்சம் — தங்களை நெருங்கி வருவதை உணர்ந்தனர் கிராமவாசிகள். குட்டித் தெய்வத்தை பல முறை தொழுதும் வந்தனர்; ரத்தத்தைச் சிந்திப் பெற்ற செம்பு நாணயங்களை வத்திகளாக்கி அதிகமாகக் கொளுத்தி வைத்தனர்.

புத்தர், குவான் இன் முதலிய தெய்வங்களுக்குள்ள கடமைகளில் நூறில் ஒரு பங்குகூட இந்தக் குட்டித் தெய்வத்திற்கில்லை. மிகவும் சுலபமான தன் கடமையில் தவற வேண்டிய அவசியமில்லை. ஆனாலும், தன் கடமையைச் செய்யத் தவறிவிட்டது — மேகங்கள் குவியவில்லை; மழை பெய்யவில்லை; பயிர்கள் தலை நிமிர்ந்து நிற்கவில்லை; நிலங்கள் வரண்டும் வெடித்தும் வந்தன. இதனால், ஜனங்களின் மனம் நொந்துவிட்டது.

"தன் கடமையைச் செய்யத் தெரியாத கடவுளால் நமக்கு என்ன பயன்? மனமாரப் பூஜை செய்தும் நாம் கண்ட பலன் என்ன? இதுவும் ஒரு தெய்வம்! நம்மீது கோபமாயிருக்க வேண்டும்; அல்லது நாம் முறையிடுவதைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள் தெய்வமாகத் தானிருக்க வேண்டும். ஒருக்கால், நிழலின் கீழிருப்பதால் வெயிலின் கொடுமையை உணரவில்லை போலும்! 'கோயிற் படியின் மீது வெயிலில் காயும்படி போட்டுவிட்டால், மழை அவசியம் என்று உணரும்' என்று எண்ணினர்கள். அதன்படி, எவ்விதச் சடங்குமின்றி அத் தெய்வத்தை வெளியே கொண்டு வந்து கோயிற் படியின் மீது போட்டனர்.

வெயில் எரித்துக் கொண்டிருந்தது. முன் போலவே, அந்த தெய்வம் சிரித்த வண்ணம் உட்கார்ந்து கொண்டு அவ்வழியே செல்பவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தது. சில சமயங்களில் சங்கிலிபோல் தொடர்ந்து செல்லும் ஒட்டகங்கள் தங்கள் நீண்ட கழுத்துக்களை நீட்டி அதனை நக்கிச் செல்லும்; கழுதைகளும் சில சமயங்களில் அதனருகில் நிற்கும். அவ்வழியே ரிக்ஷாவில் செல்லும் வெள்ளைக்காரிகள் தங்களுடைய நீல விழிகளால் ஆச்சரியத்துடன் அதனை நோக்குவார்கள். தூரத்தில் இறைக்கும்

ஏற்ற ஒலி அதன் காதுகளில் விழுந்து கொண்டிருக்கும்.

அதற்கு சற்று தூரத்தில் பீச், ஆப்ரிகாட் போன்ற பழவர்க்கங்களை 'பிரமிட்' மாதிரி அடுக்கி வைத்துக் கொண்டு வியாபாரம் செய்வான் பழக்காரன். வெயிலில் அவைகள் வாடாமலிருப்பதற்காக அடிக்கடி தண்ணீர் தெளித்துக் கொண்டிருப்பான்; ஈக்கள் மொய்க்காமலிருக்க சிறுமி ஒருவள் விசிறி வீசிக் கொண்டிருப்பாள். கோயிலில் இருக்கும் பொழுது குட்டித் தெய்வம் இத்தகைய காட்சிகளைப் பார்க்க முடியவில்லை. ஆனால், இப்பொழுது ஒவ்வொன்றையும் ஊன்றிக் கவனிக்கும்படி நேர்ந்து விட்டது. மிதமிஞ்சிய வெப்பத்தால் அதன் முதுகில் சில இடங்களில் பிளவு உண்டாகி விட்டது; நெருப்புக் கோளம்போல் அதன் தலை பரிணமித்தது.

கொஞ்ச நேரம் ஆனது. தண்ணீர் கொண்டு வருவதற்காக மூங்கிற் கழியின் இரு முனைகளிலும் இரண்டு டின்களைக்கட்டி தோளில் சுமந்து அவ்வழியே சென்று கொண்டிருந்த ஒரு சிறுவனின் கவனம் குட்டித் தெய்வத்தினிடம் சென்றது. டின்களைக் கீழே வைத்து விட்டு அத்தெய்வத்தை உற்றுக் கவனித்தான். அவன் கருப்பு மேனியில் அழுக்குப் படிந்திருந்தது; உடுத்திருந்த ஆடையும் கந்தல். தலை மொட்டை என்றாலும் அதன் உச்சியில் ஆச்சரியக் குறி போல் இரண்டு மயிரிழைகள் இருந்தன; அற்றிற்கு 'உல்லன்' நூல் கட்டப்பட்டிருந்தது.

மூன்று வாரங்களுக்கு முன்பே அந்தத் தெய்வம் மழை பெய்யச் செய்திருக்க வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். ஆனால், அப்படிச் செய்யவில்லை என்றாலும் நாளெல்லாம் அவதிப்படும் அதனிடம் இரக்கம் கொண்டான். அதன் தலையைத் தொட்டுப் பார்த்தான்; அது அவன் கையைச் சுட்டது. சுற்றிலும் திரும்பிப் பார்த்தான்.

பழக்காரன் பழம் விற்றுக் கொண்டிருந்தான். ஈயோட்டும் சிறுமி தூங்கிக்கொண்டிருந்தாள். வழிப் போக்கர்கள் சற்று தூரத்தில் சென்று கொண்டிருந்தனர். தெய்வத்திற்கு எதிராக வேகமாய் ஓடினான். தூரத்திலிருந்த மரத்தடியில் கிடந்த வரண்ட புற்களையும் ஒரு சிறு பாய்த் துண்டையும் பொறுக்கி ஒரு குல்லாய் செய்தான். "வெயிலின் கொடுமை இனி உனக்கில்லை" என்று முணுமுணுத்த வண்ணம், அதன் தலையில் குல்லாயை வைத்து விட்டு, 'மழை வேண்டும்' என்று வேண்டிக்கொண்டு டின்களை எடுத்துக் கொண்டு வேகமாய்ச் சென்று விட்டான்.

அந்தக் குட்டித் தெய்வம் சிந்தித்து இருக்க வேண்டும். ஏனெனில், கிழக்கு மலைச்சாரலில் சிறு மேகங்கள் தென்பட்டன. க்ஷண நேரத்தில் சிறு மேகங்கள் பெரிய மேகங்களாகி வானமே கண்ணுக்குப் புலப்படாமல் செய்து விட்டன. மின்னல் சிரித்துக் கொண்டிருந்தது. அண்டம் இடிபட இடி இடித்துக் கொண்டிருந்தது. மழை தாரை தாரையாகப் பொழிந்து கொண்டிருந்தது. வாய்க்கால்களில் வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. வரண்ட பூமிகள் தாக சாந்தி செய்து கொண்டன. வதங்கிய பயிர்கள் தலை நிமிர்ந்து நின்றன.

மக்களை வாட்டிய பஞ்சம் பஞ்சாய்ப் பறந்தது. குடிசைகளில்

பாட்டும் கூத்தும் நிறைந்தன. "நிச்சயம் நமது கடவுள் வெயிலே உணர்ந்திருக்க வேண்டும். அதனுல்தான் இவ்வளவு மழை" என்று ஜனங்கள் நினைத்தனர். உடனே, படியில் கிடந்த தெய்வத்தை கோயிலுக்குள் வைத்தனர். ஏராளமான வத்திகளையும் உணவுத் தட்டுகளையும் தாராளமாக அதற்குச் சமர்ப்பணம் செய்தனர். முன் போலவே அதன் உச்சியில் பல வர்ணக் கதிர்கள் வீழ, வத்திகளின் நறுமணம் கமழும் புகை சூழ சிரித்த வண்ணம் உட்கார்ந்திருந்தது. ஆனுல், அதன் தலே மீதிருந்த குல்லாயைக் காணும்!

மழை அடித்துக் கொண்டு போய் பாதையோரத்தில் போட்டிருக்க வேண்டும். அவ்வழிச் சென்ற கோவேறு கழுதை அதனைக் காலால் மிதித்துச் சேற்றில் அமிழ்த்தியிருக்க வேண்டும்.

★

கள்ள மார்க்கெட்

வட இந்தியப் பத்திரிகைச் செய்தியில், போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு வந்த கடிதம்: இன்ஸ்பெக்டரே, இதே தெருவில் 9-ம் நம்பர் வீட்டில் ஒரு போக்கிரி, கொள்ளேக்காரன் இருக்கிறுன். நான் இரும்புப் பெட்டிகளே நேற்றிரவு உடைத்தபோது ஆயிர ரூபாய் நோட்டுகள், பத்தாயிர ரூபாய் நோட்டுகள் கட்டுக் கட்டாகக் கண்டேன். ஏன் அவை நூறு ரூபாய் நோட்டுக்களாக மாற்றப்படவில்லே என்பதைப் போலீசார் புலன் விசாரிப்பார்களா?

இப்படிக்கு,

'உண்மை விளம்பி'

கன்யா குமாரி (சிறுகதைத் தொகுதி) ஆசிரியர்: த. நா. குமாரசாமி, பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; விலை ரூ. 2—8—0.

இச்சிறுகதைத் தொகுதியின் ஆசிரியர் த. நா. குமாரசாமி என்ருல் கதைகளின் உயர்வைப் பற்றியோ, நடையின் இனிமையைப் பற்றியோ அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. உள்ள உணர்ச்சிகளைப் பலவேறு கோணங்களில் காட்டும் பதினைந்து சிறுகதைகள் இத்தொகுதியில் சேர்க்கப் பட்டுள்ளன. இவற்றில் ராமராயன் கோவில், ஸ்ரீசைலம், மணிச்சுடர், குரூர உலகம் ஆகிய கதைகள் குறிப்பிடத் தக்கவை.

●

தீனக்குரல்: (நாவல்) ஆசிரியர்: ரா. வெங்கடாசலம்; சுதேசமித்திரன் வெளியீடு: விற்பனை உரிமை: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை; விலை ரூ. 1—8—0.

சோலைமலையும், பிரமாயியும் இரண்டு கிராமியக் காதலர்கள். வழக்கமாகக் காதலர்கள் அனுபவிக்கும் எத்தனையோ துன்பங்களை இவர்களும் அனுபவித்து கடைசியில் இருவரும் ஒன்று சேருகிருர்கள். கதையில் கருத்து ஒன்றும் பிரமாதமாக இல்லா விட்டாலும், இந்தச் சிறு அடிப்படையை வைத்துக் கொண்டு பக்க பலமாக சில நல்ல கதா பாத்திரங்களையும் சிருஷ்டித்துக் கொண்டு கிராமிய மணம் தொட்ட இடத்திலெல்லாம் கமழ சுவாரஸ்யமாகக் கதையைப் பின்னிச் செல்கிருர், ஆசிரியர் வெங்கடாசலம். ஆசிரியரின் பண்பட்ட கிராமிய உள்ளத்தை நாவலில் பல இடங்களில் பார்க்க முடிகிறது. சுவைத்துப் படிக்கக் கூடிய சொந்த நாவல்.

●

கிடைக்கப் பெற்ருேம்:

திருக்களர் ஸ்தல புராணம்: தேவஸ்தான வெளியீடு; தொகுப்பாசிரியர்: ப. இராமநாத பிள்ளை.

மிருகேந்திரம்: ஆசிரியர் ஸ்ரீமத் வெள்ளியம்பல வாணத் தம்பிரான் சுவாமிகள்.

உண்மை விளக்கம்: ஆசிரியர்: திருவதிகை மணிவாசகங் கடந்தார்.

நடராஜ சதகம்: ஆசிரியர்: ஸ்ரீமத் சிதம்பரநாத முனிவர்; (ஆதீன வெளியீடுகள்.)

—'உமாபதி'

அறிவு

['பிரம்மம்']

நான் உலகைப் பார்த்து நகைக்கிறேன். உலகம் என்னைப் பார்த்து நகைக்கிறது! இது ஒரு பைத்தியக்கார உலகம் என்பது என் அபிப்பிராயம்! அதுவும் என்னைப்பற்றி இதே மாதிரி அபிப்பிராயப் படலாம். அதை நான் முழு மனதோடு ஆமோதிக்கிறேன். ஏனெனில் இதில் நானும் சம்பந்தப் பட்டிருக்கிறேன்.

"பிழைக்க வழி தெரியாத சோம்பேறி" என்று என்னை எல்லோரும் எசி, ஏளனம் செய்கிறார்கள். நான் எந்த வழியில் பிழைப்பது? பிழைப்பது என்றால் உயிரோடிருப்பதா? அல்லது உணவுக்கு வழி தேடுவதா? நானோ உயிரோடிருக்கிறேன். ஆகவே உணவுக்கு வழி தேடுவது தான் நான் செய்ய வேண்டிய பிழைப்பு! இது தான் எப்படி என்று எனக்குத் தெரியவில்லை!

நான் சொல்வது புதிர் மாதிரியிருக்கிறதா? இருக்கும். பிழைக்கும் வழி என்றால் பிறரை தாஜா பண்ணி காலங் கடத்துவது என்பது பொருள். ஏய்த்துப் பிழைப்பது எப்படிப் பிழைப்பாகும்?

வேதாந்திகள் சொல்கிற மாதிரி உலகமே மாயை தானே? ஆகவே தான் நான் என்ன செய்வது என்று தெரியவில்லை. "உலகத்திலுள்ளவர்களுடன் நீயும் ஒத்து வாழ வேண்டியது தானே?" என்கிறீர்களோ?

உண்மை தான்! ஆனால் ஆண்டவன் என்னைப் படைக்கும் போது ஒரு பெரும் தவறு செய்து விட்டான். அதன் பலனைத்தான் நான் இப்போது பழிக்காளானேன். ஆண்டவன் எனக்கு அறிவைக் கொடுத்து விட்டான். இது நல்லது இது கெட்டது என்று பகுத்தறியும் திறமையைக் கொடுத்து விட்டான்.

என்னால் பொய் சொல்ல முடியாது. பிறரை ஏமாற்ற முடியாது! வஞ்சகம், சூது, வாது, கபடம், இவை யாவும் என்னிடத்திலில்லை.

எனவே இந்த உலகத்தில் உணவுக்கு வழி தேட என்னால் முடியாது! என்னவோ இது தத்துவம் போல் இருக்கும். சிறு கதையாக இராது. கட்டுரையாகவும் இராது. கேவலம் வசன கவிதையாகக் கூட இது தோன்றாது. ஆதலால் எல்லோரும் அனுபவிக்கும்படியாகத்தான் எப்படி நான் எழுத முடியும்?

யாரோ ஒரு மகான் பாடினார்:

"கல்லாத மாந்தரே
நல்லவர்கள், நல்லவர்கள்"

உண்மை தான், 'கற்றும் அறிவில்லாத' என்னை நான் தான் என்ன செய்வது?

நான் ஏன் ஒரு மரமாகப் பிறந்திருக்கக் கூடாது? அதி லும் ஒரு ஷண்பக மரமாகப் பிறந்திருக்கக் கூடாது? பூவெடுத்தாவது பக்தர்கள் பூஜிப் பார்களே! மர வாழ்விலும் ஒரு மதுரம் நிறைந்திருக்குமே!

நான் ஒரு 'கை நாட்டாகப் பிறந்திருந்தால், 'தற்குறி' என்ற பெயரோடு சும்மா இருந் திருப்பேனே? இப்போது என் னத்தையெல்லாமோ படித்து விட்டு மனதை ஏன் இவ் வளவு தூரம் அலட்டிக் கொள்ள வேண்டும்?

பாரதியார் ஓரிடத்தில் சொன்னார்:- (உண்மையில் பாட்டுப் புத்தகத்தில் தான் எழுதி வைத்திருக்கிறார்.)

"கனவாய்ப் பழங்கதை யாய்ப் போயினவே" என்று.

அடடா! எனக்கு முன்னே சித்தர் பலர் அப்படியெல்லாம் வருந்தி இருக்கிறார்களா? நல் லது. எனக்குத் தான் இப் போது என்ன வந்தது? சிலர் தெரியாமல் சிரிக்கிறார்கள். நான் தெரிந்தே சிரிக்கிறேன். உலகமே ஒரு சிரிப்பின் எதி ரொலி தானே?

★

வார்த்தைகள் ஏன்?

நாம் மௌனமாக இருந்தால் நமது விருப்பங்கள் நிறை வேறுமா? வார்த்தைகள் நமது விருப்பத்தை அழிக்கப் பிறக்க வில்லை; துலக்கவே பிறந்துள்ளன.

— ஸிஸிரோ.

கூடிப் பலவுறவு சூழ — இன்பக்
கூத்தில் திளைத்தெளியன் ஆகி
வாடிக் கிடக்கும் மகன் போல — பெரும்
வாட்டம் கொண்ட்மரத் தருகில்,

கள்ளில் நிறைந்தமலர் குலுங்க — இளங்
காற்றில் தளரும் பசுஞ் செடிகள்
வெள்ளைப் பிறைமதியம் போல — நதியில்
வேகத் துடன்தவழும் ஓட்ம்.

'விசாகன்'

ஏசுவின் இதயம்

இளா

தேக உறுப்புக்களிலே இதயம் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது. அது சரீரத்தின் மத்திய பீடம். உயிருக்காதாரமாகிய இரத்த ஓட்டத்தின் மூலமும் அதுவே. இன்னும் இதயமே இரக்கத்தின் இருப்பிடமாகவும் கொள்ளப்படுகிறது. ஈரமுள்ள நெஞ்சம் என்பது அதிலுலேயே யாகும். ஈவு, இரக்கம், தயை தாக்ஷண்யம், கருணை, காருண்யம் என்ற அன்பின் குணங்களுக்கு மூலஸ்தானமாக இருப்பதும் இதயமே.

ஆகவே, அன்பின் உருவாக அவதரித்த கிறிஸ்து பெருமான் மனிதக் குலத்தை மீட்க தம்மையே தியாக பலியாக அர்ப்பணம் செய்தபோது, தமது திரு இதயத்தினின்று உதித்த இரத்தத்தின் கடைசித் துளியையும் தந்து உதவினர்; அந்த இரத்தமே மனித குலப் பாதுகாப்பின் விலையாயிருந்தது. எனவே, அம்மாபெரும் தியாகத்தின் சின்னமாக திறந்து காட்டும் இதய ரூபத்தில் ஏசு கிறிஸ்து நாதர் சித்தரிக்கப்படுகிறார்.

கிருஸ்துவின் வாழ்க்கை பிறப்பு முதல் இறப்பு வரை எளியதாய், அன்பு மயமாய் இருந்தது. அன்பே அவரின் தூய வாழ்க்கையின் நியதியாய்த் திகழ்ந்தது. சொல்லிலும் செயலிலும், போதனையிலும், சாதனையிலும் அன்பின் சர்வ இலக்ஷணங்களும் ஒளியின் கதிர்கள்போல் பிரகாசித்தன. அஹிம்சையின் எல்லா நல்ல குணங்களும் அவரின் அற்புத வாழ்க்கையின் அடிப்படையாக இருந்தது — ஆகவே ஈவு, இரக்கம், தயை தாக்ஷண்யம், சாந்தம், சாத்மீகம், பொறுமை, நீதி என்ற தெய்வீக குணங்களுக்கெல்லாம் தாயகமாக இருந்தது அந்த தெய்வீக இதயம்.

பின்னும் பாவ சக்தியில் உழன்றோருக்கும், பரம தரித்திரத்தில் கிடந்தோருக்கும், நோயின் கொடுமையில் வாடியோருக்கும், தீராப் பிணிகளின் தீமையில் துன்புற்றோருக்கும், ஆறுதலாகவும், ஆதரவாகவும், நம்பிக்கையாகவும் தஞ்சமாகவும், அபயமாகவும், சாந்தி, சமாதானமாகவும், ஔடதமாகவும் இருந்தது அந்த தேசத்தின் வாசஸ்தலமான யேசுவின் இதயம்.

ஏசுநாதர் கடைசியாய் சிலுவையில் பலியாக தம் இன்னுயிரைக் கொடுத்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம், உரோமாபுரிச் சேவகரில் ஒற்றைக் கண்ணுடைருந்த் கொடியன் ஒருவன், தன் நீண்ட ஈட்டியால் குத்தி அவரின் நெஞ்சை ஊடுருவிய போது, இதயம் பிளந்தது. (பிளந்த கணப்பொழுதில் அவ்விதயத்தினின்றும் தெரித்த கடைசித் துளி இரத்தமானது, அவன் இழந்த கண்ணில் பட்டதும், குணமாகி ஒளியைப் பெற்றான்.) ஏசுவின் திருவுள்ளம் புனிதத்தின் இருப்பிடம் என்பதற்கு இது தக்க சான்று. கருணா மூர்த்தியின் உள்ளம் கருணைக் கடலாக விளங்கியதில் வியப்பில்லை அல்லவா?

'தன்னரிய திருமேனி தவிப்புண்டு
களைப் பெய்தி

பன்னரிய பலபாடு படும் போதும்
பரிந்து எந்தாய்

என்னதென அறிகிலாதார் இவர்
செயும் பிழையை

மன்னியும் என எழிற் கனிவாய்
மொழிந்தார் தம் அருள் வள்ளல்'

அப்பேர்ப்பட்ட உத்தம குணத்தைப் புனிதன் ஏசுவிடமே காணலாம்.

ஆகவே, ஏசுவின் திரு இதயம் அன்பின் சுனையாகவும், தஞ்சத்தின் தாயகமாகவும், வறுமையின் இனிமையாகவும், கஷ்டத்தின் இஷ்டமாகவும், துன்பத்தின் இன்பமாகவும், பாவத்தின் பரிகாரமாகவும், தியாகத்தின் உச்சமாகவும், சர்வ நன்மையின் சொரூபமாகவும், நேசத்தின் நெருப்பாகவும், தூய்மையின் ஸ்தானமாகவும் இருந்து, சகலரும் அன்பு, அறிவு, சாந்தம், தயை, தாக்ஷண்யம், பொறுமை, ஈவு, இரக்கம், கீழ்ப்படிதல் பணிவு சகிப்புத் தன்மை என்னும் பெருமித குணங்களை அறிந்து அனுபவிக்கத் தகும் பேரின்ப பொக்கிஷமாகவும் திகழ்கிறது.

"இதயத்தில் அன்பும் சாந்தமுமான ஏசுவே, என் இதயமும் உமது திரு இதயத்தைப் போலவே அருளுக" என்ற எண்ணத்தையே ஏசுநாதருடைய இருதயப் படத்தில் ஓவியமாகப் பார்க்கிறோம்.

★

பொருளும் அறிவும்

நீ விலை கொடுத்து அடுக்கிக்கொண்ட புஸ்தகங்கள் வீடு நிறைய இருந்தால், அறிவாளி ஆகிவிட்டதாக எண்ண முடியுமா? வில், தந்தி, வீணை, வயலின் முதலிய வாத்தியங்கூட ரொக்கத்துக்கு வாங்கியவனை, வித்வான் என்று சொல்கிறது போல ஆகும்அது.

கிரேக்கப் புலவன்

பாப்பா கதை:

அன்னக் குஞ்சு

எஸ். பி. மாதையன்

ஒரு தாமரைக் குளத்தில் ஒரு அன்னப் பறவை தன் குடும்ப சகிதம் வசித்து வந்தது. அன்னத்தின் கடைசிக் குஞ்சு ரொம்பத் துடுக்கு. தாய் தந்தையரின் சொல்லை அது கேட்பதே இல்லை. அவர்களுக்குத் தெரியாமல் அடிக்கடி தன் மாமன் வீட்டுக்குப் போய் விடும். மாமன் வீடு, அடுத்த தாமரைக் குளத்தில்தான் இருந்தது. என்றாலும் போகும் போது யாராவது பிடித்

துக் கொண்டால் என்ன செய்வது என்று தாய் அன்னம் கவலைப்பட்டது. எத்தனையோ தரம் கண்டித்தும், அன்னக் குஞ்சு கேட்பதில்லை.

ஒரு நாள் வழக்கம்போல் அன்னக்குஞ்சு மாமன் வீட்டிற்குச் சென்றது. மாமன் மகளுடன் இரண்டு நாள் ஆடியும் பாடியும் உல்லாசமாய்த் திரிந்தது. மூன்றாவது நாள் தன் மாமன் கொடுத்த பல பரிசுகளுடனும், கொய்யாப் பழங்களுடனும் திரும்பி வந்தது வீட்டிற்கு. குளத்துப் படியில் கிளிமாமா உட்கார்ந்திருந்ததைப் பார்த்து தன் மாமன் கொடுத்திருந்த பரிசுகளையெல்லாம் எடுத்துக்காட்டி பெருமை யடித்துக் கொண்டது. ஆனால் கிளி மாமா பதில் பேசவில்லை. பொறாமையால் தான் கிளிமாமா தன்னுடன் பேசவில்லை யென்று நினைத்தது. ஆனால் கிளி மாமாவின் கண்களிலிருந்து கண்ணீர் வந்ததைக் கண்டு திடுக்கிட்டது அன்னக் குஞ்சு. "ஏன் மாமா அழுகிறாய்?" என்று கேட்டது. கிளி மாமா கண்களைத் துடைத்துக்கொண்டே 'எனக்கொன்றும் கஷ்டம் வரவில்லை. உன் தாய் தந்தையையும் சகோதரர்களையும் இங்கு வந்த

ராஜகுமாரன் பிடித்துக் கொண்டு போய் விட்டான். இனி நீ என்ன செய்யப் போகிறுய்?'' என்றது. இதைக்கேட்டதும் அன்னக்குஞ்சு தாமரைக் குளத்தை எட்டிப்

பார்த்தது. பிறகு, விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டது. கிளி மாமா அதைச் சமாதானம்செய்து, "அழாதே அங்கு உன் பெற்றோர்களுக்கும், சகோதரர்களுக்கும் எந்த விதமான கஷ்டமும் இருக்காது. பால் நிறைந்த ஒரு பளிங்குக் குளத்திலே அவர்கள் சந்தோஷமாக நீந்திக்கொண்டிருப்பார்கள். ராஜகுமாரி அவர்களுடன் சேர்ந்து, விளையாடுவாள்'' என்றது. அழுது கொண்டிருந்த அன்னக்குஞ்சு, "இதெல்லாம் உனக்கு எப்படி மாமா தெரியும்?'' என்று கேட்டது.

அதற்குக் கிளி, "நானும் அங்குதான் இருந்தேன். எனக்காக ஒரு தங்கக் கூண்டு இருந்தது. பாலும் பழமும் ஏராளமாகக் கிடைத்தன. ராஜகுமாரி என்மேல் உயிராக இருந்தாள். 'வைரமணி' என்று என்னை அன்பாகக் கூப்பிடுவாள். இருந்தாலும் சிறை வாழ்வு ஒரு வாழ்வா? அதனுல் அவர்கள் ஏமாந்திருக்கும் சமயம் பார்த்துத் தப்பி வந்து விட்டேன்'' என்றது.

"அப்படியானுல் என்னுடைய அப்பா அம்மாவுக்கும் அப்படித்தானே இருக்கும்? கிளி மாமா, நீ யாருக்கும் தெரியாமல் தப்பித்துக் கொண்டு வந்தாயே! அது போல் அவர்களும் தப்பித்துக் கொண்டு வர முடியாதா?'' என்று கேட்டது அன்னக் குஞ்சு.

"நான் சொல்லுகிறபடி நீ கேட்பதாயிருந்தால் நான்



அவர்களைத் தப்புவிக்கிறேன்'' என்றது கிளி. அன்னக் குஞ்சு சந்தோஷத்துடன், "கிளி மாமா! நீங்க சொல்லுகிறபடியெல்லாம் நான் கேட்கிறேன். எப்படியாவது அவர்

களையெல்லாம் நீ கூட்டிக் கொண்டு வந்து விடு மாமா'' என்றது.

"சரி, இனிமேல் நீ அம்மா அப்பாவைக் கேட்காமல் எங்கும் போகக் கூடாது. உன் மாமாவீட்டிற்கும் கூடத்தான். அவர்களைக்கேட்டுக் கொண்டு தான் போகவேண்டும். தெரியுமா?'' என்றார் கிளி மாமா.

"ஆகட்டும் மாமா!'' இனி அப்பா அம்மாவைக் கேட்காமல் எங்குமே போகமாட்டேன்'' என்று அழுதது அன்னக்குஞ்சு.

அன்னக்குஞ்சு சொன்னதைக் கேட்டுக் கொண்டே பக்கத்துப் புதரில் மறைந்திருந்த அன்னக்குஞ்சின் பெற்றோர்களும் சகோதரர்களும் வெளியே வந்தனர். கிளி மாமா சிரித்துக் கொண்டார். அன்னக் குஞ்சு ஓடிச்சென்று அம்மாவைக் கட்டிக் கொண்டது. அது முதல் அன்னக் குஞ்சு கேட்காமல் எங்கும் போவது கிடையாது.

உழவன்

ஜாய்ஸ் பொன்னையா

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது என்பது வாக்கு. அந்த உழக்கையும் உறிஞ்சாமல் விட்டால் உள்ளம் நிறைகிறான் ஏழை உழவன்.

சங்கிலிக் குடும்பனுக்கு இருந்ததெல்லாம் ஒரு ஏகரா பூமி. அவன் அதைச் சாகுபடி செய்து அதன் வருவாயிலிருந்து தன் குடும்பத்தைப் போஷிக்க வேண்டும். குடும்பமென்றால், குழந்தைகளும் குட்டிகளுமாக ஒரு டஜனுக்குக் குறைவில்லை. சங்கிலிக் குடும்பன் தன் பிள்ளைகளில் எதையும் படிக்க வைக்க வேண்டுமென்று நினைத்ததில்லை. ஏழை மக்களுக்குப் படிப்பென்ன வாழ்கிறது என்பது அவன் சித்தாந்தம். ஆனால் குழந்தைகளைப் படிக்க விடாத போதிலும் அவன் வரவு எப்பொழுதும் செலவுக்கு மிஞ்சினதில்லை. விளைச்சல் தவறாமல் இருந்து வந்த வரையில் அவனது இந்தச் சீவனமும் எப்படியோ நடந்து வந்தது. திடீரென்று ஒரு வருஷமாக அந்தப் பிராந்தியத்தில் எங்கும் மழை பெய்யாமல் வானம் அடைத்து விட்டது. அதன் காரணமாக அந்த வருஷத்தில் சங்கிலிக் குடும்பனுக்கு விளைச்சலில்லை. பாவம், என்ன செய்வான்! வருவாய் அடை பட்டதே யொழிய செலவு அடைபடவில்லை. வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களை ஒவ்வொன்றாக விற்றுக் குடும்பத்தைப் போஷித்தான். சில நாட்களில் அதற்கிடமில்லாமல் கிராம அதிகாரி தீர்வைப்பாக்கிக்கென்று சாமான்களை யெல்லாம் ஆக்கிரமித்துச் சென்றான். தன் வறுமையைச் சொல்லிக் கெஞ்சினான், கதறினான் சங்கிலி. அதிகார வர்க்கமோ செவி சாய்க்கவில்லை. தன் வறுமை நீங்கும் காலத்தை எதிர் நோக்கிப் பட்டினியும் பசியுமாக நாட்களைக் கழிக்கவும் சங்கிலி சித்தமாயிருந்தான். ஆனால் பெற்ற பிள்ளை பசிக்கிறதென்று கதறும் பொழுது எந்த அப்பனின் மனம் பொறுக்கும்! வேறு வழியில்லாமல் சங்கிலி தன் தடியை எடுத்துக்கொண்டு தனக்கு அது வரை அன்னமளித்து வந்த பூமியை நாடிச் சென்றான்.

வழி நெடுகப் பூமி வரண்டிருந்தது கண்டு அவன் உள்ளம் பதறினது. தன் வயலில் இறங்கி நடந்து பார்த்தான். தரை கல்லாய் உறைந்திருந்து. அதன் இதயத்தில்கூட ஈரமில்லை. அதில் முளைத்து உலர்ந்துபோன கோரைப் புற்கள் அவன் பாதங்களைக் குத்தும் பொழுது அவன் உள்ளமே குத்துண்டதுபோலிருந்தது. "காடோடி, உனக்கு ஒரு கோழி தருகிறேன், வானம் திறக்க நீ தான் அருள்புரிய வேண்டும்" என்று தன் குல தெய்வத்தைக் கை கூப்பினான் சங்கிலி. வயலில் இருந்து திரும்பும் பொழுது சங்கிலிக்குச் சிறிது தலையை வலிக்கிறது போலிருந்தது. அன்றிரவே வானமும் திறந்தது. சங்கிலிக்கோ இன்னும் தலையை வலித்துக் கொண்டிருந்தது.

மறு நாள் அதிகாலையிலே அந்தக் குக்கிராமத்தில் ஒரு தனிக்

குதூகலம் காணப் பட்டது. மழை இன்னும் தூறிக் கொண்டிருந்தது. அதையும் பொருட்படுத்தாமல் அங்குள்ள ஏழை உழவர்கள் உற்சாகமாய்த் தங்கள் உழவு மாடுகளை ஓட்டிக் கொண்டு தங்கள் தங்கள் வயல்களை நோக்கி நடந்தார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த சங்கிலிக்கோ இருப்புக்கொள்ளவில்லை. இரவெல்லாம் அகோரமாயிருந்த தலைவலி அவனுக்கு அப்பொழுது சற்று நின்றிருப்பதுபோல் தோன்றினது. அவன் தன் உழவு மாடுகளை ஓட்டிக்கொண்டு வயலை அடைந்து விட்டான். மழைத் தூரலோ இன்னும் நிற்கவில்லை. வாடைக் காற்று ஒரு பக்கம் வீசிக் கொண்டிருந்தது. உழைப்பில் உடைந்துபோன சங்கிலியின் உடலோ எதையும் சட்டை செய்யவில்லை. அவன் கரங்கள் கலப்பையின் நுனியை அழுத்திப் பிடித்தன. வஞ்சம் தீர்த்துக் கொள்வது போல் கலப்பையும் அந்த ஈரமற்ற பூமியின் நெஞ்சைப் பிளந்து சென்றது. அவன் கால்களின் கீழுள்ள மண் உதிர்ந்து பசுமை தெரியும் பொழுது அவன் அகம் மகிழ்ந்தது.

வீட்டிற்குத் திரும்பும் பொழுது சங்கிலியின் உடம்பெல்லாம் ஒரே வலியாக வலித்தது. பிள்ளைகளின் பசித்துயரம், அதையும் லட்சியம் பண்ணாமல் மறு நாளே விதைகளையும் வயலில் கொண்டு கொட்டினான். அவன் வயது சென்ற கரங்கள் விதைகளை அள்ளித் தூவும் போதெல்லாம் அறுப்பின் காலமும், அவன் குடும்பத்தாரின் அகமகிழ்ந்த முகங்களுமே அவன் கண்முன் தோன்றின. உற்சாகமாய் அன்று வீடு திரும்பினான்.

களைப்பு சற்று அதிகமாக இருப்பது போலிருந்தது. என்றும் பகல் வேளையில் படுத்து சுகமறியா ஏழை உழவன் அன்று பொழுதிருக்கவே படுத்து விட்டான். அன்றிரவு நடுநிசியில் அகோரமான ஜுரத்தில் சங்கிலி நினைவிழந்து கிடந்தான்.

பொழுது விடிந்தது. இரவில் பிடித்த பெருமழை நிற்கவில்லை. சங்கிலியின் ஜுரமும் இறங்கவில்லை. சிறிது பிரக்ஞை மட்டும் வந்திருந்தது "இந்த மழையில்... என் வயல்...விதைத்த விதைகள்" என்ற வார்த்தைகள்தான் அவன் வாயினின்றும் ஓயாமல் வந்து கொண்டிருந்தன. அன்று பகலெல்லாம் மழை ஊற்றினது. நள்ளிரவில் குளம் உடைந்து விட்டதாக ஒருவன் ஓடிவந்தான். கடுஞ்ஜுரத்தில் காயும் சங்கிலியின் செவிகளில் இந்த வார்த்தைகள் எப்படியோ விழுந்து விட்டன. "என் வயல், நான் விதைத்த விதைகள்" என்று கேட்டுக் கொண்டே பரபரப்புடன் எழுந்தான் சங்கிலி. ஒருவரும் அவனுக்குப் பதில் அளிக்கவில்லை. ஓடிப் பாயும் வெள்ளத்தின் உறுமல் மட்டும் வெளியில் கேட்டது. "உனக்கிரக்கமில்லையா" என்று தொப்பென்று படுக்கையில் விழுந்தான் சங்கிலி. வறுமைக் கூண்டில் அடைபட்ட அவன் ஆவி அந்தக் கணமே விடுதலைபெற்றது.

★

எழிற்கு எவர் இணையே

ச.து.சு.யோகி

புவன ராணி புகை முகிற் புட்வை
உடுத்து வருவாள் ஒரோர் இடத்தில்
செம்பூச் சிற்றிலைச் சோலைகள் சிரிக்கும்

அந்தியின் முடிவில் அன்றோ ரிரவில்
காரில் நனைந்த ஆடையைக் கழற்றி
நிலவுப் பட்டினில் மீன்சரம் நிறைந்த
மேகலையோடும் மின்னி மறைந்தாள்!

நேற்று :

காற்றில் கட்லுடைட் கலைந்து துள்ளவும்
சேற்றுக் களரினில் மழைத்துளி தெளிக்கவும்
கரியதோ ராடைட்யிற் கண் மறைந்திருந்தாள்!

இன்று :

காரில் நீராடிக் கவின் பெறு வசந்த
வான் விற் சேலையின் வளமையில் மகிழ்வாள்
எவ்வகைச் சேலைதா னுயினுமென்
என்னுடை யன்னையின் எழிற் கெவரிணையே!

பாவத்தின் சின்னம்

கோமதி சுவாமிநாதன்

கிழக்கு வானத்தில் அப்போது தான், கொஞ்சம் கொஞ்சமாக ஒளி பரவிக்கொண்டிருந்தது. அந்த ஒளியைக்கண்டு உற்சாகமடைந்த புள்ளினங்களின் இனிய மதுர கீதம் செவிகளுக்கு இன்பரசமாய் இருந்தது. உடலிற்கும் இன்ப மளிப்பதுபோல், ஜிலுஜிலு வென்று காலைக் குளிர்காற்று என்மேல் உராய்ந்து சென்றது. அந்தக்காற்றில்தான் என்ன நறு மணம். பச்சைப் பசேரென்று கம்பளம் விரித்ததுபோன்ற நெல் வயல்களின் வழியாக வந்த அந்தக் காற்றில் இயற்கை மணம் மனோ கரமாகப் பரிமளித்தது.

இயற்கையின் சௌந்தர்யத்தை கிராமங்களில் தான் நன்ருக ரசிக்க முடியும். அதிலும் எங்கள் கிரா மம் இயற்கை அழகிற்கு மிகவும் பெயர்போனது. இயற்கைத்தேவி யின் இருப்பிடம் என்றுகூட எங் கள் ஊரை வர்ணிக்கலாம். இர ண்டு திசைகளில் வானத்தை அளாவிய மலைகள், கண்ணுக் கெட்டும் தூரம்வரை பச்சைப் பசேரென்ற வயல்கள். நெளிந்து நெளிந்து, பாம்புபோல், என்றைக் கும் வற்ருமல் செல்லும் நீர் ஓடை. இவைகளெல்லாம் ஒவ் வொரு ஆத்மாவையும் கவியாக மாற்றக்கூடிய சக்திவாய்ந்தவை. ஒரு கொடூரமான சம்பவத்தால் விரக்தியடைந்த நான், இந்த அற்புதமான அழகுள்ள, கிராமத் தை விட்டுப்போய் பதினைந்து வரு ஷங்களுக்குமேல் ஆகிவிட்டன. இன்றைக்கு அதற்கப்புரம் எங் கள் குடும்பத்தில் நடந்த எவ்வ ளவோ, இன்ப துன்பம் கலந்த சம்பவங்கள் கூட, என் மனதை மாற்றி என்னை ஊருக்குத் திரும் பும்படி செய்யவில்லை. திடீ ரென்று மனதை மாற்றிக் கொண்டு, ரங்கூனிலிருந்து நேரா கப் புறப்பட்ட நானும் என் மனைவியும், அன்று இரவு கிராமத் திற்கு வந்து சேர்ந்தோம். வீட் டிற்குள் நுழையும்போது இரவு பத்துமணிக்கு மேலாகிவிட்டது. இருட்டுக்காலம். தெருக்களில் கல கலப்பில்லை. பதினைந்து வருஷங் களுக்கு முன்னால், கலாசாலை விடுமுறையில் நான் வரும் ஒவ் வொரு சமயத்திலும், அன்பு ததும்ப வரவேற்கும் என் தகப்ப ஞர் இப்போது இல்லை. அவர் இந்த உலகத்திலிருந்து விடுதலை அடைந்து ஏழு வருஷங்கள் ஆகி விட்டன. அவர் ஸ்தானத்தில் என் மூத்த சகோதரன் தான் தன் குடும்பத்துடன் வீட்டில் இருந் தான்.

படுக்கையிலிருந்து எழுந்ததும், கீழ்ப்பக்கத்தின் ஜன்னலைத் திறந் தேன் (நான் படுத்திருந்த அறை மாடியிலிருந்தது) கீழ்வானம் அக் கினிச் சுவாலைபோல் செக்கச் செவேலென்றிருந்தது. சற்று தூரத்தில் நிர்மலமாய் ஓடிக் கொண்டிருந்த வாய்க்கால் ஜலத் தில் பிரதிபலித்த அந்த வர்ணம் இயற்கை தேவியின் சௌந்தர் யத்தை பன்மடங்கு அதிமாகக் காட்டியது. அரையில் வெளிச்சம் சரியாகப் பரவவில்லை. ஆகையால்

வடக்குப் பக்கத்திலுள்ள ஜன்னலைத் திறந்தேன். கண்ணுக்கெட்டும் தூரம்வரை ஒரே பசும் வயல்கள். அந்த வயல்களுக்கு நடுவில் ஆகாயத்தை அளாவும்படியான ஓர் புகைப்போக்கியுடன் கூடிய ஓர் ஆலை—மில்—கம்பீரமாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன். ஆம்! அது ஓர் ஓடு செய்யும் தொழிற்சாலை. நான் வீட்டை விட்டு வெளியேறிய சமயம், என் தகப்பனார் அதை நிர்மாணம் செய்ய நினைத்திருந்தார் என்று எனக்குத் தெரியும். பிறகு, அவர் இஷ்டம் பூர்த்தியாகி ஆலையும் நிர்மாணிக்கப்பட்டது என்று கடிதம் மூலமாகத் தெரிந்துகொண்டேன். அதை இப்போதுதான் நான் முதல்தடவையாகப் பார்த்தேன்.

என் இதயத்தை அமானுஷ்யமான ஏதோ ஒரு சக்தி அமுக்குவதுபோல் ஒருவித உணர்ச்சி ஏற்பட்டது. மறுபடியும் தலை நிமிர்ந்து வானளாவி நிற்கும் அந்தப் புகைப்போக்கியைப் பார்க்க எனக்கு தைரியமில்லை. ஏன்! அந்தப்புகைப் போக்கியும் ஆலையும், என்றும் அழியாத ஓர் மகத்தான பாபத்தை அஸ்திவாரமாகக் கொண்டிருந்ததால்தான். என் உள்ளம் குமுறியது. திரும்பவும் படுக்கையில் சாய்ந்து விட்டேன். என் சிந்தனை பின் நோக்கிப் பாய்ந்தது.

★

வைத்தியக்கல்லூரியில் படிப்பை முடித்துக்கொண்டு பட்டத்தையும் பெற்றுக் கொண்டு கிராமத்திற்கு வந்த புதிது. தொழிலை எங்கு ஆரம்பிப்பது என்ற முடிவிற்கு இன்னும் வரவில்லை. ஆகையால் சில ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டு வீட்டில் தான் இருந்தேன். பைத்திய நிவாரணத்திற்காக சில மருந்துகளின் சேர்க்கையை ஆராய்ச்சி செய்து 'இஞ்செக்ஷன்' முறையில் ஓர் வெற்றிகரமான முடிவிற்கு வந்திருந்தேன். அவ்வப்போது, என் தகப்பனாரிடம், என் அனுபவங்களையும், புதிய முறைகளையும் பற்றி சொல்லிக் கொண்டிருப்பேன். அவர் அதை ஊக்கத்துடன் கேட்பார். நான் நிறையச் சம்பாதித்துப் பார்க்கவேண்டுமென்று அவருக்கு அபிலாஷை. அவருக்கு இன்னுமொரு ஆசை உண்டு. எங்கள் கிராமத்தில் ஓர் வித அபூர்வக் களிமண் கிடைக்கும் அந்தக் களிமண் கிடைக்கும் இடத்திற்குப் பக்கத்தில் ஓடு தயாரிக்கும் ஓர் ஆலை நிர்மாணிக்கவேண்டுமென்று விரும்பினார். அதற்கு முதல் வேண்டியிருந்தது. நிலத்தில் சில வேலிகளை விற்க முயற்சித்த அவரை என் மூத்த சகோதரன் தடைசெய்தான். ஆகையால் நான் அமோகமாக சம்பாதிக்க ஆரம்பித்த பிறகு தன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள அவர் விரும்பியது இயல்புதான்.

எங்கள் வயல்களுக்குக் காவற்காரன் முனியன். அவன்குடும்பம் பரம்பரையாக, எங்கள் குடும்பத்தின் நிழலில் வளர்ந்துவந்தது. முனியனுக்கு சுமார் ஐம்பது வயதிருக்கும். குழந்தை குட்டிகள் இல்லை. தங்கமான குணமுள்ளவன். என்னைச் சிறுவயதிலெல்லாம் தூக்கிச் சுமந்தவன். என்பேரில் அமோகமான பிரீதி அவனுக்கு உண்டு.

ஒருநாள் என் அறையில் சில மருந்து சோதனைகள் நடத்திக் கொண்டிருந்தேன். அவசர அவசரமாக என் தகப்பனார் வந்தார்.

"கோபு ஏதோ பைத்திய நிவாரணத்திற்கு மருந்து கண்டு பிடித்திருக்கிறேன் என்றாயே? அதன் குணங்கள் என்ன?" என்றார். "யாருக்கப்பா சித்தப்பிரமை?" நானும் வருகிறேன். போய்ப் பார்க்கலாமா? என்றேன் ஆவலுடன். என் மருந்தைப் பரீட்சித்துப் பார்ப்பதில் எனக்கு அவ்வளவு ஆசை. "இன்னும் ஒருவருக்கும் சித்தப்பிரமை வரவில்லை. என் நண்பர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். சில மருந்துகள், எதிர் பார்த்ததிற்கு முற்றிலும் மாறான முடிவுகளுக்குக் கொண்டு போய் விடுகிறது என்றார். உன் பைத்திய மருந்தும், வியாதியை அதிக மாக்கிவிட்டால், உன் பெயர் கெட்டுவிடுமே என்பதற்காகத்தான் கேட்டேன்" என்றார்.

மருந்து ஷெல்பிலிருந்து ஓர் சிறு பாட்டிலை எடுத்து வந்தேன்! "அப்பா! இதுதான் அந்த மருந்து. கொடிய விஷம். யாருக்குமூளைக் கோளாறு இருக்கின்றதோ, அவர்களுக்கு இதை இரண்டு தடவை இஞ்செக்ஷன் செய்தால்போதும். உடனே குணம் காண்பிக்கும். ஆனால், புத்தி ஸ்வாதீனமாக உள்ளவர்களின் உடலில், ஒரு சொட்டு ஒருடம்ளர் ஜலத்துடன் சேர்ந்தால் கூட, உடனே நிவர்த்தி செய்ய முடியாத பைத்தியம் பிடித்து விடும்" என்று சொல்லிக் கொண்டே மருந்து பாட்டிலை, மறுபடியும் எடுத்த இடத்தில் வைத்தேன். நான் பாட்டிலை வைக்கும் வரை குறிப்பாகவே என்னைப் பார்த்துக் கொண்டிருந்த என் தகப்பனார் கீழே இறங்கிப் போய்விட்டார். நான் மறுபடியும் தீவிரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டேன்.

அன்றைக்கு மறுநாள், நகரத்தில் என் சினேகிதனுக்குத் திருமணம். ஆகையால் அன்று சாயங்காலம் கிராமத்தைவிட்டுப் புறப்பட்ட நான் இரண்டு தினங்களுக்குப்பிறகுதான் ஊர்திரும்ப முடிந்தது. இரண்டு நாட்களாய் ஒரே முழக்கத்திலும் ஜன சந்தடியிலும் சிக்கித்தவித்த எனக்கு, மாலையில் சற்று உலாவப் போனது எவ்வளவோ நிம்மதியாக இருந்தது.

முனியன் குடிசைக்கு சற்று தூரத்தில் இருக்கும் வரப்பின் மேல் சாவகாசமாக நடந்து போய்க்கொண்டிருந்தேன். முனியனைக் காணோம். ஒருவேளை நான் ஊரிலிருந்து திரும்பிவந்தது அவனுக்கு தெரியாமலிருக்கலாம்.

சற்று தூரம் போனதும், பின்னால் யாரோ வேகமாகத் துடர்ந்து வந்தாப்போல் தோன்றியது. திரும்பிப் பார்த்தேன். முனியனின் மனைவி அவசரம் அவசரமாக வந்துகொண்டிருந்தாள். "என்ன காத்தாயி! எங்கே இவ்வளவு அவசரமாகப் போகிறாய்?" என்றேன். நான் திரும்பிய உடனே அவள் கல்லாய் நின்று விட்டாள். "சாமி! உங்களைத் தேடித்தான் வாரேன். நேத்தியிலிருந்து என் புருஷனுக்கு புத்தி சரியில்லீங்க. வீட்டிலே ரொம்ப ரகளை பண்ணுது. காலைக் கையை கட்டிப் போட்டிருக்கு" என்றாள் தழதழத்த குரலில். அவள் குரலிலுள்ள நடுக்கம் அவளுடைய பொறுக்க முடியாத துக்கத்தை நிதர்சனமாகக் காண்பித்தது. என் மனதில் மின்னல் வேகத்தில் ஓர் யோசனை தோன்றியது. "காத்தாயி! பெரியசாமி (என் தகப்பனார்) கிட்டே சொன்னாயா?" என்றேன். "நேத்தே போயி சொன்னேனுங்கசாமி! அவரு சரியாக்காதிலே போட்டுக்கலே. அதிகமாக் குடிச்சிட்டு

வந்திருப்பான். இரண்டு நாளில் தன்னாலே சரியாய்ப் போயிடும்' என்று சொன்னாரு. அதனாலே தான் ஓங்க கிட்டே ஓடியாந்தேன்'' என்றாள். அவள் பேச்சை முடிக்கும்வரைகூட நான் காத்திருக்கவில்லை. வந்த வழியே திரும்பி காத்தாயி பின்தொடர முனியன் குடிசைக்குள் நுழைந்தேன்.

அங்கு கண்ட பரிதாபகரமான காக்ஷியை நான் என்றைக்கும் மறக்க முடியாது. கட்டப்பட்ட கால் கைகளுடன் கீழே புரண்டு கொண்டிருந்தான் முனியன் ஏதோ தாங்க முடியாத வேதனையால். அவன் வாய் புலம்பிக் கொண்டிருந்தது. அவன் முகத்திலும் நெற்றியிலும் நரம்புகள் புடைத்திருந்தன. என்னைக் கூட அவனால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஏதோ சம்பந்தமில்லா வார்த்தைகளை உளறிக் கொட்டினான்.

அவன் முகத்தில் ஏற்பட்டிருந்த கோளாறுகளைக் கண்டதும், அவன் மூளைக் கோளாறுக்கு காரணம் நான் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்த மருந்துதான் என்று தெரிந்தது. அப்போதுதான் இரண்டு நாட்களுக்கு முன், என் தகப்பனார் அந்த மருந்தின் குணங்களையும் நான் அந்த மருந்தை வைத்த இடத்தையும் தெரிந்து கொண்டது என் ஞாபகத்திற்கு வந்தது. காத்தாயிடம் சொல்லிக் கொள்ளாமல்கூட வீட்டிற்கு ஓடி வந்தேன். அப்போது என்னைப் பார்த்தவர்கள் நானே ஒரு பைத்தியக்காரன் என்று எண்ணியிருப்பார்கள்.

என் தகப்பனார் தனியாக அவர் அறையில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். ''அப்பா! முனியனுக்கு எதற்காக நான் கண்டு பிடித்த பைத்திய நிவாரண மருந்தைக் கொடுத்தீர்கள்?'' என்று அதிகாரம் த்வனிக்கும் குரலுடன் கேட்டேன். என் குரலைக் கேட்ட அவர் பயந்திருக்க வேண்டும். அவர் முகத்தில் பயங்கரமான மாறுதல்கள் ஏற்பட்டன. தூக்கு மேடையில் நிற்கும் கைதியின் முகம் போலிருந்தது அவர் முகம். கால்கள் நடுங்க அவர் எழுந்திருந்து அறையின் கதவை மூடி, உள் பக்கம் தாழ்ப்பாள் போட்டு விட்டு வந்தார். அவர் உடல் நடுக்கம் நன்றாகத் தெரிந்தது. ''கோபு, இந்த விஷயத்தை ஒருவரிடமும் சொல்வதில்லை' என்று சத்தியம் செய்'' என்றார். அவர் குரலில் அதீதமான பயத்தின் உணர்ச்சிகலந்திருந்தது. ''விஷயத்தைச் சொல்லுங்கள்'' என்றேன். என் கண்டிப்பான வார்த்தைகளைக் கேட்டு அவர் கிடுகிடுத்துப் போய் விட்டார்.

''கோபு, பண ஆசைதான் என்னை இந்தப் பாதகத்தைச் செய்ய தூண்டியது. அதன் வலையில் நான் விழுந்து விட்டேன். மூன்று நாட்களுக்கு முன்பாக முனியன் ரகசியமாக என்னிடம் வந்தான். 'சாமி, அந்த இரட்டைப் பனைமரத்தடியில், ஓர் புதையல் ஆம்பிட்டதுங்க. அது நம்ம வயலைச் சேர்ந்த இடமாகையாலே, அதை அப்படியே எடுத்துக் கொண்டு வந்துட்டேனுங்க' என்று காண்பித்தான் ஓர் பழைய செப்புப் பானையை. அதில் பூரா வும் தங்கப்பாளங்கள் நிரம்பியிருந்தன. அந்தப்பானையை ஆவலுடன் கையில் வாங்கப் போனேன். முனியன் அந்தப் பானையை என் கையில் கொடுக்க முன்வரவில்லை. ''சாமி இந்தப் புதையலை உங்கள் நிலத்திலே நான்

கண்டு பிடிச்சேன்; நான் ஞாயத்துக்குப் பயந்தவன், அதனாலே இது ரெண்டு பேருக்கும் பொது. உங்களுக்குப் பாதி, எனக்குப் பாதி பங்கு வைத்துக் கொள்வோம்'' என்றான்.

பேராசை பிடித்த என் மனது அவனுக்குப் பாதிப் புதையலைக் கொடுக்க மறுத்தது. அதே வினாடியில் என் மனதில் கபடம் நிறைந்ததோர் யோசனை தோன்றியது. குரலை உற்சாகம் நிறைந்ததாய் மாற்றிக் கொண்டு, "முனியா! நீ கண்டு பிடித்து எடுத்ததால், அந்தப் புதையல் உனக்கேதான் சொந்தம். ஒரு துளிகூட எனக்கு வேண்டாம். நானும் தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன்தான், பானையைப் பார்க்க வேண்டும் என்பதற்காகக் கையை நீட்டினேனே தவிர வேறல்ல! அந்தப் பானையை இன்றைக்கும், நாளைக்கும் நீ எடுத்த இடத்திலேயே புதைத்து வை. ஜமாபந்திக்காக சர்க்கார் அதிகாரிகள் இன்றும் நாளையும் முகாம் செய்யப் போகிறார்கள். அவர்களுக்குப் புதையல் விஷயம் காற்று வாக்கில் காதில் விழுந்தால்கூட உனக்கு ஒரு செப்புச் சல்லி கிடைக்காமல் போய் விடும். ஆகையால் இந்தப் பானையை, பனைமரத்தடியிலேயே மறைத்து வைத்துவிட்டு நாளைக் காலையில் இங்கு வா'' என்றேன். அவன் என்னை நம்பி விட்டான். அவனிடமிருந்து எப்படியாவது அந்தப் புதையல் பூராவையும் அபகரிக்கச் சதி செய்து கொண்டிருந்த நான், உடனே உன்னிடம் வந்து அந்த மருந்தைப்பற்றிய விஷயத்தைத் தெரிந்து கொண்டேன்.''

சற்று பேச்சை நிறுத்தி சிரம பரிகாரம் செய்து கொண்டு மறுபடியும் பேச்சைத் தொடர்ந்தார். "அன்று இரவு முழுதும், அந்தப் புதையலைப் பற்றியும், நான் நிர்மாணிக்கத் திட்டமிட்டிருக்கும் ஓடு செய்யும் ஆலையைப் பற்றியும் கனவு கண்டு கொண்டிருந்தேன். நீ அன்று மாலை நகரத்திற்குப் போய் விட்டாய். மறு நாள் காலை முனியன் வந்தான். அவன் வருவதற்கு முன், ஒரு டம்ளர் மோரில், நான்கு அல்லது ஐந்து சொட்டு, நீ காண்பித்த மருந்தை ஊற்றித் தயாராய் வைத்திருந்தேன். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு சமயோஜிதமாக அந்த மோரை அவனுக்குக் கொடுத்தேன். சில நிமிஷங்களுக்குள்ளாகவே, அவன் பிதற்ற ஆரம்பித்தான்.

அவன் பிதற்றல் சற்று அதிகமாகப் போகவும் 'காலை வேளையிலேயே குடித்து விட்டு வந்திருக்கிறான்' என்ற காரணத்தைச் சொல்லி. உன் அண்ணாவைக் கொண்டு, அவனை வீட்டிற்கு அனுப்பிவைத்தேன். ஒரு மணி நேரத்தில் பனை மரத்தடியில் இருந்த பானை, பத்திரமாக என் இரும்புப்பெட்டிக்குள் வந்துவிட்டது.

சற்று பேச்சை நிறுத்தினார். அவர் குரல் தழதழத்தது. என் கோபமும் ஆத்திரமும் அடக்க முடியாத எல்லையை அடைந்தது. நிதானம் தவறி என்னென்னவோ வாயில் வந்தபடி யெல்லாம் கத்தி விட்டேன். சற்றும் எதிர்பார்க்காமல் என் தகப்பனார் என் காலடியில் வீழ்ந்து விட்டார். "கோபு என்னைக் காப்பாற்று. ஆசைக் கோளாறினால் நான் இப்பாபத்தைச் செய்து விட்டேன். உன் தந்தை ஜெயிலுக்குப் போவது உனக்குச் சம்மதமா?' என்று கெஞ்சினார்.

"ஆசையென்ற அரக்கனுக்கு அடிமையாகிய நீர், இந்தக் கண முதல், எனக்குத் தந்தையில்லை. பரம்பரையாக நமக்கு உழைத்த ஒருவனுடைய உயிருக்கே உலை வைத்த உம் உறவு எனக்கு வேண்டாம். உம்மையும் மறந்தேன். உம் கொலைபாதகத்தையும் மறந்தேன். நான் உம் மகனல்ல" என்று மடமட வென்று சொல்லி விட்டு அப்படியே வீட்டை விட்டுக் கிளம்பி விட்டேன். கட்டியிருந்த ஒரே வேஷ்டியுடன் கிளம்பிய நான், பல இடங்களில் சுற்றியலைந்து ரங்கூனில் ஓர் உத்தியோகத்தில் அமர்ந்தேன்.

யார்மூலமாகவோ, என் விலாசத்தைத் தெரிந்து கொண்ட என் தமையன், நான்கைந்து வருஷங்களுக்குப் பிறகு ஓர் கடிதம் எழுதினான். அப்பாவும், அவனும், புதிதாக ஓர் ஆலை நிர்மாணம் செய்திருப்பதாகவும், பண்ணைக்கார முனியன் மூளைக் கோளாறினாலேயே இறந்து போய் விட்டதாகவும் எழுதியிருந்தான். பாவம்! என் தமையனுக்கு அப்பாவின் கரரியங்கள் ஒன்றும் தெரியாது. அந்தக் கடிதத்திற்கு நான் பதில் எழுதவில்லை. இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகு, தகப்பனார் இறந்துபோய் விட்டதாக ஒரு தந்தி அனுப்பியிருந்தான். அதற்கு மாத்திரம், சாதாரணமாக ஓர் பதில் போட்டிருந்தேன். அதில்தான், நான் சமீபத்தில் திருமணம் செய்து கொண்டதை அவனுக்குத் தெரிவித்திருந்தேன்.

★

கதவைத் தட்டின சப்தம் என் சிந்தனைக் கோர்வையைக் கலைத்தது. படுக்கையிலிருந்து எழுந்து கதவைத் திறந்தேன். என் மனைவி உள்ளே நுழைந்தாள். "உங்கள் கிராமம், வெகு அழகாக இருக்கின்றதே. இரண்டு மாத லீவு பூராவையும் நாம் இங்கே தான் கழிக்க வேண்டும்" என்றாள் உற்சாகத்துடன். "இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள், நாம் இந்த கிராமத்தை விட்டு இருபது மைல் தாண்டியிருப்போம்." என்றேன். அவள் நான் சொன்னதைப் புரிந்து கொள்ளாமல் விழித்தாள். "கமலா மூட்டை முடிச்சுகளை அவிழ்த்து விடாதே. நாம் இப்போதே புறப்பட வேண்டும்." என்றேன். கமலா என் முகத்தை உற்று நோக்கினாள். அவள் பார்வையைத் தவிர்க்கும் பொருட்டு வேறு பக்கமாகத் திரும்பினேன். காலைக் கதிரவனின் ஒளியில் பாவத்தின் சின்னம் — அழியாதகோபுரம் — அதுதான் — அந்த ஓடு செய்யும் ஆலையின் வானை அளாவிய புகை போக்கி என்னைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. விடுவிடென்று கமலாவைக் கூட்டிக் கொண்டு கீழே வந்தேன்.

"இரவுதானே வந்தாய்? அதற்குள் என்ன அவசரம்? நம் ஆலையை எல்லாம் சுற்றிப் பார்க்க வேண்டாமா?" என்றான் என் சகோதரன். அந்த வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளாதவன் போல் பிரயாணத்திற்குத் தயாராக உடுப்புகளை அணிந்து கொண்டேன். என் பிடிவாதம் அவனுக்கு நன்றாகத் தெரியும். ஏழுமணிக்குப்புறப்படும் காரில், நானும் கமலாவும் புறப்பட்டு விட்டோம். வழியில் இரண்டு மரங்களுக்கு ஊடேயுள்ள இடை வெளி வழியாக அந்தப் பாவத்தின் சின்னம் என் கண்களை உறுத்திக் கொண்டே மறைந்தது.

197245

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ. 5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ. 2,54,72,000
டிபாசிட்டுகள் 31–12–1944ல் இருந்தபடி	...	ரூ. 94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B. E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸ்ர்ஸ, பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் :: மதராஸ்

The Fashionable Furnishing Fabrics
DRESS TEXTILES
Ladies', Gents', Children's, Underwear Sport Shirts etc.,
S. BEEMIAH CHETTY,
"WHITE SHOP" Coimbatore.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்
★
ஆர்யவைத்தியர்
பி. வி. ராமவாரியர்
ஆர்யவைத்ய பார்மசி
திருச்சி ரோடு :: கோயமுத்தூர்
★
கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,
181. Oppanakara Street
Coimbatore.
Phone No. 155. Estd., 1921.
Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.
For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

சந்தாதாரர்களுக்கு

வசந்தத்திற்கு அனுப்பும் செக்குகள், மணியார்டர், போஸ்டல் ஆர்டர் முதலியவைகளில் 'மானேஜர், வசந்தம்' என்று குறிப்பிடவேண்டும்.
மானேஜர்:
வசந்தம், 4/12A திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.

P.A.R. சில்
பிரசித்தமானது
ராஜா
218A
139. BOX
P.A. ராஜ செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
குமரன்

ஜூபிடர் பிக்சர்ஸ்

Lessees of:

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு தென் இந்தியாவிலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த அநேகம் தமிழ்ப் படங்களைத் தயாரித்த

இணையற்ற ஸ்டுடியோ!

★

இப்பொழுது தயாராகிவரும் படங்கள்:

ஸ்ரீ முருகன்
வித்தியாபதி
ராஜகுமாரி
விப்ரநாராயண
அபிமன்யு
கிருஷ்ண விஜயம் — ஜூபிடர் பிக்சர்ஸ்

குண்டலகேசி — K. S. S. பிக்சர்ஸ்

உஷா — ஸ்ரீ கார்த்திகேயா பிக்சர்ஸ்

சுதர்சன் — ராயல் டாக்கி டிஸ்டிரிபுயூட்டர்ஸ்

சண்பகவல்லி — ஸ்ரீ கந்தர் பிலிம்ஸ்

A. P., MADRAS.